Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 25 ஞாயிற்றுக்கிழமை (08.06.2014) பக்கங்கள் 20 ஓசை - 250

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C/3690)

## வயிற்றோட்டம் பரவும் சாத்தியம்

### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

காய்ச்சல், இருமல், தடிமன் அறிகுறிகளுடன், நாடு முழுவதும் வயிற்றோட்டம் பரவக்கூடிய அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக சிறு பிள்ளைகளிடையே பரவலாக இந்த நோய்த் தன்மை பரவுகின்றமை பதிவாகியுள்ளதாக அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தின் வைத்திய நிபுணர் கபில ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட நோய் அறிகுறிகளுடன் காய்ச்சல் ஏற்படுமாயின் உடனடியாக அருகேயுள்ள வைத்தியர் ஒருவரை நாடி உரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இந்த நோய்த் தன்மை ஏற்படுமாயின், புரதம் அடங்கிய போஷாக்குள்ள உணவு வகைகளையும், நீர் ஆகாரங்களையும் அதிகளவில் உட்கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## சமையலறையில் பதுங்குகுழி பருத்தித்துறையில் கண்டுபிடிப்பு

(பருத்தித்துறை)


யாழ். பருத்தித்துறைப் பகுதியில் உள்ள விநாயகர் முதலியார் வீதியில் அமைந்திருந்த பயன்பாட்டில் இருந்த வீடொன்றின் சமயலறை புகைக் கூண்டின் கீழ் இருந்து பதுங்குகுழி ஒன்றினை பருத்தித்துறைப் பொலிஸார் நேற்று முன்தினம் கண்டுபிடித்துள்ளனர்.

இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள குறித்த பதுங்குகுழி தமிழீழ விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்டிருக்காலம் என்று நம்பப்படுகின்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள விநாயகர் முதலியார் வீதியில் இருந்த நடராஜா குணசீலன் என்பவருடைய

19 ஆம் பக்கம் பார்க்க





# 13 ஆவது திருத்தச் சட்டத்தை இறுதித்தீர்வாக ஏற்கமுடியாது

## என்கிறார் மாவை

13ஆவது திருத்தச்சட்டம் தமிழர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு அல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகவும், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதாகவும், அரசாங்கம் பலமுறை இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளது.

13ஆவது திருத்தச்சட்டம் இந்திய- இலங்கை உடன்பாட்டுக்கமையவே உருவாக்கப்பட்டது.

அதை நடைமுறைப்படுத்துவது குறித்து அவர்களே முடிவெடுக்க வேண்டும்.

நாங்கள் 2011ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் நாள் ஒரு தீர்வு யோசனை வரைவை இலங்கை அரசாங்கத்திடம் கையளித்திருந்தோம்.

13ஆவது திருத்தச்சட்டம் எமது நிலைப்பாட்டை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை.

அரசாங்கத்தின் இந்த நிராகரிப்பை அடுத்து இந்தியா என்ன செய்யப் போகிறது?

நாங்கள் 13ஆவது திருத்தச்சட்டம் தேசியப் பிரச்சினைக்கான இறுதியான தீர்வாக இருக்க முடியாது என்பதை இந்தியாவுக்கு விளங்கப் படுத்தியுள்ளோம்.

அதன் பின்னர் அவர்கள் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்ல வேண்டும் என்று கூறினர்.

13ஆவது திருத்தச்சட்டம், எரியும் தமிழர் பிரச்சினைக்கு ஒரு இறுதியான தீர்வு அல்ல

19 ஆம் பக்கம் பார்க்க

## உண்மை கண்டறியும் விசாரணை; ஒத்துழைக்க வேண்டும் இலங்கை

### வலியுறுத்துகிறார் நவிப்பிள்ளை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது நடந்ததாக கூறப்படும் மீறல்கள் குறித்து நடத்தப்படும் நம்பகமான உண்மையை கண்டறியும் சர்வதேச விசாரணைக்களுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெனிவாவில் வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 26ஆவது அமர்வில், ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தொடக்க உரை நிகழ்த்தவுள்ளார்.

அவரது இந்த உரையின் ஆரம்ப வரைவு நேற்று முன்தினம் ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த உரையிலேயே இலங்கையிடம் அவர் இந்த வேண்டுகோளை விடுக்கவுள்ளது பற்றிய விபரம் இடம்பெற்றுள்ளது.



அவரது உரையில், இலங்கையில் போர் முடிவுக்கு வந்து கடந்த மாதத்துடன் ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், தீவிரவாதம் மற்றும் மோதல்களால் ஏற்பட்ட காயங்கள் இன்னமும் ஆறவில்லை

19 ஆம் பக்கம் பார்க்க

## சந்தேகத்தின் பேரில் கோப்பாய் வாசி கைது

சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவர் விஷேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

சுண்டுக்குழி பகுதியில் வைத்து குறித்த நபர் நேற்றுக் காலை விஷேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த நபர் சுண்டுக்குழி பகுதியில் நின்றதுடன், விஷேட அதிரடிப்படைப் பொலிஸாரைக் கண்டு ஓட முயற்சித்துள்ளார்.

அதன்போது, குறித்த நபரை பின்தொடர்ந்த விஷேட அதிரடிப் படைப்பொலிஸார்

19 ஆம் பக்கம் பார்க்க

## 42 இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் கைது

இலங்கை கடல் எல்லையினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 42 இந்திய மீனவர்களை தலைமன்னார் கடற்பரப்பில் நேற்றுமாலை கடற்படையினர் கைது செய்துள்ளதாக மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் வி.எஸ். மெராண்டா தெரிவித்தார்.

தலைமன்னார் கடற்பரப்பினுள் 8 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட 42 இந்திய மீனவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளராக ஜோர்தான் இளவரசர் நியமனம்

### செயலர் பான்.கீ மூன் பரிந்துரை

ஐ.நா. மனித உரிமை ஆணையாளராக ஜோர்தான் நாட்டுத் தூதுவர் இளவரசர் சையிட் அல் ஹுசேனை நியமிக்கவுள்ளதாக ஐ.நா.பொதுச்செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம், வரும் ஓகஸ்ட் மாதம் முடிவடையவுள்ளது.

இந்தநிலையிலேயே புதிய ஆணையாளராக இளவரசர் சையிட் அல் ஹுசேனை நியமிக்கவுள்ளதாக ஐ.நா. பொதுசெயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.



இளவரசர் சையிட் அல் ஹுசேன், நீண்டகாலம் இராஜதந்திரியாகப் பணியாற்றியவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## 12 இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்பரப்பில் கைது

(கொழும்பு)

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் 12 இலங்கை மீனவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ள தாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த 12 மீனவர்களும் இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட வேளை இந்தியக் கரையோர பாதுகாப்புக் கப்பலான அபிஷேக் இவர்களை அடையாளம் காட்டியுள்ளது.

சென்னையின் கிழக்குப்

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்



குருபெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

# திருட்டை தடுப்பது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் அறிவிப்பு

(சாவகச்சேரி)

பொது மக்கள் தமது சொத்துக்கள் திருடப்படுவதை தடுக்க விழிப்பாக செயற்பட வேண்டும் என சாவகச்சேரி பொலிஸார் ஒலி பெருக்கி மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார்கள்.

நேற்று ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட பொலிஸ் வாகனம் ஒன்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களுக்கும் சென்று இந்த அறிவித்தலை மேற்கொண்டது.

பொதுமக்கள் தமது சொத்துக்கள், பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்க எவ்வாறு செயற்பட வேண்டும் எவற்றை செய்ய வேண்டும் என்று மிகத் தெளிவான அறிவித்தல்களை பொலிஸார் மக்களுக்கு வழங்கினர்.

வீடுகளைப் பூட்டி பெறுமதியான பொருட்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பிலும் இப்பிரதேசங்களில் இரவுநேரத்தில் நடைபெறும் திருட்டுக்கள் தொடர்பில் அதிகம் விழிப்பாக செயற்படுமாறும் பொலிஸாருக்கு விரைவாக தகவல்களை வழங்குவதன் மூலம் களவைத் தடுக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டது.

(90,இ)

## வெள்ளோட்டம்

கோண்டாவில் உப்புமடம் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய மஞ்ச வெள்ளோட்ட விழா இன்று இடம்பெறுகின்றது. பிற்பகல் 2 மணியளவில் மஞ்ச வெள்ளோட்டம் இடம்பெறுவதுடன் மஞ்சத் திருவிழாவும் இன்று இடம்பெறுகின்றது.

# பழைய மாணவர்களுக்கான விசேட கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120 ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் தொடர்பான விசேட கூட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு கல்லூரியின் கந்தையா உபாத்தியாயர் அரங்கில் நடைபெறவுள்ளது.

120 ஆவது அகவையில் காலடி வைக்கும் பாடசாலையின் ஆண்டுவிழாவை சிறப்பான முறையில் ஒழுங்கமைப்பதற்காகவே இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஸ்கந்தாவில் கல்வி பயின்ற அனைத்துப் பழைய மாணவர்களும் தவறாது கூட்டத்தில் கலந்து விழாவை சிறப்புற அமைய தங்களின் ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு பழைய மாணவர் தாய்ச் சங்கத்தின் செயலாளர் லயன் சி.ஹரிகரன் அறிவித்துள்ளார்.

# மதுப்பிரியர்களின் அட்டகாசம் நவாலியில் அதிகரிப்பு

நவாலி ஞானவைரவர் ஆலயத்தடியில் இரவு வேளைகளில் மதுப்பிரியர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இவர்கள் மாலை 7 மணிக்குப் பின்னர் மக்கள் செல்லும் பிரதான வீதிகளிலும் ஆலயப்பகுதியிலும் இருந்து மதுவை அருந்திவிட்டு அட்டகாசம் புரிவதால் இக்குடியிருப்பில் உள்ள மக்களும் வீதியால் செல்லும் மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மதுப்பிரியர்கள் தகாத வார்த்தைப் பிரியோகங்களை பயன்படுத்துவதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடு பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர். (104)

# சமுர்த்தி உதவிபெறும் மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு புலமைப்பரிசில்

## சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் சமுர்த்தி உதவிபெறும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக பிரதேசத்தில் உள்ள 39 மாணவர்களுக்கு 3,37,800 ரூபாவை புலமைப்பரிசில் நிதியாகவே வழங்குகின்றது.

இச் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்ற கூட்டம் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் புலமைப் பரிசில் தொடர்பில் தீர்மானிக்கப் பட்டது. அத்துடன் சமுர்த்தி உதவிபெறும் க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 18 மாணவர்களக்கு 2,16,000 ரூபாவும் க.பொ.த சா.தாரணதர வகுப்பில் கல்வி கற்கும் 5 மாணவர்களுக்கு 45,000 ரூபாவும் தரம் 10 தரம், 8, 9 வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 76,800 ரூபாவும் புலமைப்பரிசில் பணமாக வழங்கப்படவுள்ளது. 5 குடும் பங்களுக்கு 30,000 ரூபா வீதம் 1,50,000 ரூபாவும்,

புற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ள மாணவியொருவரின் வைத்தியச்செலவுக்கு 16,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கொடிதின சேகரிப்பு மூலம் 30,000 ரூபாவுக்குரியதாக நிதி சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# பிடாரி அம்மன் ஆலய வேள்வித்திருவிழா

நயினாதீவு தில்லைவெளி அருள்மிகு ஸ்ரீ பிடாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்வித் திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் வேள்வித் தினத்தையொட்டி விசேட உற்சவங்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெற்றுவருகின்றன.

இந்த பத்து தினங்கள் அம்பாளுக்கு விசேட பூசை வழிபாடுகள் அபிஷேகங்கள் என்பன நடைபெற்று எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை மூல மூர்த்திக்கு 108 சங்குகளால் அபிஷேகங்கள் நடை பெற்று அதன்பின் காத்தவராயன் மடையும் இடம்பெற்று சுவாமிக்கு திருவூஞ்சல் அடியார்களுக்கு நூல் கட்டுதல் என்பன இடம்பெறவுள்ளதுடன் இத் தினங்களில் அன்னதானம் வழங்கப்படும். (05)

# பயிற்சிப் பட்டறை

இலங்கைக்கான அவுஸ்ரேலிய தூதரகத்தின் ஏற்பாட்டில் சட்டவிரோதமாக படகில் அவுஸ்ரேலியா செல்லும் நடவடிக்கைகயை தடுப்பது குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் 2 மணி வரை யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

# பொதுநோக்கு மண்டபம் வேண்டும் நவாலி வாழ் மக்கள் கோரிக்கை;

வலி.தென்மேற்கு பிரதேசத்திற்கு உட்பட்ட நவாலியில் மக்கள் பயன்பாட்டிற்கான பொது நோக்கு மண்டபம், நூலகம் போன்றன இல்லாத நிலை குறித்து யாழ்.மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் அவர்களின் கவனத்திற்கு பொது அமைப்பு ஒன்று. கொண்டு வந்துள்ளது.

நவாலி பிரதேசமானது நவாலி வடக்கு, நாவலி கிழக்கு, நவாலி தெற்கு என மூன்று கிராம அலுவலர் பிரிவினைக் கொண்டது.

2400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட நவாலி பிரதேசத்தில் பொதுநோக்கு மண்டபம் நூலக மண்டபம் மற்றும் சிறுவர் விளையாட்டு திடலை அமைத்து தருமாறு மாவட்ட ஒருங்கிணைப்பாளரை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (92)

அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 262
திகதி - 2014.06.06
வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள் / ஆங்கில எழுத்து

08 10 26 62 V

பரிசுத் தொகை ரூபா. 20,736,240/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 03 | 150,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 215 | 215,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 378 | 378,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9185 | 551,100/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4823 | 192,920/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 120158 | 2,403,160/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17653 | 353,060/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 20,736,240/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,243,240/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 20,971,520/-

2014.06.10ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3698)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருவண்ணை நகர் கில்னர் ஒழுங்கை அருள்மிகு மகாமாரி அம்பாள் ஆலய மஹோற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் பிற்பகல் 4 மணிக்கு தேர் உற்சவமும் 20 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு தீர்த் தோற்சவமும் 21 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

# பொதுக் கூட்டமும் நெறியாளர் சபைத் தெரிவும்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் புலோலி ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தயானனின் தலைமையில் நடைபெற்றது.

நெறியாளர் சபை உறுப்பினர்களாக தலைவர் எம்.ஜெகதேவன், உபதலைவர் பீ.அல்லின், செயலாளர் எஸ்.ஜனார்தனன் நெறியாளர் சபை உறுப்பினர்கள் வைத்தியகலாநிதி எஸ்.சறோஜினி தேவி (கால்நடை வைத்திய அதிகாரி), எஸ்.ஜெயராஜா, எஸ்.ஈஸ்வரன், எஸ்.றஜீந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (01)

## சிறு விளம்பரங்கள்

### வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை வருகை தரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும், குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். தொ.பே-0710854068.

□ □ □ □ □

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000.00-35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். தொ.பே-0775964299 (R/348)

□ □ □ □ □


### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

# பாங்காக நீராவியடி அமர்ந்து பக்தர்களைக் காப்பவனே!



ஓங்கார ரூபனே! கணபதியே! நாம் கைதொழுதோம்!
ஓம் சக்திமைந்தனே! மாம்பழம் பெற்று மகிழ்ந்தவனே!
ஆங்காரம் போக்கியே எமக்கு ஆறுதல் தந்திடுவாய்!
ஆனைமுகத்தோனே! திருமிகு பானை வயிற்றோனே!
பாங்காக நீராவியடி அமர்ந்து பக்தர்களைக் காப்பவனே!
பண்ணோடு இசைபாடி உன் பாதமலர் பணிந்தோமே
ரீங்காரமிடும் வண்டுபோலச் சுற்றிச்சுற்றி வணங்கினோம்
நாம் கான நல்லதொரு காட்சி தருவாய் சரணம் ஐயா

ஸ்ரீ ஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய ஏழாம் நாள் திரு விழா இன்றாகும்.

- சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன் -

# நீண்டகாலமாக திருத்தப்படாத வீதியை

# புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை



(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் அமைந்துள்ள குழந்தையேசு ஆலயத்துக்கு அருகாகச் செல்லும் மடத்தடி வீதியானது நீண்டகாலமாக புனரமைக் கப்படாத நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதியில் உள்ள மதகும் உடைந்து போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி இந்த வீதியால் பயணத்தை மேற்கொள்ளும் வாகன சாரதிகள் மற்றும் பாதசாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தமது வாகனங்களில் பழுதுகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் அந்த வீதிக்கு அருகிலுள்ள தேவரிக்குளம் அசுத்தமடைந்து சேறுபடிந்த நிலையில் குளத்தின் நீர் சுகாதாரமற்றுக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்தப் பகுதிகளில் நோய்த் தொற்றுக்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் நோய் ஏற்படுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இந்த வீதியை புனர மைப்பதுடன் குளத்தினையும் சுத்தப் படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை அரச சாரதிகள் சங்க யாழ்ப்பாணக் கிளையின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் பரிவர்த்தனை நிலைய முன் வீதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, நிரந்தர சேவையில் உள்ள அரச சாரதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். புதிதாக இணைய விரும்பும் சாரதிகளும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (54)

## வீதிப் புனரமைப்பு

(வேலணை)

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்திற்குச் செல்லும் பிரதான வீதியானது தற்பொழுது மாகா நிறுவனத்தினரது காண்காணிப்பில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

பழைய வீதிகளின் இருபக்கங்களும் பாரிய இயந்திரங்கள் மூலமாக இடித்து ஆழப்படுத்தி யாழ்ப்பாணத் திற்கு அப்பால் இருந்து வாகனங்கள் மூலமாக கற்கள் கொண்டுவரப்பட்டு வீதி அகலப்படுத்தி திருத்தம் செய்யப்பட்டு வருவதுடன் வீதியின் நடுவே இருந்த பழைய மதகு அழிக்கப்பட்டு புதிய மதகுகள் அமைக்கப்பட்டு வீதி புனரமைக் கப்படுகின்றது.

மேலும் சிலமாதங்களில் வீதி செப்பனிடப் பட்ட பின்னர் பொது மக்களினது முழுமையான பாவனைக்கு கையளிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# நூல் வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்




(யாழ்ப்பாணம்)

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் மன்றம் நடாத்திய முத்தமிழ் விழாவும் "பத்திரிசியார் ஏற்றிய பாஸ்கா ஒளி" என்ற நூல் வெளியீடும் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலா பூஷணம் அன்ரனி பாலதாஸ் கலந்து கொண்டார். பிரதம விருந்தினர் கல்லூரிச் சமூகத்தினரால் "கலைத் தகழி" என்ற பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். இவ் விழாவில் பழைய மாணவரும் மூத்த கலைஞருமாகிய பாலதாஸ் அண்ணாவியார் கௌரவிக்கப்பட்டமை பாராட்டுக்குரியது. (48)

# சக்குப்பிடிச்ச பணியாரத்தைக் காவிக்கொண்டு கலையாடிகளும் குறிசொல்லிகளும்...




'சக்குப்பிடிச்ச பணியாரத்தை' மோழக்குக் குடுத்திருக்கிறா ஜெயலலிதா அக்கா. (அல்லது தமிழகத்தின் அம்மா அல்லது சீமானின் ஈழத்தாய்.)

'இலங்கைத் தமிழர்கள் வாழும் பகுதிகளைப் பிரித்து தனி ஈழம் அமைக்க இலங்கைத் தமிழர்களின் மத்தியிலும் புலம் பெயர்ந்த தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்தக்கோரி ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா தீர்மானம் கொண்டு வரவேணும்' எண்டு இந்தியாவின்ர புதிய பிரதமர் நரேந்திர மோழயிட்ட கேட்டிருக்கிறார் ஜெயா அக்கா.

'இதொரு சக்குப் பிடிச்ச பணியாரம்' எண்டு மோழக்குத் தெரியும். எண்டாலும் அவர் மறுப்புச் சொல்லேல்ல. 'பாக்கிறன், செய்யிறன்' எண்ட கணக்கில ஜெயாக்காவைச் சமாளிச்சு ஆளை அனுப்பியிருக்கிறார்.

ஆனால், இந்தச் சக்குப் பிடிச்ச பணியாரத்தைத் திருப்பிச் சுட்டுக்கொண்டிருக்கிறார் வைகோ. அப்பிடியே தமிழ் ஊடகங்கள் எல்லாமே திருப்பித் திருப்பி இதைச் சலிக்காமல் சுட்டுக்கொண்டிருக்குதுகள்.

இப்பிடி அடிக்கடி சுட்ட பணியாரத்தையே திருப்பித் திருப்பிச் சுடுகிற பழக்கம் தமிழர்களுக்கு ஒரு வழமையாகிட்டுது.

தமிழீழத்துக்கு பொது வாக்கெடுப்பு நடத்தோணும் எண்டு சொல்லுவினம். தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு சரியாக நடக்கோணும் என்பினம். நாடு பிரிந்து செல்ல அனுமதிக்கோணும் என்பினம்.

இப்படி அரைச்ச மாவை அரைக்கிறதிலையும் பிழிஞ்ச தேங்காய்பூவைத் திரும்பப் பிழியிறதிலையும் தமிழாக்களுக்கு நிகர் வேற ஆருமில்லை.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வைச்சு எத்தினையோ தேர்தலை நடத்திட்டினம்.

வடக்குக் கிழக்கு இணைப்பை வைச்சு பல ஆண்டுகளை ஓட்டிட்டினம்.

'சமஸ்டி, சுயாட்சி' எண்ட ரண்டு சொல்லை வைச்சு நாலு தலை முறை காலம் கடத்திட்டுது.

உள்ளக சுயநிர்ணய உரிமை – வெளியக சுயநிர்ணய உரிமை எண்டதை வைச்சு பத்துப்பன்னிரண்டு நாடுகளுக்கு பயணம் போய் வந்தாச்சு.

கடைசீல இப்ப 13 ஆவது திருத்தச்சட்டத்தில வந்து நிக்குது. இதுதான் – இந்தப் 13 தான் இப்ப சோறு போடுது பலருக்கும்.

இதுக்குள்ள அடிக்கடி துடிச்சுப் பதைச்சு எழும்பி இந்த மாதிரிச் சீமானோ, வைகோவோ, நெடுமாறனனோ, உருத்திரகுமாரனோ, கருணாநிதியோ தமிழீழத்தைப் பற்றிக் கதைப்பினம்.

தமிழீழத்துக்காக கருணாநிதியே பல தடவை உயிரைக் குடுத்தார். நெடுமாறன் அதைவிடப் பல தடவை உயிர் குடுத்திருக்கிறார். இடையில வைகோ, சீமான், திருமாவளவன்.... எண்டு ஒரு பெரிய அணி தமிழீழத்துக்காக உயிர் குடுக்கக் களமிறங்கியது.

ஆனால், தமிழீழம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தமிழ் நாட்டில இருக்கிற ஈழ அகதிகளையாவது இவையள் ஒழுங்காகக் கவனிச்சினமா எண்டால்....

சொன்னால் வெட்கக்கேடு, அங்கயே இவையள் ஒரு மசிரையும் புடுங்கேல்ல.

இந்தச் சீரிலயும் சிறப்பிலயும் 'தனித்தமிழீழத்துக்குப் பொது வாக்கெடுப்பு' எண்ட சீன் வேற.

ஆனால், என்ன செய்யிறது?

தமிழ்ச்சனத்துக்கு கலையாடிகளும் குறி சொல்லிகளும் எப்பவும் தேவை. மூடச்சனங்களுக்கு எப்பவும் கலையாடிகளும் குறிசொல்லிகளும்தான் பெருந்தெய்வங்கள்.

சக்குப்பிடிச்ச பணியாரத்தை திரும்பத் திரும்பக் கலியாணப்பந்தலில வைக்கிறதில தமிழ்த் தேசியவாதிகளுக்கு இருக்கிற பிரியத்துக்கு அளவில்லை.

இதில தமிழ்த்தலைவர்களும் ஒண்டுதான். தமிழ்ச்சனங்களும் ஒண்டுதான். இவைதானே அவையை ஆதரிக்கிறது. அவைதானே இவையை அரவணைக்கிறது.

எல்லாம் கோவிந்தாதான்...

மிகப்பெரிய உண்மை இது, பலமே வாழ்வு
பலவீனமே மரணம். - விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நீதியுள்ள மனிதர்கள்தானா நாம்?

பிறரிடம் நமக்குப் பிடிக்காத குணங்களே பெரிதாகத் தெரிகின்றன. நம்மால் சகித்துக்கொள்ள முடியாதளவிற்கு அவர்களது பிழைகள் எல்லாம் நமக்குப் பெரிதாகத் தெரிகின்றன. அவையே திரும்பத் திரும்ப நமக்கு நினைவூட்டப்படுவதால், அதுபற்றிய ஆவேசத்தில் நம் தவறுகள் நம் நினைவில் வருவதேயில்லை.

நமக்குத் தெரியாதவை அறியாதவை பற்றியெல்லாம் நினைவில் வருவதில்லை ஆதலால், நம் நினைவிலுள்ள மற்றவர்களின் பிழைகளே நமக்குப் பிழைகளாகத் தெரிகின்றன.

நாமும் தவறுகள் செய்திருக்கிறோமா அநீதிகள் செய்திருக்கிறோமா மற்றவர்கள் துன்பப்படவும் அச்சப்படவும் செய்திருக்கிறோமா என்பதெல்லாம் பற்றி நாம் யோசிப்பதேயில்லை.

அப்படி ஏதாவது யோசிக்கும்படி ஆகிவிட்டால் கூட, நம்மை விட மற்றவர்கள் செய்ததே ஆகப்பெரும் கொடூரம் என்று சமாதானம் செய்துகொண்டு அந்த சங்கடமான நினைவுகளை விலக்கி விடுகிறோம்.

பயங்கரவாதத்தை ஒழித்தபோது பக்கவிளைவாகவே பொது மக்களும் கொல்லப்பட்டனர் என்று அவர்கள் சொல்லும்போது நமக்கு ஆற்றொணாக் கோபம் உண்டாகிறது. அதேசமயம், நாம் விடுதலைக்காகப் போராடியபோது ஒருசில பொதுமக்களையும் கொல்ல வேண்டியதாகிவிட்டது என்பதையெல்லாம் நினைக்கவே வேண்டியதில்லை என்பது எப்படியோ நமக்குள் படிந்திருக்கிறது.

நம்மிடமும் பிழைகள் உண்டு என்று பேச வாயெடுப்பவர்கள், நிச்சயம் எதிரியைக் காப்பாற்ற நினைப்பவர்களாகத்தான் இருக்கும் என்றும், ஆகவே அவர்கள் துரோகிகள் – அவர்கள் பேச்சைக் கேட்க வேண்டியதில்லை – அப்படிக் கேளாதிருப்பதுதான் தமிழ்த் தேசியக் கடமை மற்றும் இனப்பற்று என்று நினைத்துக் கொள்கிறோம்.

அதனால்தான் எந்த உறுத்தலுமில்லாமல் நாம் மற்றவர்கள் செய்த கொலைகளைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்க முடிகிறது. அந்தக் கொடூரக் குற்றவாளிகளோடு சமதையாக நமக்கென்ன பேச்சு என்ற இறுமாப்பை நியாயப்படுத்திக் கொண்டிருக்க முடிகிறது.

நாம் குற்றமற்றவர்கள் என்று நாமாக வளர்த்துக்கொண்ட எண்ணம், மற்றவர்களோடு இணங்க முடியாத அகங்காரிகளாக்கி விடுகிறது நம்மை!

"சீஸரின் மனைவி சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவள்" என்பது போல நமக்கு நாமே உருவாக்கிக் கொண்ட புனிதப்படுத்தலே, மற்றவர்களோடு பேச முடியாதவர்களாக இணக்கம் காண முடியாதவர்களாகச் செய்துவருகிறது நம்மை!

நாம் மட்டுமே பெரிதாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற கொடியை உயர்த்திப் பிடித்தபடி அந்தக் கட்டைகளால் மற்றவர் தலைகளில் ஓங்கி அடித்தபடி இருக்கிறோம் அல்லது அடிக்க முயற்சித்தபடி இருக்கிறோம் – இஸ்ரேலியர்கள் போல!

நாம் செய்ததெல்லாம் அவர்கள் செய்ததற்குப் பதில்தான் என்றும் எங்களது தற்காப்புக்கானது என்றும் நியாயப்படுத்திக் கொள்கிறோம். அதுபோன்ற நியாயங்களெதையும் அவர்களும் வைத்துக் கொண்டிருந்தால் அதில் கொஞ்சமும் நியாயமில்லை என்று நாங்களாகவே நினைத்துக் கொள்கிறோம்.

இதுபோன்ற ஒருபக்கச் சிந்தனைகளோடு, இருதரப்புச் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினைக்குத்தான் தீர்வு காணமுடியும்? மறுதரப்புச் சொல்வதைக் கேட்க விரும்பாமலே, பாதிக்கப்பட்டிருப்பது நாங்களே, எனவே நாங்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும், நாங்கள் கேட்பதைத்தான் தர வேண்டும் என்று நாண்டு நிற்பது, ஒரு தரப்பை அழித்தோ அடிமைப்படுத்தியோதான் பிரச்சினைக்குத் தீர்வுகண்ட குகைமனிதர் காலத்து வழிமுறையல்லவா?

பகை நிறுத்தி சமாதானமாக வாழ விரும்பும் மனிதர் செய்ய வேண்டிய காரியங்களைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோமா? பேசிக் கொண்டிருக்கிறோமா? - ஆசிரியர்.

# சட்டம், ஒழுங்கு பேணப்படுவது ஏன்?

# மக்களுக்கு தெளிவூட்ட ஏற்பாடு

## –சட்டத்தரணிகள் சங்கம் முயற்சி

(கொழும்பு)

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து சட்டத்தரணிகள் சங்கம் மக்களுக்கு விளக்கம் அளிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாடு முழுவதிலும் இந்த மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டம் ஒழுங்குப் பிரிவுத் தலைவர் லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார்.

காவல்துறையினரின் நடவடிக்கைகள் குறித்தும் திருப்தி அடைய முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ருஹுனு பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது காவல் துறையினர் நடந்து கொண்ட விதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும் போது காவல்துறையினர் வெறுமனே வேடிக்கை பார்த்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# மணல் கடத்தலை தடுத்த பொலிஸார் மீது தாக்குதல்

## பொலிஸ் அதிகாரி காயம்

பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கி அவரது கடமைக்கு இடையூறு விளைவித்ததாகக் கூறப்படும் கருவலகஸ்வெவ பிரதேச சபையின் உப தலைவரான சமிந்த ருவன்சிறி பெரேரா கைது செய்யப்பட்டுள்ளதாக சாலியவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

உப தலைவரது தாக்குதலுக்கு இலக்கானதாக கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் தற்போது நொச்சியாகம மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவர் சாலியவெவ பொலிஸ பிரிவில் கடமையாற்றுபவர்.

நேற்று முன்தினம் இரவு 7.20 மணியளவில் புளியங்குளம் - 17ஆம் வளைவு, அளுத்கம பிரதேசத்தில் இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

புளியங்குளம் பிரதேசத்தில் மணல் கடத்தல் இடம்பெறுவதாக தகவல் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து அவ்விடம் பொலிஸாரால் சுற்றி வளைக்கப் பட்டுள்ளது.

இதன்போது மணல் கடத்திச் செல்லப்பட்ட ரக்டர் மற்றும் அதன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸாரில் தாக்குதலுக்கு இலக்கானவரும் அடங்குவர்.

கைது செய்யப்பட்ட நபரையும் மண் ஏற்றிய ரக்டரையும் சாலியவெவ பொலிஸ் நிலையத்தை நோக்கி எடுத்துச் செல்லும்போது, 20 பேர் அடங்கிய குழுவுடன் சென்ற நகரசபை உப தலைவர், பொலிஸ் கான்ஸடபிளை தாக்கிவிட்டு ரக்டர் மற்றும் வாகன சாரதியை அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது நிலைமையை கட்டுப்படுத்தும் நோக்கில் பிறிதொரு பொலிஸ் கான்ஸ்டபிள் வாகனத்தை நோக்கி துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி விசாரணை மேற்கொண்ட பொலிஸார் கரு[illegible]கஸ்வெவ பிரதேசசபைத் தலைவரைக் கைது செய்துள்ளனர்.

# நாடாளுமன்ற அனுபவம் நேற்றுடன் 44 வருடங்கள்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்து நேற்றுடன் 44 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன.

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெலியத்த தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக மகிந்தராஜபக்ஷ முதல் முறையாக தெரிவுசெய்யப்பட்டார்.

மகிந்த ராஜபக்ச 1970 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மிகவும் இளம் வயது நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம்: தயார் நிலையில் உள்ளூராட்சி சபைகள்

வடமாகாணத்தில் ஒருங்கிணைந்த மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் 34 உள்ளூராட்சி சபைகளிலும் தயாரிக்கப்படவுள்ளது.

கிராமத்திற்கு ஓர் திட்டம் எனும் அடிப்படையில் இத்திட்டம் முன்னகர்த்தப்பட்டு இருமாதங்களுக்குள் வழங்கப்படவேண்டும் என உள்ளூராட்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 440 கிராமங்களுக்கான திட்டம் முன்மொழியப்படும்.

கிராமத்திற்கான திட்டத்தயாரிப்பில் கிராமங்களில் மக்களினால் முன்மொழியப்படும் திட்டங்கள் வாக்கெடுப்பு அடிப்படையில் முன்வைக்கப்படும் திட்டங்கள் முன்னுரிமை தெரிவில் தெரிவு செய்யப்படும் இவ்வாறு தெரிவு செய்யப்படும் திட்டங்களை தொகுத்து சபைகளின் தலைவர் செயலாளர் ஒப்பமிட்டு கிராமத்திட்டம் தயாரித்து வழங்க வேண்டும்.

இவ்திட்டம் எதிர்காலத்தில் சபை உறுப்பினர்களின் முன்னிலையில் முன்வைக்கப்பட்டு வெளிநாட்டு நிதி கொள்ளளவுக்கு ஏற்ப (சபைக்கு 250 மில்லியன்ரூபா) அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செய்திகள் தெரிவிக்கின்றன. (92)

# விபூசிகா வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட சிறுமி விபூசிகாவும் அவருடைய தாயாரும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்த நிலையில் சிறுமி விபூசிகா மற்றும் அவரது தாயாரும் இம்மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய ஒருவருக்கு அடைக்கலம் வழங்கிய சம்பவம் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரையில் சமர்ப்பிக்கப்படாதுள்ள தடுத்துவைக்கும் உத்தரவினை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

எனினும் நேற்றுமுன்தினம் வழக்கிற்கு நீதிபதி சமுகமளிக்காமையால் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நீதிபதி சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார். மேலும். இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த மஹோற்சவம்

ஏழாலை அத்தியடி விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி சிறப்பாக இடம் பெற்றுவருகின்றது.

எதிர்வரும் புதன்கிழமை 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

ஊரெழு தி. சோமநாதக்குருக்கள் தலைமையில் இடம்பெறும் இம் மஹோற்சவத்திற்கு நல்லை ஆதீன சிவாச்சாரியார் கலாநிதி து.கு.ஜெகவதீஸ்வரக் குருக்கள் அருளாசிகளை வழங்குவார். (இ)



# கூட்டமைப்பின் நாடகத்தில் புதிய காட்சி விரிகின்றது

■ சங்கர சிவன்

**மேற்கத்திய நாடுகளின் இலங்கை எதிர்ப்பு மற்றும் தமிழ்த் தலைவர்களின் இனவாதச் செயற்பாடு ஆகியவற்றின் பின்னணியில் சர்வசன வாக்கெடுப்பில் சிங்கள மக்களின் வாக்குகளை எப்படி வென்றெடுக்க முடியும்? அரசியலமைப்புக்கூடாக அல்லாமல் நேரடியான இராணுவத் தலையீட்டின் மூலம் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் நம்புகின்றார்களா? அப்படி நம்பினால் அதைவிட முட்டாள்தனம் வேறெதுவும் இல்லை.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களின் பேச்சுக்களையும் ஊடக அறிக்கைகளையும் பார்க்கும் போது மக்களுக்குத் தலைவர்கள் ஏன் தேவை என்ற கேள்வி எழுகின்றது. காணி அபகரிப்பு, இன ஒழிப்பு, இராணுவக் குவிப்பு, போர்க்குற்ற விசாரணை பற்றியே இவர்கள் பேசுகின்றார்கள். மக்களின் பிரச்சினைகளைப் பட்டியல் போட்டுக் காட்டுவதற்கு மட்டும் தான் தலைவர்கள் தேவையா? தங்கள் பிரச்சினைகள் எவை என்பது மக்களுக்குத் தெரியும். அவர்களுக்குத் தேவைப்படுவது பிரச்சினைகளுக்கான தீர்வு.

கூட்டமைப்பின் எந்தத் தலைவரும் இப்பிரச்சினைகளின் தீர்வுக்குத் தாங்கள் என்ன செய்தார்கள் என்றோ எவ்வாறான தீர்வைத் தாங்கள் முன்வைக்கின்றார்கள் என்றோ கூறுவதில்லை. இப்பிரச்சினைகளின் தீர்வுக்காக நீங்கள் என்ன செய்திருக்கின்றீர்கள் என்று ஒவ்வொரு தமிழ் மகனும் கூட்டமைப்பினரைப் பார்த்துக் கேட்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இக்கட்டுரையாளர் முன்னரும் பல சந்தர்ப்பங்களில் கூறியது போல இனப்பிரச்சினையே தமிழ் மக்களின் பிரதான பிரச்சினை. காணி அபகரிப்பு, இராணுவப் பிரசன்னம் போன்ற அனைத்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாததன் விளைவுகள். இனப்பிரச்சினை தீர்க்கப்படும் போது மற்றைய பிரச்சினைகள் இயற்கை மரணம் எய்தக் கூடியவை. எனவே, இனப்பிரச்சினையின் தீர்வுக்கே தமிழ்த் தலைமை முன்னுரிமை அளிக்க வேண்டும். ஆனால், கூட்டமைப்புத் தலைவர்கள் இனப்பிரச்சினையை ஓரங்கட்டி விட்டு மற்றைய பிரச்சினைகள் பற்றியே பேசுகின்றார்கள். மற்றைய பிரச்சினைகளின் தீர்வுக்காகச் செயற்படக்கூடாது என்று சொல்ல வரவில்லை. அந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு தேவை. இனப்பிரச்சினையின் தீர்வு அதிமுக்கியமானது.

இவர்கள் இனப்பிரச்சினையின் தீர்வையும் மற்றைய பிரச்சினைகளின் தீர்வையும் சர்வதேச சமூகத்திடம் விட்டுவிட்டு வெறுமனே சலசலப்புக் காட்டுகின்றார்கள். இவர்களின் சலசலப்பில் கூட இனப்பிரச்சினை இல்லை. காணி அபகரிப்புக்கும் இராணுவப் பிரசன்னத்துக்கும் எதிராக மக்களைக் கூட்டி ஆர்ப்பாட்டமும் சத்தியாக்கிரகமும் செய்வதோடு இவர்களின் போராட்டம் முடிந்துவிடும். அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்காக வாக்குகளைத் தக்க வைப்பதற்கு இவ்வளவும் போதும் தானே.

புலிகளின் தனிநாட்டு நிகழ்ச்சி நிரலுக்குள் கட்டுப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக அரசியலுக்கு வந்து ஐந்து வருடங்களாகின்றன. இவ்வளவு காலமும் இனப்பிரச்சினையின் தீர்வுக்காகவோ மற்றைய பிரச்சினைக்ளின் தீர்வுக்காகவோ உருப்படியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவர்கள் செய்ததெல்லாம் சர்வதேசம் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கும் எனக் கூறிவிட்டுப் பதவி வழிச் சுகபோகத்தை அனுபவித்தது தான்.

இனப்பிரச்சினைக்குச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று ஐந்து வருடங்களாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறி வருகின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின் போது சம்பந்தன் கூறினார். இன்று வரை எதுவும் நடக்கவில்லை. எந்தவொரு வெளிநாடும் இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிப் பேசக்கூட இல்லை. இனப்பிரச்சினைக்குச் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தருவதென்பது நடக்க முடியாத காரியம். பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட எந்தத் தீர்வும் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வர முடியும் என்பது அரசியலமைப்பின் ஏற்பாடு. முழுமையான அரசியல் தீர்வைச் சர்வதேச சமூகம் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்பு கூறுகின்றது. அவ்வாறான தீர்வு சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வர முடியும். இதில் இரண்டு தடைகள் இருக்கின்றன. ஒன்று அரசாங்கம். மற்றது சிங்கள மக்களின் வாக்குகள். சர்வதேச சமூகம் ஏதேனுமொரு விதத்தில் அரசாங்கத்தைச் சம்மதிக்க வைத்தாலும் மேற்கத்திய நாடுகளின் இலங்கை எதிர்ப்பு மற்றும் தமிழ்த் தலைவர்களின் இனவாதச் செயற்பாடு ஆகியவற்றின் பின்னணியில் சர்வசன வாக்கெடுப்பில் சிங்கள மக்களின் வாக்குகளை எப்படி வென்றெடுக்க முடியும்? அரசியலமைப்புக்கூடாக அல்லாமல் நேரடியான இராணுவத் தலையீட்டின் மூலம் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் நம்புகின்றார்களா?. அப்படி நம்பினால் அதைவிட முட்டாள்தனம் வேறெதுவும் இல்லை.

மனித உரிமைகள் பேரவையின் ஜெனிவா மகாநாடு தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும் என்று சில காலமாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் பிரசாரம் செய்து வருகின்றார்கள். முன்னைய இரண்டு மாநாடுகளிலும் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றினால் இலங்கை அரசாங்கத்துக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வரவுமில்லை. இந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் போர்க்குற்ற விசாரணை நடைபெறும் என்றும் அது தனது சொந்த முயற்சியின் பலாபலன் என்றும் சுமந்திரன் கூறுகின்றார். கட்சிக்குள் புள்ளி போடுவதற்காக அவர் எதையும் சொல்லிவிட்டுப் போகட்டும். போர்க்குற்ற விசாரணையின் மூலம் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகளுள் எதையாவது தீர்க்க முடியும் என்று அவர் கூறுவாரா? யாருக்காவது தண்டனை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினையோ காணிப் பிரச்சினையோ தீரப்போவதில்லை.

சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று ஒரு புறத்தில் கூறிக்கொண்டு மறுபுறத்தில் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஆவன செய்யுமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறுவது அப்பட்டமான பொய் என்பதை இதன் மூலம் ஏற்றுக்கொள்கின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தருமென்றால் பதின்மூன்றாவது திருத்தத்துக்காக ஏன் மல்லுக்கட்ட வேண்டும்?

பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பான கோரிக்கையை முதலில் மன் மோகன் சிங்கிடம் விடுத்தார்கள். சரிவரவில்லை. இப்போது மோடியிடம் விடுக்கின்றார்கள். மோடி மிகவும் கண்டிப்பானவர் என்றும் மன்மோகன்சிங்குக்குக் கயிறு விட்டது போல ராஜபக்ஷ மோடிக்கு கயிறுவிட ஏலாது என்றும் மக்களிடம் அதீத நம்பிக்கையை வளர்க்கின்றார்கள். தமிழ்த் தலைவர்கள் மாத்திரமன்றி ஊடகங்களும் இந்த நம்பிக்கையை வளர்க்கின்றன. ராஜபக்ஷ பிடிவாதமாக நின்றால் மோடி படைப் பலத்தைப் பிரயோகிப்பார் என்று நினைக்கின்றார்கள் போலும். இப்படியான கனவுக்கு ஆர்.எஸ்.எஸ். முக்கியஸ்தரும் அந்த அமைப்பின் உத்தியோகபூர்வ பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான சேஷாத்திரி சாரி முற்றுப்புள்ளி வைக்கின்றார். சென்ற வருடம் ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருக்கக்கூடாது என்றும் அப்போதும் நடுநிலை வகித்திருக்க வேண்டும் என்றும் அண்மையில் அவர் கூறினார். ஆர்.எஸ்.எஸ். தான் பாரதிய ஜனதா கட்சியின் தத்துவார்த்த வழிகாட்டி.

இந்தியா, சர்வதேசம் என்று வீணாகக் காலத்தைக் கடத்திக்கொண்டிராமல் இலங்கைக்குள்ளேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு யதார்த்தபூர்வமாக முயற்சிப்பது தான் தமிழ் மக்களுக்கு நன்மை தரும். இதற்குப் பிரதானமான தேவை நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டம். இதுவரையில் கூட்டமைப்பு தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கவில்லை. அரசாங்கத்திடம் ஒரு தீர்வுத் திட்டத்தைக் கையளித்திருப்பதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் அடிக்கடி கூறுகின்றார். மக்களுக்குத் தெரியாமல் மூடுமந்திரமாக ஒரு தீர்வுத் திட்டமா? தமிழ் மக்களுக்கே தீர்வு பிரதானமாகத் தேவைப்படுகின்றது. தங்கள் பிரதிநிதிகள் தங்களுக்காக என்ன தீர்வை முன்வைத்திருக்கின்றார்கள் என்பதை அறியும் உரிமை மக்களுக்கு உண்டு. மக்களுக்குத் தெரியாமல் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்திருப்பதாகக் கூறுவதை ஏற்க முடியாது.

சர்வதேசம் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் தீர்வுத் திட்டமொன்றை அரசாங்கத்துக்குக் கொடுத்திருக்கின்றோம் என்றும் நீண்ட காலத்துக்கு மக்களை ஏமாற்ற முடியாது என்பதால் கூட்டமைப்பு அதன் ஏமாற்று நாடகத்தில் இப்போது ஒரு புதிய காட்சியைக் கட்டவிழ்க்கின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை உருவாக்குவதற்காக வடக்கு-கிழக்கு தமிழ் மக்களிடமும் புலம்பெயர் தமிழ் மக்களிடமிருந்து கருத்துக்களை எதிர்பார்ப்பதாகவும் அதற்காக இரண்டு மின்னஞ்சல் முகவரிகளை அறிவித்திருப்பதாகவும் கூட்டமைப்பு கூறுகின்றது. இந்த முடிவு பற்றி மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நீர்வேலி அலுவலகத்தில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றிய சுரேஷ் பிரேமச்சந்திரன் ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் இனப்பிரச்சினை பற்றிப் பேச ஆரம்பித்திருக்கின்றன என்றும் சொன்னார்.

இனிமேல் தான் கூட்டமைப்பு தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிக்கப்போகின்றது. அரசாங்கத்திடம் தீர்வுத் திட்டத்தைக் கையளித்திருப்பதாக இதுவரை கூறியது மக்களை ஏமாற்றுவதற்கான பொய்யா?

ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் இனப்பிரச்சினை பற்றிப் பேச ஆரம்பித்திருக்கின்றன எனக் கூறுவதன் அர்த்தம் இதுவரை அவை இனப்பிரச்சினை பற்றிப் பேசவில்லை என்பதாகும். அப்படியானால் சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று ஐந்து வருடங்களாகக் கூறிவருவதும் சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின்போது கூறியதும் மக்களை ஏமாற்றுவதற்கான இன்னொரு பொய்யா?

மக்களுடைய பிரச்சினைகளின் தீர்வுக்கான கொள்கைத் திட்டம் இல்லாததாலேயே கூட்டமைப்புத் தலைவர்கள் இப்படி முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார்கள். எந்த விதத்திலாவது அரசியல் தீர்வைத் தவிர்ப்பது என்பதே இவர்களின் ஒரே நோக்கம். "ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்புக்குள் எமக்கான உரிமையைப் பெறுவது சாத்தியமற்றது என்பதை நாம் உலக சமூகத்துக்கு நிரூபிக்க வேண்டும்" என்று தமிழரசுக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டு நிறைவில் ஆற்றிய உரையில் சம்பந்தன் கூறியிருப்பது இந்த நோக்கத்தை உறுதிப்படுத்துகின்றது. இதை நிரூபிப்பதற்காகவே அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதற்குக் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் கூட்டமைப்பு நிராகரித்து வருகின்றது. வெளிச் சக்தியொன்றின் தேவைக்காக அரசியல் தீர்வைக் கூட்டமைப்பு நிராகரிப்பது தமிழ் மக்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகம்.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது ஐக்கிய இலங்கையில் தீர்வு சாத்தியமில்லை என்று அறிவிப்பதற்காகக் கருத்தறியும் நாடகத்தை நடாத்துகின்றார்களா அல்லது தீர்வுத் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றோம் என்று அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரை மக்களின் காதில் பூச்சுற்றும் நோக்கமா என்ற சந்தேகம் எழுகின்றது.

# வடக்கு யுத்தத்தின் மற்றுமொரு அறுவடை

## 17000 பிள்ளைகளுக்கு பிறப்புப் பதிவு இல்லை

இந்தியாவின் தமிழகத்தில் பிறந்த சுமார் 17 ஆயிரம் இலங்கைப் பிள்ளைகள் உரிய பதிவுகள் இன்றி நாடற்ற நிலையில் உள்ளதாக தெ ஹிந்து தெரி வித்துள்ளது.

இந்தநிலையில் இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் இவர்களுக்கு உதவ முன் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் நிறுவுனர் சந்திரஹாசன் இது தொடர்பில் வெளி யிட்டுள்ள தகவலில்,

குறித்த பிள்ளைகளை பதிவு செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட நடமாடும் சேவையை தமிழக அரசாங்கம் நிறுத்தியமையை அடுத்து இந்த விடயம் கிடப்பில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பிள்ளைகளுக்கு பிறப்புச் சான் றிதழ்களை பெற்றுக்கொள்வதற்கு அவர்களின் பெற்றோர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் தேவை.

எனினும் பெரும்பாலான பெற்றோருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் இல்லை என்றும் சந்திர ஹாசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் தற்போது 25 மாவட்டங்களில் உள்ள 110 முகாம்களில் 66000 இலங்கைத் தமிழ் அகதிகள் வசித்து வருகின்றனர்.

இதனைத் தவிர 34ஆயிரம் அகதிகள் முகாம் களுக்கு வெளியில் வசிக்கின்றனர்.

போராளிகள் என்று கருதப்படுவோர் விசேட முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனச் தெரிவித்துள்ளார்.

# புலிகள் மீது வலை வீச்சு மலேசிய அரசு விடாப்பிடி

## பத்துப் புலிகளைத் தேடி வேட்டை

விடுதலைப் புலித்தலை வர்கள் பத்துப் பேரை கைது செய்து இலங்கை அதிகாரிக ளிடம் ஒப்படைக்க மலேசிய அதி காரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக திவயின என்ற சிங் களப் பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது.

ஜெயா என்ற ஜெயலக்ஷ்மி கோவிந்தசாமி, பொன்குளி வீர மன், கரிகாலன் என்ற சிவலிங் கம் சரவணன், பெருமாள் சின் னத்தம்பி, மொஹான் பெரிய சாமி, குமார் என்ற ஜெயகுமார் வையாபுரி, பெருமாள் என்ற ராமையா திருமாவளவன், மதி நாராயணன் என்ற செல்வமலர் ஐயாத்துரை, காந்தன் என்ற தவராஜா லக்ஷ்மி ஆகியோரே மலேசியாவில் மறைந்திருப்ப தாக அந்த பத்திரிகை குறிப் பிட்டுள்ளது.

இந்த உறுப்பினர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை மலேசிய அதிகாரிகள் ஆரம்பித் துள்ளனர். இவர்களை இலங் கைக்கு நாடு கடத்துவதை நிறுத்துமாறு கோரி மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மலேசிய பொலிஸுக்கு எதிரில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தி யதாகவும் திவயின கூறியுள்ளது.

# சுதந்திரக் கட்சிக்கு ஆபத்து

## காப்பாற்ற களம் குதிக்கிறார் சந்திரிகா



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாத் தல் என்ற பெயரில் இயக்கம் ஒன்றை முன்னெடுக்கவிருக் கிறார் என கொழும்புச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

தனது தந்தையாரால் உரு வாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியில் சந்திரிகா இப் போது எந்தப் பதிவியையும் வகிக்கவே இல்லை. தற்போது வெளிநாட்டுப் பயணத்தில் இருக கும் முன்னாள் ஜனாதிபதி இந்த மாத இறுதியில் நாடு திரும்ப விருக்கிறார்.

நாடு திரும்பியதும் கட்சி யைக் காப்பாற்றும் இயக்கத்தை அவர் ஆரம்பிப்பார் எனக் கூறப் பட்டது. தற்போதைய ஸ்ரீ.ல.சு. கடசியின் தலைமையினால் ஓரங கட்டப்பட்ட மூத்த பிரமுகர்கள் பலரின் ஆதரவு சந்திரிகா அம்மையாருக்குக் கிடைத்திருப்ப தாகக் கூறப்படுகின்றது.

எனினும் எதிர்வரும் ஜனா திபதித் தேர்தல்களில் பொது வேட்பாளராக நிற்கும் தீர்மானம் எதனையும் அவர் எடுக்க வில்லை என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி அந்தச் செய்தி தெரிவித் தது.

# கோத்தாவின் அரசியல் பிரவேசம் எப்போது?

## வரவேற்க காத்திருக்கிறது ஐ.தே.கட்சி

### கணை தொடுக்கத் தயார் என்கிறார் மங்கள

பாதுகாப்புச் செயலாளர் கோத தாபய ராஜபக்ஷவின் நாடாளு மன்ற பிரவேசத்திற்காக காத் திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் மங்கள சமரவீர தெரி வித்துள்ளார்.

இணையத்தள முடக்கம் தொடர்பில் நாடாளுமன்றில் நடை பெற்ற ஒத்தி வைப்பு விவாதத் தில் பங்கேற்றபோது இதனைக் குறிபபிட்டுள்ளார். நாடாளுமனற உறுப்பினர் கோத்தாபய ராஜ பக்ஷவிடம் பல்வேறு கேள்விக் கணைகளை தொடுக்க ஆவ லுடன் காத்திருப்பதாகத் தெரி வித்துள்ளார்.

இலங்கையில் இணையத் தளங்கள் முடக்கப்படுவதன் பின்னணியில் யார் செயற்பட்டு வருகின்றார் என்பது அனைவ ருக்கும் தெரிந்த ஒன்றே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

லங்காநியூஸ்வெப், லங்கா ஈநியூஸ், தமிழ்நெற், கொலம்போ ரெலிகிராப், தி இன்டிபென் டன்ட், ஜப்னாமுஸ்லிம், ஸ்ரீலங் காமிரர் போன்ற இணைய தளங்கள் முடக்கப்பட்டுள்ள தாகவும், அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்த காரணத்தினால் இவை முடக் கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரி வித்துள்ளார.

இந்த முடக்கப்பட்ட இணைய தளங்கள் பயங்கரவாத இணை



யத்தளங்கள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இணையத் தளங்கள் முடக் கப்பட்டமை தொடர்பில் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல்ல மீது குற்றம் சுமத்த முடியாது எனவும், அதனை விடவும் பலம்பொருந்திய வர்களே இதன் பின்னணியில் செயற்பட்டு வருவதாகவும் அவர குறிப்பிட்டுள்ளார்.

# படைத்தரப்பின் குற்றச் செயல்கள் பட்டியல் இடுகிறது பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் தரவுகளின் அடிப் படையில் 2014 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக் காலப்பகுதி யில் கிடைத்துள்ள குற்றச் செயல்கள் தொடர்பான முறைப் பாடுகளில் 18 வீதமானவை படையினரால் மேற்கொள்ளப் பட்டவை என்று தெரியவந்துள் ளது. இந்தத் தகவலை அல் ஜெசீரா செய்தியாக்கியுள்ளது.

இந்தநிலையில் படையின ருக்கு தற்போது நிபுணர்கள் மனவள ஆலோசனைகளை வழங்கி வருவதாக அந்தச் செய்தி யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத் தின் மனவள விரிவுரையாளர் பிரபாத் குணதிலக்கவின் கருத்துப் படி கடந்த 30 வருட காலத்தில் இருந்து எதிர்பார்த்த இராணு வத்தினருக்கான மனவள ஆலோ சனைகள் உரிய வகையில் வழங்கப்படவில்லை என்று குறிப பிட்டுள்ளார்.

போரில் ஈடுபட்ட வீரர்கள் பொதுமக்களுடன் பழகும்போது மேற்கொள்ள வேண்டிய பண்பு களை அதிகாரிகள் அவர்களுகககு வழங்கவேண்டும்.

இதேவேளை போரின் பின்னர் படைகளில் இருந்து சுமார் 30 ஆயிரம் வீரர்கள் தப்பிச் சென் றுள்ளனர் என்று பொலிஸ் பேச் சாளர் அஜித் ரோஹன தெரி வித்துள்ளார்.

இவர்களே அதிக குற்றங் களில் ஈடுபடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் தற்போதுள்ள இலங்கையில் உளள 350, 000 படையினரையும் பாதிப்பதாக அவர் தெரிவித் துள்ளார். இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரியவின் தக வல்படி, தற்போது இராணுவ வைத்தியசாலையில் 200 வீரர்கள் வரை, மனநல விடுதி களில் தங்கிச் சிகிச்சை பெறுவ தாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் 2012 ஆம் ஆண்டு இராணுவத்தில் இருநது விலகிய சரத் அபேக்கோன் என்ற இராணுவ வீரர், தாம் வீதி யில் செல்கின்ற போது நாற்றம் வீசினால் உடனடியாக பழைய போர் நினைவுகளே வருவ தாகக் குறிப்பிட்டுள்ளார்.

தம்மால் பொதுமக்களுடன் இயல்பு வாழ்க்கையை வாழ முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி முறைமை இனித் தேவையில்லை

## இது வாசுவின் வாதம்

(கொழும்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக, சர்வஜன வாக்கெடுப்பு நடாத் தப்படவேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாண யக்கார கோரிக்கை விடுத் துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின்



முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன ஏற்படுத்திய இந்த ஆட்சி முறை, அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் முக்கிய மான காலகட்டங்களிலும் உத வும் என்பதால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இடதுசாரித் தலைவர் கள் வரவேற்று வந்தனர்.

எனினும் தற்போது இடது சாரி கட்சியைச்சேர்ந்த அமைச்சர வாசுதேவ, நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்றும், இது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் என்றவகையில் செயற்படுத்த வேண்டிய காரி யம் என்றும் வாசுதேவ வெளி நாட்டு செய்திச்சேவைக்கு வழங்கிய செவ்வியில் குறிப் பிட்டார்

எனினும் வாசுதேவவின் கருததுக்கு அரசாங்கத்தரப்பில் இருந்து இன்னும் கருத்துக்கள் எவையும் வெளியாகவில்லை

# விதிமுறை தவறும் இணையத்தளங்கள் தடை செய்யப்படுவது நிச்சயம்

## அமைச்சர் கெஹலிய தகவல்

தனிப்பட்ட கொள்கைகளு டன் செயற்பட்டு வரும் இணை யத்தளங்களை நிறுத்துவதற் கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக அரசாங்கம் தெரி வித்துள்ளது.

அமைச்சர் கெஹலிய ரம் புக்வெல்ல நேற்று நாடாளுமன் றத்தில் இதனைத் தெரிவித்தார்.

இணையத்தளங்களை தடை செய்வது தொடர்பான விவாதத் தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையி லேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

ஒழுக்கமுள்ள சமூகம் ஒன்றுக்கு இடையூறாக உள்ள இணையத்தளங்களை கட்டுப் படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கான கலந்துரையாட லுக்காக ஐக்கிய தேசியக் கட்சியினரும் முன்வரவேண்டும் என்று அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

சில இணையத்தளங்கள், ஒருவர் மீது சேறு பூசுவதற்கும் முறையற்ற காதல் விவகாரங் களை வெளிப்படுத்தும் பயன் படுத்தப்படுகின்றன. சட்டரீதி யாக பதிவுசெய்யப்பட்ட பல இணை யத்தளங்கள் தடைசெய்ப்படு வது ஏன் என்பதை தெரிந்து கொள்ளும் முகமாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த விவா தத்தை கோரியிருந்தார்.

இந்தநிலையில் இன்றைய விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மங் கள சமரவீர, இணையத்தளங் கள் தடைசெய்யப்படுகின்ற செயலுக்கு கெஹலிய ரம்புக் வெல்ல காரணம் அல்ல.

அதிகாரம் மிக்க ஒருவரே இந்தச் செயலுக்கு பின்னால் இருப்பதாக மங்கள சமரவீர குறிப்பிட்டார்.

இதேவேளை ஆளும் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், தமது உரை யின்போது ஐக்கிய தேசியக் கட்சியினரே குற்றவாளிகளாக செயற்படுவதாக குற்றம் சுமத்தி னார்.

# பூமி வெப்பத்தால் கடல்மட்டம் உயர்வு சிறுதீவுகளை மூழ்கடிக்கும் அபாயம்

## வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பூமி வெப்பம் அடைவதால் கடல்மட்டம் உயர்ந்து சிறு தீவுகளை மூழ்கடிக்கவுள்ள அபாயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே ஐக்கிய நாடுகள் சபை சிறு தீவுகளும் கடல் மட்ட உயர்வும் என்பதைத் தேர்வு செய்ததோடு "உங்கள் குரலை உயர்த்துங்கள் கடல் மட்டத்தை அல்ல" என்பதை சுற்றுச்சூழல் தினத்துக்கான உத்தியோகபூர்வ சுலோகமாகவும் அறிவித்துள்ளது என வடமாகாண விவசாய, கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை சமதரையையும் தாழ்வான நிலப்பகுதியையும் அதிகளவான கடல் நீரேரிகளின் ஊடறுப்புகளையும் கொண்டிருப்பதன் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாடு கடற் பெருக்கின் அபாயத்தை அதிகமாகவே கொண்டிருக்கிறது.

அதிலும் குடாநாட்டின் நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு என்று குடாநாட்டின் சிறுதீவுகள் அனைத்தையும் சத்தமில்லாமலே கடல் நீர் மூடிவிடும் ஆபத்து நிலவுகிறது என்று சூழலியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடல் கரையைத் தாண்டாமல் தடுப்பதற்காக இயற்கை கடல் எல்லையில் பவளப் பாறைகள், மணல் மேடுகள், கண்டற்காடுகள் என்று பல அடுக்குகளில் போடப்பட்டுள்ள பாதுகாப்பு அரண்கள் அனைத்தையுமே நாம் மிகை நுகர்வுக்கு உட்படுத்திச் சீரழித்துக் கொண்டிருக்கிறோம்.

இது தொடர்பாகப் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு கடந்த யூன் 5 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதியை வடமாகாண சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரமாகக் கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (63)

# புதிய நிர்வாகத்தெரிவு

(வடமராட்சி)

தொல்புலோலி புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் வீ.கே.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இப் பொதுக் கூட்டத்திற்கு வித்தியாலய அதிபர் ஏ.சிவநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டர் தெரிவான புதிய செயற்குழு உறுப்பினர்கள் விபரம் பின்வருமாறு,

தலைவர் கதிர்காமநாதன் ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், உபதலைவர்களாக வீ.கே.சண்முகநாதன் சுப்றாகிராமசேவை அலுவலர், எஸ்.திருச்செல்வம் இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகர், திருமதி.எஸ்.கணேசலிங்கம் இளைப்பாறிய ஆசிரியை, ரி.ஜெயவீரசிங்கம் இளைப்பாறிய ஆசிரியர், ஏ.ஆழ்வாப்பிள்ளை பொறியியலாளர், செயலாளர்களாக வி.சுகுமார் நீதிவான் அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர், உப செயலாளராக எஸ்.தனஞ்ஜயன் பொறியியலாளர், பொருளாளராக எஸ்.கந்தசாமி இளைப்பாறிய அரச உத்தியோகத்தர், செயற்குழு உறுப்பினராக நான்குபேர் தெரிவு செய்யப்பட்டனர். (01)

## மாசடைந்து காணப்படும் தம்பாலை சனசமூக நிலையம்

(அச்சுவேலி)

அச்சுவேலி, தம்பாலை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையமானது பல காலமாக செயற்பாடிற்றிக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் சனசமூக நிலையமானது சுகாதாரமற்ற நிலையில் விலங்குக் கழிவுகள் மற்றும் தூசிகள் நிறைந்து காணப்படுகின்றன. பூட்டின்றி திறந்த நிலையில் காணப்படுவதால் கட்டாக்காலி நாய்கள் சென்று தமது இரவுப் பொழுதைக் கழித்து வருகின்றன.

பக்திக்கும் மரியாதைக்கும் அமைதிக்குமான இடமாகத் திகழும் சனசமூக நிலையமானது சுகாதாரமற்றுக் காணப்படுவதாக அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்து சன சமூக நிலையத்தினை மீள இயங்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு என அப்பகுதிபொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (85)

## முரசின் இன்றைய பலன்



(08.06.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஐய வருஷம் வைகாசி மாதம் 25 ஆம் திகதி.
தசமி/மரணயோகஅமிர்தசித்தம்.
அத்தம் நட்சத்திரம் பி.ப 02.21 வரை. பின் சித்திரை.
இராகு காலம் 04.22 - 05.52 வரை. சுபநேரம் 08.52 -10.22 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அறாவிலையில் பூர்வி கச்சொத்து விற்பனை செய்தல். பெற்றோரின் புத்திமதியைக கேட்டதனால் வரவிருந்த கெடுதி நீங்கிவிடல். |
| இடபம் | பரீட்சை முடிவு பாதகமாக இருந்ததினால கல்விப்புலத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தல். உறவு சீர்கெட்டிருந்த சகோதரர் மனம்மாறி உதவி செய்ய முன்வரல். |
| மிதுனம் | அவமரியாதையினால் மனம் கூனிக்குறுகி பதகளிப்பு ஏற்படல். தொலைபேசி உரையாடல் மூலம் நீண்ட நாள் நிலுவை கிடைக்கும் நம்பிக்கை ஏற்படல். |
| கடகம் | மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் நோய் குணமடைய தெய்வதலத்தை நாடுதல். குழந்தைக்கனி உருவாகிய அறிகுறி தென்பட்டதனால் ஆனந்தம் ஏற்படல். |
| சிம்மம் | உணவுக்கட்டுப்பாட்டினை பிசகாமல் மேற்கொண்ட தால் நோயின் ஆதிக்கம் குறைதல். விவாகம் பின்தள்ளல். |
| கன்னி | பிறர் கூறும் கருத்தினை செவிமடுக்க முயன்றதால் முன்னேற்றம் தடைப்படும். ஒழுக்கம் தவறும் சந்தர்ப்பம் ஒன்று உருவாகும் வேளை குடும்பத்தை நினைத்து திருத்திவிடல். |
| துலாம் | விவாகமாகாதிருக்கும் முதிர்கன்னியை எண்ணி விசனப்படல். வெளியூர் பயணம் கானல் நீராகியதால் மீண்டும் முயலும் எண்ணம் தலைதூக்குதல். |
| விருச்சிகம் | பிரிந்திருந்த தம்பதியர் முகம்பார்த்துக் கதைத்ததினால் மனஆறுதல் பெறுதல். காணாமற் போய்விட்டார் என நம்பப்பட்டவர் உயிருடன் உள்ளார் என்ற தகவல் அறிதல். |
| தனுசு | உரியநேரத்தில் மின்ஒழுக்கினை சீர்செய்ததால் அபாயம் விலகிவிடல். பிரயாணத்தில் ஆவணங்கள் கொண்டு செல்வதை மறக்கவே கூடாது. |
| மகரம் | தேங்கிய பொருட்களையும் விற்பனை செய்யும் புதிய யுக்தியை மேற்கொள்ளுதல். கணக்குப்பதிவில் தில்லுமுல்லு காணப்பட்டதினால் முரண்பாடு ஏற்படல். |
| கும்பம் | கையடக்கத்தொலைபேசி மூலம் புதிய உறவு ஏற்பட வழி பிறத்தல். புதியன் கொள்வனவு செய்யுங்கால் நம்பகத்தன்மையை பாருங்கள். |
| மீனம் | மானம் மற்றும் கௌரவத்தை முன்னிட்டு ஏற்பட்ட சம்பவம் பற்றி முறையிட காவல்துறை செல்ல விரும்பாமை. அரசு மூலம் ஏற்பட்ட ஒப்பந்த வேலைகள் திருப்திகரமாக நடத்தல். |



# குருப்பெயர்ச்சி பலாபலன்கள்

(13.06.2014 முதல் 04.07.2015 வரை)

## மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதம்
திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதம்)

**மதிநுட்பத்துடன் பணியாற்றும் மிதுன ராசிக்காரர்களே!**

உங்கள் ராசியில் இருந்த குருபகவான் குடும்பத்தில் பல பிரச்சினைகளை உருவாக்கி இருப்பார். சிலர் குடும்பத்தை விட்டுப் பிரியும் நிலை கூட ஏற்பட்டிருக்கும். இந்த நிலையில் இப்போது குருபகவான் உங்கள் ராசியை விட்டு 2 ஆம் இடத்திற்கு அடியெடுத்து வைக்கிறார். இது மிகவும் உகந்த நிலை. வாழ்வில் எண்ணற்ற நன்மைகள் படிப்படியாகக கிடைக்கும். உங்களது ஆற்றல் மேம்படும். இதுவரை இருந்து வந்த மந்த நிலை மாறும். மனதில் துணிச்சல் பிறக்கும். பண வரவு கூடும். தேவையான பொருட்களை வாங்கலாம். பகைவர்களின் மறைமுக சூழ்ச்சி இனி உங்களிடம் எடுபடாது. அவர்கள் சரண் அடையும் நிலையும் உருவாகும்.

குருபகவான் மட்டுமின்றி முக்கிய கிரகங்களான சனி பகவானும் சாதகமாக இருப்பதால் முன்னேற்றத்துக்கு எளிதில் வழி காணலாம். இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். பொருளாதார வளம் சிறப்படையும். தேவை அனைத்தும் பூர்த்தியாகும். எடுத்த காரியத்தை சிறப்பாகக் செய்து முடிக்கலாம். மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். உங்கள் செல்வாக்கு மேம்படும். அக்கம் பக்கத்தினர் பெருமையாகப் பேசும் விதத்தில் செயற்படுவீர்கள். பல ஆண்டுகளாக தடைப்பட்டு வந்த திருமணம், கிரகப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சி கைகூடும். அதுவும் நல்ல வரனாக அமையும்.

புதுமணத் தம்பதியருக்கு குழந்தைப் பாக்கியம் விரைவில் கிட்டும். புதிய வீடு கட்டுவர். உறவினர் வருகையால் நன்மை கிடைக்கும். பெண்களின் ஆதரவு கிடைக்கும். அவர்களால் நற்சுகம் கிடைக்கும். பொன் பொருள் சேரும். பொருளாதார வளம் மேம்படும்.

**பணியாளர்கள்:-**

பணியாளர்கள் கடந்த காலத்தில் மந்த நிலையில் இருந்திருப்பீர்கள். அந்த பிற்போக்கான நிலையில் இருந்து விடுபடுவர். வேலையில் இருந்த வெறுப்புணர்வு மாறி ஆர்வம் பிறக்கும். வேலையில் திருப்தியும் தன்னம்பிக்கையும் பிறக்கும். வேலைப்பளு வெகுவாககுறையும். புதிய பதவி வர வாய்ப்பு உண்டு. சிலர் அதிகார அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவர். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சம்பள உயர்வு வரும். விரும்பிய இடத்திற்கு மாற்றம் கிடைக்கப் பெறலாம். 2015 - ஏப்ரல்,மே மாதத்தில் பெண்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் வர வாய்ப்பு உண்டு.

**பெண்கள்:-**

வாழ்வில் நல்ல முன்னேற்றம் அடைவர். விரும்பிய விதத்தில் புத்தாடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். குடும்பத்தில் ஆனந்தமும் மகிழ்ச்சியும் நிலவும். வீட்டுக்குத் தேவையான வசதி அதிகரிக்கும். தம்பதியரிடையே பாச உணர்வு மேம்படும். விருந்து, விழா என அடிக்கடி சென்று வருவீர்கள். வேலைக்குச் செல்லும் பெண்கள் உயர் நிலையை அடைவர்.

**கலைஞர்கள்:-**

பின்தங்கிய நிலையில் இருந்து விடுபடுவர். புதிய ஒப்பந்தம் தாராளமாகக் கிடைக்கும். பண வரவு சிறப்பாக இருக்கும். புகழ், பாராட்டு வந்து சேரும்.

**மாணவர்கள்:-**

இந்த ஆண்டு சிறப்பான பலனை காணலாம். கல்வியில் நல்ல வளர்ச்சி ஏற்படும். நல்ல மதிப்பெண் கிடைக்கும். போட்டிகளில் வெற்றி கிடைக்கப் பெறுவர். விரும்பிய பாடம கிடைக்கும். வெளிநாடு சென்று படிக்க வாய்ப்பும் சிலர் பெறலாம்.

**குரு அதிசார பலன்!**

குரு பகவான் டிசம்பர் 3 இல் அதிசாரம் பெற்று சிம்ம ராசிக்கு மாறுகிறார். டிசம்பர் 22 வரை அதில் இருப்பார். இதனால் இந்தக் காலத்தில் வீண் சண்டை, சச்சரவு உண்டாகும் என்றும், மந்த நிலை ஏற்படும் என்றும் பொதுவாக கூறப்படுவதுண்டு. சற்று பொறுமையாகவும் விட்டுக் கொடுத்தும் போவது நன்மையளிக்கும். முயற்சியில் தடங்கலும் குறுக்கிடும். எந்தச் செயலையும் விடாமுயற்சியுடன் செய்ய வேண்டியிருக்கும்.

**பரிகாரம்!**

ராகு, கேது சாதகமற்ற நிலையில் உள்ளனர். சந்தர்ப்பம் கிடைக்கும்போது அர்ச்சனை செய்யுங்கள். துர்க்கை அம்மனை எலுமிச்சை விளக்கேற்றி வழிபடுங்கள். பௌர்ணமியன்று விளக்கு ஏற்றி சிவபெருமானை வணங்குங்கள். பத்திரகாளியம்மனுக்கு எலுமிச்சை தீபமேற்றி வழிபடுங்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் என்ற துதியை தினமும் பாடுங்கள்.

# மாகாண மட்ட கால்பந்து

# ஹென்றியரசர், மானிப்பாய் இந்து சம்பியன்




இளவாலை ஹென்றியரசர் கல்லூரி



யாழ். மத்திய கல்லூரி



வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்




மானிப்பாய் இந்துக் கல்லூரி



மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி

(வவுனியா)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவு மாகாண பாடசாலைகளுக்கிடையில் தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. இதில் ஆண்களுக்கான கால்பந்துத் தொடர் நேற்று வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இதில் 17 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகள் மோதிக் கொண்டன.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி கோல்களைப் பெற்று வந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் யாழ். மத்திய கல்லூரி அணி செயற்பட்டபோதும், ஹென்றியரசர் கல்லூரியின் பிற்கள வீரர்களை பலமான தடைகளைத் தாண்டி கோல் கம்பத்துக்குள் உள்நுழைய முடியவில்லை. இறுதியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாகாண சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் மன்னார் முருங்கன் மகாவித்தியாலய அணியும் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும் மோதின. இதில் சென்.சேவியர் ஆண்கள் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறு திப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி யும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒரு கோலைப் போட்டு ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை நிரூபித்தன. இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே வெற்றிக் கோலைப் பெற்றுக்கொள்ளத் துடிப்புடன் முட்டி மோதின. இரு அணிகளின் முயற்சிக்கும் இறுதி வரை பலன் கிடைக்கவில்லை. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாகாண சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.


இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் மன்னார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி அணி 9-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியை வீழ்த்தி சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(12,93)

## கராத்தே கலையின் ஜாம்வான் மாரடைப்பால் மரணம்




மறைந்த இராமச்சந்திரன் (வலது) விஜயராஜுடன்...

(யாழ்ப்பாணம்)

கராத்தே கலையில் இலங்கைக்கும் தமிழர்களுக்கும் உலகப் புகழ் சேர்ந்த சிகான் கே. இராமச்சந்திரன் (வயது - 65) நேற்று முன்தினம் மாரடைப்புக் காரணமாக மரணமடைந்துள்ளார்.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1966ஆம் ஆண்டு கராத்தேக் கலையைக் கற்றதுடன் 1976, 1977, 1979, 1981 ஆகிய ஆண்டுகளில் கறுப்புப் பட்டி ஒன்று முதல் நான்கு வரையான பட்டிகளை வென்றார். அத்துடன் ஆறாவது கறுப்புப் பட்டியை ஜப்பானில் 2000ஆம் ஆண்டும் ஏழாவது கறுப்புப் பட்டியை கொழும்பில் 2012ஆம் ஆண்டும் பெற்றுக் கொண்டார்.

1990ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச காரத்தேப் போட்டியில் பங்குபற்றி இவர் மூன்றாமிடத்தைப் பிடித்து இலங்கைக்குப் பெருமை சேர்த்தார். 1992ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச காட்டாப் போட்டியிலும் மூன்றாமிடம் பிடித்து அசத்தினார். கராத்தேயில் பல சாதனைகளைப் படைத்த இராமச்சந்திரனுக்கு இலங்கை விளையாட்டுத் துறையும் பல பதவிகளை வழங்கிக் கௌரவித்தது. அந்த வகையில்2000ஆம்ஆண்டு இலங்கை கராத்தே சம்மேளனத் தலைவராகப் பொறுப்பேற்ற இவர் 2001,2002ஆம் ஆண்டு வரை தலைவராக செயற்பட்டுள்ளார். தேசிய ஜே.கே.எம்.ஓ கராத்தே கலையின் பிரதம ஆசிரியாக சாகும் வரை கடமையாற்றிய இவர், இலங்கை கராத்தே சம்மேளனத்தின் நிர்வாக உறுப்பினராகவும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கராத்தேப் போட்டியில் சிறந்த வீரர்களை உருவாக்கியுள்ள இவரின் இழப்பு இலங்கைக்கும் தமிழர்களுக்கும் பெரிழப்பாகும் கராத்தே கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவரிடம் கராத்தே கலையைப் பயின்று தேசிய ரீதியில் மிளிர்ந்து வரும் சென்.சே விஜயராஜ் இவரின் மரணம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், தமிழர்களைப் பொறுத்த வரையில் இராமச்சந்திரனின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொரு இழப்பாகும். கராத்தேப் போட்டியில் பல சாதனை வீரர்களை உருவாக்கியுள்ள பெருமை இவருக்கு உண்டு. அந்த வகையில் அவரிடம் கராத்தேக் கலையைப் பயின்றதையும், அவருடன் பழகிய நாட்களும் என் மனதில் என்றும் பசுமையாக இருக்கும் என்றார். (எஸ்.பி.)

## ஆரம்ப விழாவில் 21 வெளிநாட்டுத் தலைவர்கள்

உலகம் முழுவதும் உள்ள கால்பந்து இரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கும் உலக கோப்பை கால்பந்துப் போட்டி பிரேசிலில் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஒரு மாத காலம் இந்த கால்பந்து திருவிழா நடைபெறவுள்ளது. கால்பந்து தொடக்க விழாவில் 21 நாட்டு தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ரஷ்ய அதிபர் புட்டின், ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கெல் உள்பட பல நாட்டு தலைவர்கள் உலக கோப்பை போட்டித் தினங்களில் கலந்து கொண்டு போட்டியை இரசிக்கவுள்ளனர்.

## பெரு விளையாட்டில் வலிகாமம் முன்னிலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் பெருவிளையாட்டுப் போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயம் 215 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது. வவுனியாவில் நேற்று நடைபெற்ற கால்பந்துப் போட்டித் தொடரின் பின் வெளியிடப்பட்டுள்ள புள்ளிகளின் விபரங்கள் வருமாறு

| வலயம் | புள்ளிகள் |
|---|---|
| வலிகாமம் | 215 |
| வடமராட்சி | 214 |
| யாழ்ப்பாணம் | 198 |
| கிளிநொச்சி | 102 |
| தென்மராட்சி | 058 |
| முல்லைத்தீவு | 051 |
| வவுனியா வடக்கு | 050 |
| வவுனியா தெற்கு | 040 |
| தீவகம் | 036 |
| மன்னார் | 035 |
| துணுக்காய் | 008 |
| மடு | 000 |

# உருளப்போவது பந்து மட்டுமல்ல கோடிக்கணக்கில் பணமும் தான்

உலக கோப்பை கால்பந்துத் தொடரில் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை, கட்டுமான பணிகள் உட்பட சுமார் ரூ. 23 இலட்சம் கோடி புரளுவதால், விளம்பரதாரர்கள், வியாபாரிகளுக்கு பெரும் கொண்டாட்டமாக உள்ளது.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) சார்பில், 20ஆவது உலக கோப்பைத் தொடர் பிரேசிலில் நடைபெறவுள்ளது. வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகும் இத்தொடரில் 32 அணிகள் பங்கேற்கின்றன. இவை 8 அணிகளாகப்பிரிக்கப்பட்டு, முதலில் லீக் முறையில் போட்டிகள் நடைபெறும். இத்தொடருக்காக பல்வேறு வழிகளில் சுமார் 23 இலட்சம் கோடி வரை புரளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் பிரேசில் அரசு மட்டும் 88,983 கோடி செலவிடுகிறது. புதிய மைதானங்களை கட்டியது, போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு செலவிட்டது.

கடந்த 2010இல் தென்னாபிரிக்க மண்ணில் நடைபெற்ற உலக கோப்பை கால்பந்து தொடரில், தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமையில் மட்டும், பிபா அமைப்புக்கு 21,949 கோடி கிடைத்தது. இம்முறை மொத்தம் நடைபெறும் 64 போட்டிகளை உலகம் முழுவதிலும் நேரடி ஒளிபரப்புச் செய்ய, 23,728 கோடி வரை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2013ஆம் ஆண்டு உலக விளையாட்டுப் பொருட்கள் தயாரிப்பு தொழிலுக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு இவர்களுக்கு ஜாலி தான்.

வரும் உலக கோப்பைத் தொடர் காரணமாக, கால்பந்து தொடர்பான விளையாட்டுப் பொருட்கள் தயாரிப்புகளுக்கு, 3.5 முதல் 4 சதவீதம் வரை ஓர்டர் அதிகரித்துள்ளதாம்.

இதன்படி, மொத்தம் 21,41,524 கோடி வரைக்கும் இந்தத் தொழிலில் ஈடுபடும் வியாபாரிகள் சம்பாதிக்கவுள்ளனர்.

உலக கோப்பை கால்பந்துத் தொடர் வந்து விட்டால், பந்தயத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு திருவிழா தான். இத்தொடரில் இங்கிலாந்து அணி கோப்பை வெல்லும் என, ஒரு ரூபாய் கட்டினால், ரூ. 100 வரை கிடைக்குமாம்.

பந்தயத்தில் ஈடுபடும் இங்கிலாந்தை சேர்ந்த வில்லியம் ஹில் என்பவர் கூறுகையில், இத்தொடரில் மொத்தம் ரூ 9,937 கோடி வரை சூதாட்டம் நடக்கும், என்றார். உலக கோப்பைத் தொடருக்காக வீரர்கள் படங்கள், அணிகளின் விபரங்கள் போன்ற பல்வேறு விபரங்களுடன், ஸ்டிக்கர் வெளியிடப்படும். கடந்த தென்னாபிரிக்க உலக கோப்பை தொடரில் மட்டும், இத்தாலியை சேர்ந்த பனினி என்ற நிறுவனம், சுமார் 22 இலட்சம் ஸ்டிக்கர்கள் விற்றது. இம்முறை எவ்வளவு விற்கப்போகின்றது என்பது குறித்து இந்நிறுவனம் தெரிவிக்க மறுத்து விட்டது. இருப்பினும், இது 1,262 கோடி வரை இருக்கும் எனத் தெரிகிறது. உலக கோப்பை தொடருக்காக பிரேசில் மக்களின் வரிப்பணம் கோடிக் கணக்கில் வீணாவதாக குற்றச்சாட்டு உள்ளது. மைதான கட்டுமான பணி பட்ஜெட் முதலில் திட்டமிட்டதை விட, மூன்று மடங்கு (5,336) அதிகரித்துள்ளது. இதுகுறித்த அறிக்கையில், ஒரு மைதானத்தின் ஒரு பகுதி அமைக்க 2.7 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டது. இறுதியில், 8.8 கோடியில் தான் முடிந்தது.

# இன்று பலப்பரீட்சை



(பரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு, ஸ்பெயினின் ரபெல் நடால், சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் முன்னேறினர்.

பிரான்ஸ் தலைநகர் பரிசில், பிரெஞ் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. நேற்று முன் தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், உலகின் முதல் நிலை வீரர் மற்றும் நடப்பு சம்பியன் ஸ்பெயினின் ரபெல் நடால், பிரிட்டனின் ஆன்டி முர்ரே மோதினர். அபாரமாக ஆடிய நடால் 6-3, 6-2, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, 9ஆவது முறையாக (2005,2008, 2010-2014) இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். முன்னதாக எட்டு முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறிய நடால், அனைத்திலும் வெற்றி பெற்று கோப்பை வென்றார்.

வெற்றிக்குப் பின் நடால் கூறுகையில் இந்த ஆண்டில் இன்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி உள்ளேன். பத்து ஆண்டுகளுக்கு முன் இங்கு விளையாட வந்தேன். 9ஆவது முறையாக இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளேன். என் வாழ்க்கையில் இப்படி எல்லாம் நடக்கும் என எதிர்பார்க்கவே இல்லை. ஜோகோவிச் அசாதாரணமான வீரர். எப்போதும் அவர் எனக்கு கடும் சவால் அளிப்பார். சமீபத்திய ஆட்டங்களில் அவர் என்னைத் தோற்கடித்துள்ளார். எனவே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

இதேவேளை, மற்றொரு அரையிறுதியில், உலகின் இரண்டாம் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6-3, 6-3, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் லத்வியாவின் எர்னஸ்ட்ஸ் குல்பிஸை வீழ்த்தி, 2ஆவது முறையாக (2012, 2014) இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதேவேளை, ஆண்களுக்கான இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எண்களிலும் மனிதக் கண்

கால்பந்து ஆட்டத்துக்கு முன்பு, கால்பந்தை உதைப்பது நல்லது என்ற நம்பிக்கை கால்பந்து வீரர்கள் மத்தியில் நிலவுகிறது. போட்டிக்கு முன்பு பயிற்சி வேண்டும், என்பதற்காக இது கூறப்பட்டதா அல்லது பந்தை உதைத்தால்தான் வெற்றி கிடைக்கும் என்ற மூடநம்பிக்கையில் கூறப்பட்டதா எனத் தெரியவில்லை. இது ஒரு உதாரணம் மட்டுமே. ஒவ்வொரு நாட்டு வீரர்கள் மத்தியிலும் இதுபோல பல நம்பிக்கைகள் நிலவுகின்றன. தங்களது திறமையின் மீது நம்பிக்கை வைத்திருந்தாலும், ஏதோ ஒன்று தன்னை முன்னோக்கிக் கொண்டு செல்வதாக வீரர்கள் நம்புகின்றனர். இல்லையெனில், கால்பந்து ஜாம்பவான் என அழைக்கப்படும் ஆர்ஜென்ரீனாவின் மரடோனாவே தனது கையில் பட்டு பந்து வலைக்குள் சென்றதை, அது கடவுளின் கை என்று தெரிவித்திருப்பாரா என்ன.

இந்த வகையில் எண்களும் ராசியாக பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு சில எண்கள் ராசியில்லை. அமெரிக்கர்களுக்கு 13ஆம் எண் ஆகாததால், பல மாடிகளில் 13ஆவது ப்ளோர் இருக்காதாம். ஜப்பானியருக்கு 4ஆம், 9ஆம் எண்கள் வேண்டவே வேண்டாமாம். இரு எண்களை உச்சரிக்கும்போது மரணத்தையும், நோயின்மையும் தருவதாக அவர்கள் உணர்கின்றனராம்.

ஒரு சில அணிகளுக்கு, தங்கள் நாட்டிலிருந்து தொலைவில் உள்ள அணிகளுடன் மோதினால் நல்ல சகுணமாம். சிலவற்றுக்கு பயிற்சி ஆட்டம் தடையுற்றால் கெட்ட சகுணமாம்.

இத்தாலியர்களுக்கு 17ஆம் எண் என்றால் பயங்கர அலர்ஜி. இந்த நம்பரின் ரோமன் வடிவம் ஷஸ்ணண். இதனை லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தால், மரணத்தை நோக்கி இருப்பதாக அர்த்தம் தருகிறது. அதனால், இத்தாலி விமானங்களில் 17ஆம் எண் வரிசையையே தூக்கி விட்டார்கள். வீட்டு எண்களின் வரிசையிலும் அதே கதைதான். இத்தாலி அணி, கடந்த 30 ஆண்டுகளில் 17ஆம் திகதி மட்டும் 33 ஆட்டங்கள் விளையாடி, 30இல் தோற்றும் போனதாம். எதிர்வரும் 17ஆம் திகதி இத்தாலிக்கு போட்டி இல்லை என்பதால், பிரேசிலில் உள்ள அந்த அணி வீரர்கள் பெருமூச்சு விட்டிருப்பர். ரஷ்யகாரர்களுக்கு இரட்டைப் படை எண்கள் கெட்ட சகுணமாகவும் ஒற்றைப் படை எண்கள் நல்ல சகுணமாகவும் உள்ளதாம்.



# கால்பந்து துளிகள்...

* உலக கோப்பை கால்பந்துப் போட்டித் தொடர் ஆரம்பமாக இன்னும் சில தினங்களே உள்ள நிலையில், பிரேசிலின் சா பாலோ நகரில் சுரங்கப்பாதை ஊழியர்கள் நேற்று முன்தினம் திடீரென வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்து ஸ்தம்பித்து பெரும் குழப்பம் ஏற்பட்டது.
* 2022ஆம் ஆண்டுக்கான உலக கோப்பை கால்பந்துப் போட்டியை நடாத்த கட்டார் நாடு தேர்வு செய்யப்பட்டதில் முறைகேடு நடந்துள்ளதாக புகார் எழுந்துள்ளதால் மறு வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. எனினும், இது தொடர்பான விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உலக கால்பந்து சம்மேளனத் தலைவர் செப் பிளாட்டர் கூறியுள்ளார்.
* உலக கோப்பை கால்பந்துப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பிரேசில் ஆர்ஜென்ரீனா அணிகள் மோதுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது என்று பிரேசில் அணி பயிற்சியாளர் லூயிஸ் பெலிப் ஸ்கோலரி தெரிவித்துள்ளார்.
* 20ஆவது உலக கோப்பைத் தொடரில் கோப்பை வெல்லும் ஜேர்மனி வீரர்களுக்கு தலா ரூ. 2.42 கோடி போனஸ் வழங்கப்படும் என அந்நாட்டு அரசு தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கால்பந்து திருவிழா இன்னும் 4 நாட்கள்



அசமோவா ஜையன்

# உலக கால்பந்தாட்ட விழா
# வெல்லப்போகும் அணி எது?

எ[illegible] அன்ரனிப்பிள்ளை கிளிபேட்
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்



## கானா சிறு பார்வை

கானா :மக்கள்தொகை 2 ½ கோடி. 1962இல் முதன் முதலாகத் தகுதிகாண் போட்டிகளில் பங்குபற்றியது. 2006இல் முதன்முதலில் உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற்று இரண்டாம் கட்டத்திற்கும் முன்னேறியது. 2010இல் கால் இறுதிப் போட்டியில் விளையாடியதன் மூலம், கால் இறுதிப் போட்டிவரை முன்னேறிய மூன்றாவது ஆபிரிக்க நாடு என்னும் பெருமையைப் பெறுகிறது.கடந்த இரண்டு உலக கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றிய, 28 வயது முன் கள வீரர் அசமோவா ஜையன் (Asamoah Gyan) அணிக்குத் தலைமைதாங்குகிறார்.கானாவுக்காக ஆகக் குறைந்த வயதில் கோல் அடித்த பெருமையும், 2006 உலக கிண்ணத்தில் மிகக் குறுகிய நேரத்தில் (68 செக்கன்களில்) கோல் அடித்த பெருமையும் இவருக்குண்டு.

ஆனாலும் இவர், 2010 கால் இறுதிப் போட்டியில், மேலதிக நேர போட்டியின் கடைசி நிமிடத்தில் கிடைத்த தண்ட அடியை தவற விட்டதனாலும், 2012 ஆபிரிக்க கிண்ண அரை இறுதிப் போட்டியில் கிடைத்த, தண்ட அடியைத் தவற விட்டதாலும், கானா அரிய சந்தர்ப்பங்களை இழந்துவிட்டது.2010 வரை ஜேர்மனி இளைஞர் தேசிய அணிகளில் இடம்பெற்ற,27 வயது கெவின் பிறின்ஸ் போரெங் (Kevin- Prince Boateng) மத்திய களம் அல்லது பின் களம் எதிலும் திறமையாக விளையாடக் கூடியவர். 2010 உலக கிண்ணத்திலும் கானா வுக்காக விளையாடியவர். இவரும்,20 வயது முன்கள வீரர் பிராங்க் ஆகெம்பொங் (Frank Acheampong)கும்குறிப்பிடத்தக்கவர்கள். 53 வயதானபயிற்சியாளர்,ஜேம்ஸ் கெசி அப்பையா (James Kwesi Appiah)கானா வை உலக கிண்ணத்திற்குத் தகுதி பெற வைத்த முதலாவது கறுப்பு இனத்தவர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

தர மறுக்கின்றார் என குற்றம் சாட்டுவதே வடமாகாண சபையின் இதுவரையான சாதனையாக உள்ளது.

வடக்கில் நிலைமை இப்படி யிருக்க கிழக்கில் உள்ள மாகாணசபை பற்றி வேறு விதமான பல ஆற்ற முடிகிறது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

ஆகவே காணி பொலிஸ் அதிகாரங்கள் இருந்தால் மட்டுமே தாங்கள் செயற்பட முடியும். அதற்கு ஆளுநர் தடையாக இருக்கின்றார் என்று கூட்டமைப்பினர் வடமாகாண சபையில் றைப் படுத்தும்படி அரசாங் கத்தை வலியுறுத்தி வருகின்ற அமைச்சர்கள் ராஜித சேனா ரத்ன, வாசுதேவ நாணயக் கார, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர போன்றோரை இவர்கள் பொருட்படுத்துவ தில்லை. அவர்களுடன் உரையாடுவதில்லை.

எதிர்க்கட்சி வரிசையில் உட்காரவைத்து அழகு பார்ப்பதற்கு மட்டுமே பயன்பட்டுள்ளது. இன்று கிழக்கு மாகாண சபை, முஸ்லிம்களுக்கு அதை செய்கிறது இதை செய்கிறது என்று கூட்டமைப்பினர் சொல்கின்ற போது அது



# “ஒண்டுக்கும் யோசியாமல் கஷ்டப்படுங்கள்... சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கிறது...”

– எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.

இனப்பிரச்சினைக்கான தீர்வாக இதுவரை எழுத்திலும் அமுல்படுத்தப்பட்டும் இருக்கின்ற ஒரேயொரு தீர்வு 13ஆவது சட்டதிருத்தத்தினூடாக வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களேயாகும். எனவே இனப்பிரச்சினைக்கான இறுதி தீர்வுநோக்கிய கோரிக்கை களை அதிலிருந்து தொடங்குவதே காலப்பொருத்தமானது ஆகும்.

இதனையே கடந்த காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் துரோகம் என வர்ணித்து வந்தனர். ஆனால் காலம் சிலருக்கு தாமதமா-கவே சிலவற்றை உணரச்செய்யும் என்பது போல இப்போதுதான் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்த 13ஆவது சட்டதிருத்தம் பற்றிய ஏற்றுக்கொள்ளலுக்கு வந்திருக்கின்றார்கள்.

வடக்கு மாகாண தேர்தலில் பங்கெடுத்ததன் ஊடாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இந்த 13ஆவது சட்டதிருத்தத்தினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகார பரவலாக்கமுறைமை பற்றிய அக்கறையை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளனர்.

ஆனால் இந்த தேர்தல் பங்கெடுத்தல் அவர்களுக்கு பதவிகளையும் சொகுசுகளையும் வழங்கியுள்ளதை தவிர மக்களுக்கு எதையுமே வழங்கவில்லை என்பதே சோகமானது. மாகாணசபைகளுக்கு உள்ள அதிகாரங்களை ஆளுநர் குற்றச்சாட்டுகளை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அண்மைக்காலமாக முன்வைத்து வருகின்றனர்.

கிழக்கு மாகாண சபையின் நடப்பாண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இன விகிதாசாரப் பரம்பலை கவனத்தில் கொள்ளாமல் முறைகேடான முறைமை யில் ஆளும்தரப்பு நடந்து கொண்டுள்ளதன் மூலம் தமிழ் மக்கள் பிரதேசங்களில் புறக்கணிக்கப் பட்டுள்ளதாக வும் சிற்றூழியர் நியமனங் களில் தமிழர்கள் புறக் கணிப்பு தொடர்வதாகவும் கிழக்கு மாகாணசபை உறுப் பினர் இரா.துரைரெட்ணம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அண்மையில் மட்டக்களப் புக்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் அதிகாரி ரெரேசா டேல்லாச்சி, அரசியல் நிபுணர் ஆர்.ஈ.சந்தீப் குருஸ் ஆகியோரிடம் நாடாளுமன்ற உறுப்பினரான சீ. யோகேஸ் வரன், கிழக்கு மாகாண சபையானது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் தமிழர் களை திட்டமிட்டு புறக் கணித்து வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

அப்படியானால் இந்த மாகாணசபை முறைமையை கொண்டு (காணி பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத நிலையிலும்) கிழக்கு மாகாண சபையால் பல சேவைகளை மக்களுக்கு காலம்கடத்துவது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கு செய்கின்ற மாபெரும் துரோகமாகும்.

இதற்கிடையில், கடந்த சனிக்கிழமையன்று மட்டக் களப்பு கல்லடியில் “அனைத் துலக சமூகமும் தமிழ் தேசிய அரசியலும் ஒரு சமகால பார்வை” என்ற தலைப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நடத்திய கருத்தாடல் நிகழ் வில் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா உரையாற்றினார்.

வழமைபோலவே “இதோ இந்தியா இறுக்கமாக கதைத்திருக்கிறது”, “மோடி ராஜபக்சவிடம் 13ஆவது சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும்படி உறுதி யாக கூறி விட்டார்”, “அடுத்தவாரம் ஐ.நா.வின் சர்வதேச விசாரணை வருகி றது” என்றெல்லாம் தமிழர் களின் கரங்களை சொர்க்கம் அண்மிக்கிறது எனும் தோர ணையில், எடுத்து விட்டார்.

இது வழமையான றெக்கோர்ட் தான் ஒன்றும் ஆச்சரியமில்லை. அதிகாரப் பகிர்வுக்காக குரல் கொடுக்கும் இலங்கை வாழ் சக இன சமூகங்களை விட முற்போக்குவாதிகளைவிட இடது சாரிகளைவிட சர்வ தேசமே கூட்டமைப்பினரின் நம்பிக்கை நட்சத்திரம் என்பது ஒன்றும் புதிதல்ல. அதனால்தான் அரசுக்குள்ளே இருந்துகொண்டு 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமு

அவர்களை எல்லாம் வரவேற்றால் தங்களது இனவாத அரசியலில் பங்கம் விழுந்து விடும் என்கின்ற அச்சம் இந்த கூட்டமைப்பினருக்கு உண்டு. எனவேதான் தமிழ் மக்களுக்காக அவர்கள் விடும் அறிக்கைகளை வரவேற்று ஒருபோதும் இவர்கள் பேசுவதில்லை.

ஆனால் விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, ஒருசில இனவாதிகள் என்ன சொல் கின்றார்கள் என்பதை மட்டும் கண்ணுக்குள் எண்ணையை விட்டுக்கொண்டு காத்திருந்து கண்டுபிடித்து காரசாரமாக பதிலிறுப்பார்கள் நமது தலைவர்கள்.

மட்டக்களப்பில் மாவை வழமையைவிட வேறு ஒரு விடயம் குறித்தும் கூறினார் அதாவது “கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் எம்மோடு கை கோர்த்து நின்றிருந்தால் இலங்கை அரசியலிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கும்” என்றார். இதன் அர்த்தம் என்னவென்று யாருக்கும் புரிந்ததோ தெரியவில்லை. இந்த கதைதான் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை சிதறடித்து கிழக்கில் ஒரு தமிழரேனும் இல்லாத அமைச்சரவையை உருவாக் கியது என்பதை சொல்லி தெரிய வேண்டியதில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப் பினருக்கு அளிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாக்குகள் பல பத்து உறுப்பினர்களை கிழக்குத் தமிழர்கள் உருவாக்கிய, கட்டியமைத்த, வலுக்கொடுத்த மாகாணசபை யின் வெளிப்பாடுகள் தான் என்பதை கூட்டமைப்பினரே ஒத்துக்கொள்வதாகின்றது.

அப்படியானால் ஏன் அந்த ஆட்சியாளர்களை தோற்கடிக்க கூட்டமைப்பு களத்திலிறங்கி கிழக்கு தமிழர்களின் வாக்குப் பலத்தை நிர்மூலமாக்கியது? தமிழரிடமிருந்து ஆட்சியை பறிக்கும் குழிபறிப்பில் ஈடுபட்டது? என்கின்ற கேள்விகளுக்கு ஐயா மாவை பதில்சொல்ல வேண்டும்.

கிழக்கு மாகாண தேர்தலில் இவர்கள் எடுத்துவிட்ட “சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கிறது” கதையாடலால் என்ன பிரயோசனம் அடைந்தோம் என்பதை ஐயா மாவை சொல்ல வேண்டும்.

சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்த ஆண்டிபோல ஏதோ தனக்கேயுரிய தகுதி யுடன் இயங்கிகொண்டிருந்த கிழக்கு மாகாணசபையை குட்டிச்சுவராக்கியது கூட்டமைப்பினரின் பழியுணர்ச்சியே என்பதை ஐயா மாவை மறுப்பாரா?

இப்படி கூட்டமைப்பினர் தமிழர்களை கடையேற்றிய இலட்சணத்தில் முஸ்லிம் களும் தம்மோடு கைகோர்த் திருக்க வேண்டுமாம். இதை யாரிடம்போய் சொல்லியழுவது?



# புகைவிடும் காரைக் கொன்றுவிடு!

இரு சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் சாலையில் அதிக மாக அதிகமாக போக்குவரத்து நெரி சல் அதிகமாகிறது. அதுமட்டுமா? காற்றில் கலக்கும் காபனீரொட்சைட்டின் அளவும் அதிகமா-கிறது. அந்தக் காற்றைச் சுவாசிக்கும் மக்களுக்கு நோய்கள் வருவது அதிகமாகி... மருத்துவச் செலவும் அதிகமாகிறது. இவ்வளவையும் தவிர்க்க காற்றில் புகையை அதிகம்விடும் கார்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட முடிவுசெய்திருக்கிறது சீன அரசாங்கம்.

இந்த ஆண்டு 50 இலட்சம் பழைய கார்களை நசுக்கிக் கொல்லப் போகிறார்களாம்!

ஒரு கார் இவ்வளவு புகையைத்தான் வெளியிட வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதை விட அதிகமாகப் புகைவிடும் கார்களின் முதுகில் “மஞ்சள் லேபிளை” ஒட்டி வைத்துவிடுகிறார்கள். அந்தக் கார் இனிமேல் வீதியில் ஓடக் கூடாது என்று எச்சரிக்கவே மஞ்சள் லேபிள்.

ஒரு பழைய காரை நசுக்கி அழித்தால், இழப்பீடாக காரின் முதுமைத் தன்மைக்கேற்ப சுமார் ஒரு இலட்சம் ரூபாவிலிருந்து ஐந்து இலட்சம் ரூபா வரை அரசு தருகிறதாம்.

“மஞ்சள் லேபிள்” கார்களுக்கு இழப்பீடு கிடையாது...

“பட்டுப் புழு எதற்காக இழை பின்னுகிறது?” - கார்ல் மார்க்ஸ்


“புலப்படுத்தலென்பது இயற்கை. பூ ஏன் பூக்கின்றது?” - ஜே.கிருஷ்ணமூர்த்தி

“நான் மற்றவர்க்குச் சிலவற்றைப் புலப்படுத்த விரும்புகின்றேன். பூ ஏன் பூக்கின்றது? என்ன குறிக்கோள்?... இயற்கையின் ஒரு பகுதியே நான். இயற்கை போலவே இயங்குகிறேன் நான். இது கடமையினும் மேலான ஒன்றே.” - பிரமிள்

“குயில் கூவுகிறது, மயில் அகவுகிறது, எருமை கத்துகிறது, எருக்கும் பூக்கிறது... இவையெல்லாம் பாராட்டை எதிர்பார்த்து நடைபெறுபவையா? அதனதன் இயல்புதானே எல்லாம்...” - ந.பிச்சமூர்த்தி

“எழுதாமல் இருக்க முடியாததால் எழுதுகிறேன்.” - நகுலன்

## எதற்காக எழுதுகின்றீர்கள்? என்ற கேள்விக்கு கிடைத்த சில விடைகள்:




*"I have a lot of really good ideas, but I just can't get them down on paper."*


# பொதுஜன உளவியல்

- முஜீப் ரஹ்மான் -

கலீல் கிப்ரானின் புத்தகத்தில் ஒரு அழகான சூ.:.பி கதை ஒன்று உண்டு. அந்தக் கதையில் ஒரு கிராமத்தில் இரண்டு கிணறுகள் இருந்தன. ஒன்று அரண்மனையில் இருந்தது. அதை மந்திரியும் அரச குடும்பத்தினரையும் தவிர வேறு யாரும் உபயோகிக்க முடியாது. மற்றொன்று ஊரின் நடுவே இருந்தது. அதை மற்ற அனைவரும் உபயோகித்தனர்.

ஆனால் ஒருநாள், ஒரு மந்திரவாதி அந்த ஊருக்கு வந்து சில மந்திரங்களை கூறிக்கொண்டே ஏதோ ஒன்றை அந்த பொது கிணற்றினுள் போட்டான். மக்கள் எல்லோரும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் யாருக்கும் என்ன நிகழ்கிறதென்று புரியவில்லை! அவன் இந்த கிணற்றிலிருந்து தண்ணீர் பருகுபவர் யாராயிருந்தாலும் அவர்கள் பைத்தியமாகி விடுவர் என்று கூறிவிட்டு மறைந்துவிட்டான்.

தண்ணீர் குடிக்க வேறு வழியில்லை, அரண்மனைக்கு போக முடியாது. எனவே தாங்கள் பைத்தியமாகி விடுவோம் என தெரிந்தபோதிலும் மக்கள் வேறு வழியில்லாமல் இந்த தண்ணீரையே குடித்தனர். சூரியன் மறையும்போது அந்த தண்ணீரைக் குடித்த வயது முதிர்ந்த கிழவனிலிருந்து சிறு குழந்தை வரை அனைவருக்கும் பைத்தியம் பிடித்து விட்டது. ராஜா, ராணி, இளவரசன், மந்திரி ஆகியோரைத் தவிர தலைநகர் முழுமைக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது.



யாருக்கும் சுயநினைவில்லை! ஏனெனில் எல்லோரும் பைத்தியமாக இருக்கும்போது யாருக்கு சுய உணர்விருக்கும்? ஹிப்பிகள் சொல்வதுபோல ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பியதை செய்தனர். மக்கள் அம்மணமாக திரிந்தனர், கத்தி கதறி கூக்குரலிட்டனர், பெண்கள் நிர்வாணமாக தெருவில் ஓடினர்! ஒருவர் தலைகீழாக நின்றார், மற்றொருவர் யோகாசனம் செய்தார், எல்லோரும் கொண்டாடிக் கொண்டிருந்தனர்! என்ன செய்வது? நகர் முழுவதும் பைத்தியமாகிவிட்டனர். எல்லோரும் பைத்தியமாகிவிட்டதால் எடுத்துச் சொல்ல யாருமே அங்கு இல்லையே!

மந்திரியும் அரச குடும்பத்தினரும் மட்டுமே சோகமாக இருந்தனர். எல்லோரும் பைத்தியமாகி விட்டனரே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தனர். உண்மையில் தங்களது உணர்வைப் பற்றி அவர்களுக்கே சந்தேகமாக இருந்தது. நாம்தான் பைத்தியமாகிவிட்டோமோ என்று சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டனர். அப்போது அங்கு ஒரு வித்தியாசமான விஷயம் நடந்தது.


நகர் முழுவதும் அரசரும் மந்திரியும் வித்தியாசமாக இருப்பதை உணர்ந்தது. அரசரும் மந்திரியும் பைத்தியமாகிவிட்டனர் என்ற வதந்தி பரவியது. கூட்டம் முழுமையும் அரண்மனை முன் ஒன்று கூடி அரசன் பைத்தியமாகிவிட்டான் என சத்தமிட ஆரம்பித்தனர். எல்லோருக்கும் பைத்தியம் பிடித்திருந்தது. எனவே அரசர் நம்மைப் போல இல்லை எனும் விஷயத்தில் எல்லோரும் ஒன்றுபட்டனர்.

காவலாளிகள், போலீஸ், படைபட்டாளம் ஆகிய அனைத்தும் பைத்தியமாகிவிட்டனர்! அதனால் அங்கு எந்த பாதுகாப்பும் இல்லை. அவர்களும் சேர்ந்து கூடி கூத்தாடிக் கொண்டு, "மரியாதையாக இயல்பாகி விடு. இல்லையேல் அரண்மனையை விட்டு வெளியே வா! நாங்கள் எங்களைப் போலவே இருக்கும் ஒருவரை புதிய அரசராக தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்," என கூக்குரலிட்டனர்.

அரசர், மந்திரியிடம், "நமது படைகளுக்கும் கூட பைத்தியம் பிடித்து விட்டதே! என்ன செய்வது? நமக்கு பாதுகாப்பில்லையே!" என்று கேட்டார். மந்திரி விவேகமுள்ளவர், வயது முதிர்ந்த அனுபவசாலி. அவர், "ஒரே ஒரு வழிதான் உள்ளது! முன்வாசலை அடைத்துவிட்டு பின்வாசல் வழியே தப்பி சென்று அவர்கள் தண்ணீர் பருகிய அந்த கிணற்றிலிருந்தே தண்ணீர் எடுத்து குடித்து நாமும் பைத்தியமாகி விட வேண்டியதுதான். இல்லாவிடில் இந்த பைத்தியகார கும்பல் நம்மை கொன்றுவிடும்." என்றார்.

அந்த அறிவுரை மிகவும் சரியானது. அரசரும் மந்திரியும் அரச குடும்பத்தினரும் பின்வாசல் வழியே ஓடினர். அந்த மந்திரவாதி ரசாயன மாற்றம் செய்திருந்த அந்த கிணற்று தண்ணீரைக் குடித்தனர். பின் அவர்கள் பின்வாசல் வழியே வரவில்லை, ஆடிக் கொண்டும், கத்திக் கொண்டும், குதித்துக் கூத்தாடிக் கொண்டும், முன் வாசல் வழியே வந்தனர். தங்களது அரசரும் மந்திரியும் இயல்பாகி விட்டதைக் கண்ட கூட்டம் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. அன்று இரவு தலைநகரம், "அரசரும் அரச குடும்பத்தினரும் மந்திரியும் இயல்பு நிலையடைந்து விட்டனர்" என்று மிகவும் கோலாகலமாக இருந்தது.

- ஓவியர்கள் அதிகம் பயன்படுத்துவது சிவப்பு வண்ணமே.
- பிரான்ஸில் சட்டக் கல்லூரிகளின் நிறம் சிவப்பு.
- சீனாவில் திருமணத்தின் அடையாளம் சிவப்பு.
- தீக்குச்சி செய்ய சிவப்பு பொஸ்பரஸ் பயன்படுகிறது.
- வியட்நாமில் ஓடும் ஒரு நதியின் பெயர் சிவப்பு நதி.
- லாக்சா பூச்சியின் செந்நிறப் பிசின்தான் அரக்கு ஆகும்.



## சிவப்புச் செய்திகள்

# புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து தனித் தமிழீழத்திற்கு முனைவோர்

7

- கமெலியா நாதானியேல் -

**நெடியவன் - இரும்பொறை குழு**

நான்காண்டு கால ஒரு இடைவெளிக்குப் பின்னர், எல்.ரீ.ரீ.ஈ இற்கு புத்துயிர் கொடுக்கும் ஒரு முயற்சி நெடியவன் - இரும்பொறை குழுவினரால் முன்னெடுக்கப் பட்டது. அதன் பாதுகாப்பான புகலிடமாகவும் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ யின் செயற்பாடுகளுக்கு பாரம்பரிய தளமாகவும் விளங்கும் நோர்வேயில் வைத்து நெடியவன் - இரும்பொறை குழு இலங்கையை மீண்டும் மோதலுக்குள் இழுக்க தீர்மானிக்கிறது.

ஐக்கிய இராச்சியத்திலுள்ள உலகத் தமிழர் பேரவை(ஜி.ரி.எப்) மற்றும் அமெரிக்காவில் உள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்(ரி.ஜி.ரி.ஈ) ஆகிய வேறு இரண்டு பிரிவுகள் செயற்பட்ட போதிலும், நெடியவன் - இரும்பொறை குழு மற்றும் பிரான்சில் உள்ள தலைமைச் செயலக குழு என்பன மீண்டும் வன்முறை திரும்புவதையே விரும்பின.

இந்த நான்கு எல்.ரீ.ரீ.ஈ பிரிவுகளிலும் நெடியவன் - இரும்பொறை குழுதான் மிகவும் பெரியதும் அதிக வளங்களைக் கொண்டதும் ஆகும். இதில் வஞ்சனையானது ஆனால் உண்மையானது என்னவென்றால் நெடியவன் - இரும்பொறை குழுவுக்கு நோர்வே அரசாங்கம் ஒரு பகுதி மானியம் வழங்கி வருவதுதான்.

நெடியவனுக்கு மரபு வ்ழியாக கிடைத்த ஐரோப்பாவின் இதயப் பகுதியில் உள்ள அதன் தலைமையகத்தில் இருந்துதான் எல்.ரீ.ரீ.ஈயின் பிரமாண்டமான உலகளாவிய வலையமைப்பு இயங்குகிறது, இதுவரை இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகள் யாவற்றிற்கும் இதுதான் ஆதரவு வழங்கியுள்ளது.

நெடியவன் தனது உதவியாளரான நந்தகோபனுடன் இணைந்து, கஸ்ட்ரோவின் எல்.ரீ.ரீ.ஈ சர்வதேச செயலகத்தின் மூலமாக கனடா முதல் அவுஸ்திரேலியா வரையான வெவ்வேறு பல கட்டமைப்புகளுடன் ஒன்று சேர்ந்துள்ளார். நெடியவன் தனது சகபாடிகளான இப்போது ஜேர்மனியில் உள்ள இரும்பொறை மற்றும் கனடாவில் உள்ள அறிவு ஆகிய இருவருடனும் இரகசியமாக வேலை செய்து வருகிறார்.

எனினும் ஈரானில் அவரது மற்றொரு துணையான நந்தகோபனை கைது செய்ததை தொடர்ந்து மலேசியா அவரை மார்ச் 2014இல் இலங்கைக்கு நாடு கடத்திய போதிலும் நெடியவனால் நீடித்து நிற்க முடிந்துள்ளது.

தான் கைது செய்யப்படும் வரை நந்தகோபன், ஜேர்மனியை சேர்ந்த ஒரு பெண்ணை மணந்திருக்கும் நியுசிலாந்து பிரஜையான இரும்பொறையுடன் சேர்ந்து வேலை செய்து வந்தார், மற்றும் ஜெனிவாவில் நடந்த ஐநா மனித உரிமைகள் சபை கூட்டத்தின்போது எல்.ரீ.ரீ.ஈ பரப்புரையையும் இருவரும் இயக்கி வந்தார்கள்.

எல்.ரீ.ரீ.ஈயின் சொத்துக்களைப் பெற்றதால் செலவந்தர்கள் ஆகியுள்ளவர்களில் ஒருவரான அறிவு, எல்.ரீ.ரீ.ஈ ஏற்பாடு செய்த கப்பலான எம்.வி சண் சீ மூலமாக கனடாவுக்கு குடிபெயர்ந்துள்ளார். அறிவு கனடா எல்.ரீ.ரீ.ஈ யிடமிருந்து உதவிகளை பெற்றதுடன் எல்.ரீ.ரீ.ஈ யின் வட அமெரிக்க செயல்பாடுகளை வழி நடத்துவதற்கு முன்னர் கனடிய ஆவணங்களைப் பெறுவதற்காக புலிகளின் பாணியில் காலம் கடத்தியது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈ தோல்வியடைந்த பின்னர் மற்றும் பிரபாகரனின் வாரிசான கேபி கைது செய்யப்பட்டதும் நெடியவனின் எழுச்சிக்கு வழி பிறந்தது.



நெடியவன்



இரும்பொறை

ஒஸ்லோவுக்கு வெளியே உள்ள நோர்வே கிராமமான ஈட்ஸ்வாக்கில் உள்ள நெடியவன் எல்.ரீ.ரீ.ஈயின் சர்வதேச செயற்பாடுகளை ஒருங்கிணைத்து குழுவுக்கு புத்துயிர் அளித்து வருகிறார்.

அவருக்கு தொழில்முறை பிசியோதெரபிஸ்ட் ஆன சிவகௌரி என்பவர் ஆதரவளித்து வருகிறார். எல்.ரீ.ரீ.ஈ தொலைக்காட்சி நிலையமான ரி.ரி. என் இனது ஒஸ்லோ அரங்கமான தாய்நிலத்தில் ஒரு அறிவிப்பாளராக சிவகௌரி இருந்தபோதுதான், நெடியவன் அவரைச் சந்தித்தார். சிவகௌரியின் தந்தையான சாந்தமோகனின் சகோதரரான லாலா ரஞ்சன் என்கிற ரஞ்சன்லால் ஞானேந்திரமோகன் பிரசித்தமான ஒரு எல்.ரீ.ரீ.ஈ முன்னோடியாவார். நெடியவன் மற்றும் சிவகௌரி ஆகியோர் வேறுபட்ட சாதியினராக இருந்தபோதும் பிரபாகரன் அவர்களது திருமணத்தை முன்மொழிந்தார்.

எனினும் யுத்தம் முடிவடைந்த பின்னர், நோர்வே அதிகாரிகள் நெடியவன் இடத்துக்குச் சென்று அவரது செயற்பாடுகளை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார்கள், ஆனால் அவர் அதற்கு மனம் இளகவில்லை. நோர்வே சட்டத்தை தட்டிக்கழித்து நெடியவன் ஒரு எல்.ரீ.ரீ.ஈ அமைப்பான தமிழ்ஈழ மக்கள் பேரவையை அமைத்தார், சமீபத்தில் ஐ.நா பாதுகாப்புச்சபை தீர்மானம் 1373யின் கீழ் இது தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்கப்பட்டது.

இன்று எல்.ரீ.ரீ.ஈயின் நான்கு பிரிவுகள் உட்பூசலால் பாதிக்கப் பட்டுள்ளன, ஆனால் பொதுவான பிரச்சினைகளில் அவை ஒருமித்து இயங்குகிறன. நிதி சேகரிப்பு இன்னமும் ஆதாயகரமான ஒன்றாகவே உள்ளது. அவர்கள் தனித்தனியாக இயங்கினாலும் மனித உரிமைகள் அமைப்புகளிடையே பரப்புரைகள் மேற்கொள்வதில் அவர்கள் இணையாக வேலை செய்து வருகிறார்கள்.

(தொடரும்)

# வடமாகாணத்தின் போருக்குப் பின்னரான யதார்த்தங்கள்

**வெள்ளிக்கிழமை கருத்துக் களத்தின் சார்பாக ஜூன் மாதம் 01 ஆம் திகதி, திரு ஜயந்த தனபால, பேராசிரியர் சாவித்திரி குணசேகர மற்றும் திஸ்ஸ ஜயதிலக்க ஆகியோரால் ஒப்பமிடப்பட்டு அனுப்பப்பட்ட 'வடமாகாணத்தின் போருக்குப் பின்னரான யதார்த்தங்கள்' என்ற அறிக்கைக்கான எதிர்வினை.**



உங்கள் அறிக்கையின் பிரகாரம் உங்கள் 'பிரதி நிதிகள், இச்சமூகத்தின் ஒரு பகுதியினரை யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் சந்தித்திருக் கிறார்கள். ஆனால் அறிக்கையொன்றினை வெளியிடுவதற்கு முன்பாக வடமாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவரைச் சந்தித்து அவரது அபிப்பிராயத்தைப் பெறுவதற்கான எந்தவொரு முயற்சியையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை.

எனினும் அவ்வறிக்கை தொடர்பிலான எனது பார்வையையும் அபிப்பிராயத்தையும் உங்கள் முன் வைக்க விரும்புகின்றேன்.

அவ்வறிக்கையின் ஒரு பகுதியியல் "வடமாகாண-சபையின் முறையான செயற்பாட்டுக்கு ஏற்படும் தடைகள் குறித்து வெள்ளிக்கிழமை கருத்துக்களம் அமைதியற்றிருப்பதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது. "வட மகாணசபை அதன் மக்களுக்கு தனது கடமை-களையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் வகையில், வடமாகாண முதலமைச்சருக்கும் முறை யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வடமாகாணசபைக்கும் தேவைப்படும் நிதி மற்றும் நிர்வாக வளங்களை வழங்குவதன் மூலம் ஜனாதிபதியும் வடமாகாண ஆளுநரும் தங்களது மேலான ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குவார்கள் என வெள்ளிக் கிழமை கருத்துக்களம் உண்மையான நம்பிக்கை கொண்டுள்ளதாக" அதில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

எனது கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் முன்வைப்பதற்கு முன்னர் உங்கள் பார்வைக்காக கீழ்க்காணும் உண்மைகளைத் தர விழைகின்றேன்.

வடமாகாணசபைக்கான அரசின் நிதியொதுக்கீடு

**1.1 மீண்டுவரும் செலவீனங்கள்**

தேசிய வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கிணங்க, வடமாகாணசபையின் 2014 ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவீனங்கள், ரூ11,622 மில்லியன் களாகும். இதன் பிரகாரம் தனிநபருக்கான செலவீனம் ரூ16,369 ஆக இருக்க ஏனைய

> **வடமாகாணசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஆட்சிபீடமேறிய செப்ரெம்பர் 2013 இலிருந்து, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினைத் தவிர எந்தவொரு சட்டத்தினையும் வடமாகாணசபை நிறைவேற்றவில்லை. எந்தவொரு சட்டத்தினையும் நிறைவேற்றாமல் மாகாணசபை அதன் வருமானத்தினை எவ்வாறு திரட்ட இயலும்?**

மாகாணங்களுக்கான தனிநபர் செலவீன ஒதுக்கீடு, ரூ 10,000 இலும் குறைவாக இருக்கின்றது.

**1.2 மூலதன செலவீனம்:**

2014 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு இணங்க, ஏனைய 8 மாகாண சபைகளுடன் ஒப்பிடுகையில், வட மாகாண சபைக்கே அதிகளவிலான மூலதனச் செலவீட்டு ஒதுக்கீடாக ரூபா5,831மில்லியன்கள் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மரகாணங்களுக்கரன ஒதுக்கீடுகள் கீழ்வருமாறு:

| மாகாணம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மில்.) |
|---|---|
| சப்ரகமுவ | 4,580 |
| மத்திய | 3,927 |
| ஊவா | 3,873 |
| கிழக்கு | 3,546 |
| வட மத்திய | 3,393 |
| மேல் | 2,755 |
| வடமேல் | 2,470 |
| தென் | 2,093 |

மேலதிகமாக, 2013 க்கும் 2016 க்குமிடைப்பட்ட காலப்பகுதியில் அமுல் செய்வதற்காகத்

> **இது மாகாண சபையின் கீழ்வரும் ஒரு விடயமாகையால் இதனை அமுல்படுத்த வட மாகாண சபையின் அனுமதி தேவைப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் இதற்கான அனுமதியை வழங்குவதில் த.தே.கூ.இழுத்தடிப்புச் செய்து வருவதால் ஏற்பட்ட தாமதநிலையால், இதற்கான நிதிவழங்குநர்களில் ஒன்றான AFD, இத்திட்டத்துக்கான தனது நிதியொதுக்கீடான 48 மில்லியன் அமெரிக்க டொலர்களை இரத்துச் செய்வது என்ற தங்களது முடிவினை அறியத்தந்துள்ளது. இது தொடர்பில் முடிவெடுக்க மேலும் காலதாமதமானால் ADB யும் தனது நிதியொதுக்கீட்டினை இரத்துச்செய்யலாம் என்பதாக நான் அறிகின்றேன்.**

திட்டமிடப்பட்ட கீழ்க்காணும் நிகழ்ச்சித் திட்டங் களுக்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட ரூ 21,967 மில்லியனின் ஒரு பகுதியாகவே இவ்வருடத்துக்கான ரூ5,831 மில்லியன் ஆகும்.

| நிகழ்ச்சித் திட்டங்கள் | திட்டங்களுக்கான மொத்தச் செலவீனம் (2013-2016) ரூ.மில்லியன்) |
|---|---|
| மாகாண விசேட அபிவிருத்தி மானியம் | 4,515 |
| பாடசாலைக் கல்வியை மாற்றியமைத்தல் | 1,600 |
| யூனிசெப் திட்டங்கள் | 359 |
| 1,000 பாடசாலைகள் நிறுவும் திட்டம் | 170 |
| மாகாண வீதித் திட்டம் | 2,772 |
| வடக்கு விதிகள் இணைப்புத் திட்டம் | 4,316 |
| உள்ளூர் மட்ட போஷணை இடையீட்டுத் திட்டங்கள் | 370 |
| இரணைமடு சிறுநில நீர்ப்பாசன மற்றும் திட்டங்கள் | 3,625 |
| யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டம் | 3,225 |
| கிளிநொச்சி, முல்லைத்தீவு பாடசாலைகள் புனரமைப்பு | 35 |
| சுகாதாரத்துறை அபிவிருத்தித் திட்டம் | 980 |
| ----------- | |
| மொத்தம் | 21,967 |

**2. விசேட திட்டம்** - யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் விநியோக மற்றும் சுகாதாரத் திட்டம்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்துக்காக அரசு 138.00 அமெரிக்க டொலர் கடன் பெற்றிருக்கிறது. இத்திட்டத்தின் நோக்கங்கள் (அ) இரணைமடுக்குள புனரமைப்பு (ஆ) நீர் விநியோகக் குழாய்கள் மற்றும் 19 கோபுரங்கள் (இ) யாழ் மாநகரசபைக்கான சாக்கடைத்திட்டம் என்பனவாகும்.

இத்திட்டம் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் வேண்டுகோளுக் கிணங்க இத்திட்டத்துக்கான சாத்தியவள செயற்பாடு கள் SMEC யினால் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை அரசின் பங்களிப்பு உட்பட இத்திட்டத்துக் கான செலவீனம் ரூ 23,000 மில்லியன்களாகும். 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசு கைச்சாத்திட்டது. தனது அர்ப்பணிப்புக்கான கட்டணத்தை இலங்கை அரசு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு தொடர்ந்தும் செலுத்தி வருகின்றது.

இது மாகாண சபையின் கீழ்வரும் ஒரு விடயமாகை யால் அதனை அமுல்படுத்துபவர்க்ள் அவர்களே. இத்திட்டத்தை முன்னோக்கி நகர்த்த அவர்களது அனுமதி தேவைப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் இதற்கான அனுமதியை வழங்குவதில் த.தே.கூ இழுத்தடிப்புச் செய்து வருவதால் ஏற்பட்ட தாமதநிலையால், இதற்கான நிதிவழங்குநர்களில் ஒன்றான AFD, இத்திட்டத்துக்கான தனது நிதியொதுக்கீடான 48.00 மில்லியன் அமெரிக்க டொலர்களை இரத்துச்செய்வது என்ற தங்களது முடிவினை அறியத்தந்துள்ளது. இது தொடர்பில் முடிவெடுக்க மேலும் காலதாம தமானால் ADB யும் தனது நிதியொதுக்கீட்டினை இரத்துச்செய்யலாம் என்பதாக நான் அறிகின்றேன்.

மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து வட மாகாணசபைக்கு அரசு தனது ஆதரவையும் ஒத்துழைப்பினையும் வழங்குகின்றதா இல்லையாவென்பதனை நீங்கள் அறிந்திருப்பீர்கள். மேற்குறிப்பிட்ட திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் வட மாகாணசபைக்கு எந்தவிதமான இடையூறுகளோ தடைகளோ இல்லை. இருக்கும் ஒரேயொரு தடை, வடமாகாணத்தை கடந்த 08 மாதங்களாக ஆட்சிசெய்வோரின் திறமையின்மையும் இயலாமையும்தான்.

வடமாகாணசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஆட்சிபீடமேறிய செப்ரெம்பர் 2013 இலிருந்து, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினைத் தவிர எந்தவொரு சட்டத்தினையும் வடமாகாணசபை நிறைவேற்ற வில்லை. எந்தவொரு சட்டத்தினையும் நிறைவேற்றா மல் மாகாணசபை அதன் வருமானத்தினை எவ்வாறு திரட்ட இயலும்? (அரச ஒதுக்கீடுகளுக்கு மேலதிக மாக) மாகாணசபையை நிர்வகிக்க நிரற்படுத்தப்பட்ட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

த.தே.கூ வின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் "உள்ளூர் மற்றும் சர்வதேச உதவிகளுடனான அபிவிருத்தி" என்ற உப தலைப்பில் இவ்வாறு சொல்லப்பட் டிருக்கிறது:

"த.தே.கூ இலங்கை தேசத்துடனும், சர்வதேச சமூகத் துடனும் புலம்பெயர் தமிழர்களுடனும் இணைந்து வடமாகாணத்துக்கான நீண்டகால முதலீடுகள் மற்றும் உதவிகள் தொடர்பிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும். பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களைப் பேணுவதிலும், அவர்கள் புத்துயிர்ப்புப் பெறவும் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு முக்கியமானது. அவர்களின் உதவியையும் நிபுணத்துவத்தையும் நாங்கள் பெறுவோம்"

"யுத்தத்துக்குப் பின்னரான சமூக பொருளாதார அபிவிருத்தி" எனும் தலைப்பில் 2014 பெப்ரவரி 13 ஆம் திகதியன்று தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்ற தேசிய மாநாடொன்றில் உரைநிகழ்த்திய முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன்:

"ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரி காரியதரிசி மற்றும் அமைச்சரவைச் செயலாளர் போன்றோர் உடனிருக்க சாதகமாக நகர்ந்த ஜனாதிபதியுடனான எனது அண்மைய சந்திப்பொன்றில், வெளிநாட்டி லுள்ள எமது சகோதரர்களின் நிதியை, அரச அமைப்புகளினூடாக வடமாகர்ண சபைக்குப் பெறுகையில், இருதரப்பினரும் பரஸ்பரம் அடையக்கூடிய நன்மைகள் குறித்துக் கலந்தா லோசித்தோம். நாங்கள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினைகளில் ஒன்றுதான் இந்த நன்கொடைப் பணம் எங்களை வந்து சேர்வதில் உள்ள தாமதம். ஆதலால் வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதியிலான உள்ளூர் நாணயம் எதுவித தாமதமுமின்றி விரைவாக வந்து சேர்வதை உறுதி செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொண்டேன். இந்நன்கொடைகள் அரசின் அங்கீகாரத்தினை ஏற்கனவே பெற்றிருக்கும் பட்சத்தில், அவை அவற்றின் இறுதி இலக்கினை எவ்வித தடங்கல்களுமின்றி அடைந்து விடும் என ஜனாதிபதியும் அவரது ஆலோசகர்களும் சாதகமானதோர் சமிக்ஞையைத் தந்தார்கள்"

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அதன் தேர்தல் விஞ்ஞாப னத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, புலம் பெயர் தமிழர் களிடமிருந்து நிதியைப் பெற்று முதலீடுகளை ஆரம்பிக்க ஜனாதிபதியோ அல்லது அரசோ தடையாக இருக்கவில்லை என்பது முதலமைச்சரின் உரையிலிருந்து தெளிவாக உள்ளது. இருப்பினும் இன்றுவரை எந்தவொரு முதலீடும் வடமாகாண சபைக்குக் கிடைக்கவில்லை. இதற்கு பொறுப்பாளி கள் யார்? இது தேர்வு செய்யப்பட்ட வடமாகாண ஆட்சியாளர்களின் இயலாமையா? அல்லது அரசினால் விதிக்கப்படும் தடையா?

மேற்கூறிய உண்மைகள் யுத்தத்துக்குப் பின்னரான வடமாகாண யதார்த்தங்கள் குறித்து உங்கள் அறி வுக் கண்களைத் திறக்கும் என நான் நம்புகின்றேன்.

இப்படிக்கு,
**சி.தவராசா**
எதிர்க்கட்சித் தலைவர்
வட மாகாண சபை.

# முயற்சியுடையவர்களாக மாணவர்கள் உருவாக வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டும்

## பேராசிரியர் சத்தியசீலன் தெரிவிப்பு

எதிர்கால சூழ்நிலையில் மாணவர்கள் சுய முயற்சியுடையவர்களாக உருவாக்கப்பட வேண்டுமானால் அவர்களுக்கு வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாணப்பல் கலைக்கழக பட்டப்படிப்புக்கள் பீடபீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்

இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தில் திருமதி அன்னலட்சுமி சின்னராசா ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட படிப்பகம் கட்டடத்திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை பொது நூலகத் தலைவர் ச.சிவசங்கர் தலைமையில் இடம்பெற்ற போது அந்நிகழ்வில் கலந்து கொண்டு படிப்பகத்தின் பெயர்ப் பலகையினை திரை நீக்கம் செய்து வைத்து உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

யாழ்ப்பாணக்குடாநாட்டில் பத்திரிகைகள் எடுத்துப்போடுவதற்கு சில இடங்களில் ஆட்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் இணுவில் பொது நூலகத்தில் பல செயற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இணுவில் புண்ணிய பூமி எந்த பிரச்சினைக் காலத்திலும் பாதிக்கப்படாத பூமியாக விளங்குகின்றது. பலர் உயர் நிலையினை அடைய அனுக்கிரகம் வழங்கியுள்ளது. இப்பூமி சைவமும் தமிழும் உயர்வாக கதைக்கப்பட்ட இடமாக இது விளங்குகின்றது. இவ்வகையில் வித்தியாசமான உணர்வாக இது உள்ளது.

இணுவில் கிராமம் கல்விக்கு புகழ் பெற்ற கிராமங்கள் வரிசையில் முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய வளர்சிக்கு பெற்றோர்கள் ஒத்தழைப்பாக செயற்பட வேண்டும். ஆசிரியர்கள் தான் எங்களை உருவாக்கியவர்கள் மற்றவர்கள் படித்து முன்னேறுவதை அல்லது வளர்ச்சி அடைவதை மற்ற துறைசார்ந்த யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் ஆனால் ஆசிரியர் ஏணிப்படியாக இருந்து மற்றவர்களை உயர்த்தி விடுவார்கள். இம்மண்ணைச் சேர்ந்தவர்கள் போட்டி பொறாமை எரிச்சல் போன்றவை இல்லாது எல்லோரும் சேர்ந்து தேரினை இருப்பிடத்திற்கு கொண்டு வருவதினைப் போன்று ஒற்றுமையாக செற்படுகின்றமை மகிழ்சிக்குரியது.

இந்நூல் நிலையம் ஏனைய வசதி வாய்ப்புக்களை உருவாக்கி கல்வியினை வளர்ச்சியடையச் செய்வதற்கு பல்வேறு வழிவகைகளில் செயற்படுகின்றது. இது மகிழ்விற்குரியது. இத்தகைய செயற்பாட்டினை மேற்கொள்பவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் என்றார். (63)

## கட்டுரை வினாவிடை வெற்றி பெற்றோர் விபரம்

(முழங்காவில்)

பூநகரி புகழ்மாலை இறுவட்டின் வரலாற்றுத் தொகுப்பு கட்டுரை வினாக்களுக்கு விடை எழுதி அனுப்பியவர்களில் அதிஷ்டசீட்டுமூலம் தெரிவு செய்யப்பட்ட மூன்று அதிஷ்டசாலிகளினதும் ஆறுதல் பரிசு பெறுவோரினதும் பெயர் விபரம் பூநகரி மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவில் வெளியிடப்பட்டது.

1ஆம் இடம் ப.பாலகுமார் ( இல 55, முத்து விநாயகர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்)

2ஆம் இடம் ய.சாருஜா (செட்டியார் தரை வெளி, பன்னிக்குடா)

3ஆம் இடம் வி. பரமேஸ்வரி (நெடுங்குளம் பூநகரி)

10 ஆறுதல் பரிசு பெறுவோர்

சி. தனுசிக்கா (பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்), அ.தவரத்தினரா்சா (வட்டு வடக்கு யாழ்ப்பாணம்), எஸ்.அர்மனா (தம்பிராய், பூநகரி), ஜெ.அபிசான் (கோபாலபிட்டி பூநகரி),சு.ஜெனோசன் (உரும்பிராய் கிழக்கு), ந.ஜங்கரன் (விநாயகபுரம், துணுககாய்), சு.நாகம்மா (மட்டுவில்நாடு மேற்கு, பூநகரி), அ.அமுதாஸ் (பொலிகண்டி) ஜெ.ஆரணி செட்டியகுறிச்சி பூநகரி), த.விதுர்சிகா உரும்பிராய் மேற்கு) (112)

## 254 வழக்குத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மதுவரித்திணைக்களப்பகுதியில் கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து சட்டவிரோத மது பாவனையாளர்களுக்கு எதிராக 254 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதுடன் இவ்வழக்குகளில் நான்கு இலட்சத்து 83ஆயிரம் ரூபா நிதிமன்றத்தினால் தண்டம் அறவிடப்பட்டிருப்பதாக யாழ். மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி சு.செந்தூர்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

யாழ். மதுவரித்திணைக்களப் பகுதியில் இவ்வாறு சட்டவிரோதமாக மதுபாவனையில் ஈடுபட்டிருந்த 254 பேரும் பிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக அந்த அந்த நீதவான் நீதிமன்றங்களில் வழங்குப்பதிவு செய்யப்பட்டே இவ்வாறு நீதிமன்றத்தினால் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

இவர்கள் சட்டவிரோத சாராயம், பியர், கள் போன்றவற்றை விற்பனை செய்தவேளையே பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## வித்யா சாகரம் விருது வழங்கி மயூரசர்மாவுக்கு கௌரவம்

(சுன்னாகம்)



சுன்னாகம் செல்வபூமி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தில் சர்வசாதகராக இருந்து கிரியைகளை சிறப்பாக வழி நடாத்திய பிரம்ம ஸ்ரீ ஜெ.மயூர சர்மா (M.A) "வித்யா சாகரம்" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தேசமான்ய து.கு.ஜெகதீஸ்வரக் குருக்களின் புத்திரனான இவர் புவனேஸ்வரி அம்மன் ஆலய தர்மகர்த்தாவினாலும், அடியவர்களினாலும் கடந்த 19ஆம் திகதி ஆலய கும்பாஷேக ஆண்டு பூர்த்தி விழாவில் கௌரவிக்கப்பட்டார்.

யாழ். குடாநாட்டில் பல ஆலயங்களின் கும்பாபிஷேகம், மகோற்சவம் என்பவற்றில் சர்வசாதகராக இருந்து கிரியைகளை சிறப்பாக வழி நடாத்தி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ)



உலக சுற்றுச்சுழல் தினமாகிய கடந்த வியாழக்கிழமை முதல் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் கொடிவார நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதனை வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆரம்பித்து வைத்தார் (48)

## விண்ணப்பங்கள் கோரல்

கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மேல்மாகாணம்) க்கு உதவிப்பணிப்பாளர் (தொழில்நுட்பம்,சட்டத்துறை, பொறியியல்) அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொறியியல்,விஞ்ஞானம்,விவசாயம்,சட்டம் ஆகியவற்றில் பல்கலைக்கழகத்தில் பெற்ற பட்டத்துக்குரியவர்கள் இரண்டு வருட அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர், கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா) சிராவஸ்தி மந்திர இல: 32,சர்மார்கஸ் பிரனாந்து மாவத்தை,கொழும்பு-07 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில். அனுப்ப வேண்டும்.

கடிதஉறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும். (105)

## பதிவிறக்கப் பெட்டகம்

இயக்குனர்கள் என்பவர்களின் முதன்மையான பணி கதைசொல்வது கிடையாது. அவர்கள் காட்சியமைப்புகளை கருக்கொள்பவர்க்ள். கதையும், திரைக்கதையும் பிறருடையதாக இருப்பதால் இயக்குனரின் பணி பங்கமுறுவதில்லை. குறிப்பாக ஒளிப்பதிவுக்கலையில் தேர்ச்சி பெற்ற பாலு மகேந்திரா போன்ற கலைஞர்கள் காட்சிகளை வழவமைப்பதில், கருக்கொள்வதில் பெரும் தேர்ச்சி பெற்றவர்கள். ஆனால் அவர்களுக்கு கதைகளை தேர்ந்தெடுக்கும், உருவாக்கும் திறம் வாய்க்கப்பெறாது இருக்கலாம். அதில் எந்த தவறும் இல்லை. ஒரு மொழியின் திரைத்துறையில் திரைக்கதை ஆசிரியர்கள் என்று ஒரு பிரிவு இருக்கவேண்டும். அவர்கள் இலக்கியத்திலிருந்தோ, சொந்தமாகவோ திரைக்கதைகளை உருவாக்கி இயக்குனர்களுக்கு கொடுக்கவேண்டும். இயக்குனர்கள் திரைக்கதையில் மாற்றங்களைச் செய்யலாம் ஆனால் அவர்களே கதைகளையும், திரைக்கதைகளையும் உருவாக்க வேண்டிய அவசியம் கிடையாது. ஹாசிமாட்டோ ஷினோபு என்பவர்தான் ரோஷமான் படத்தின் திரைக்கதை வடிவத்தை எழுதி எடுத்துக்கொண்டு போய் குரோசாவாவை சந்தித்தார். சாவிட்டினி என்பவர்தான் சைக்கிள் திருடர்கள் திரைக்கதையை எழுதியபின்னர் விட்டோரியா டிசிகாவை சந்தித்தார்.

தமிழ் சினிமாவிலும் கூட இயக்குனர்கள் திரைக்கதையாசிரியர்களை பயன்படுத்தும் பழக்கம் நிறையவே இருந்திருக்கிறது. நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை எழுதிய மலைக்கள்ளன் நாவலுக்கு திரைக்கதை வசனத்தை கலைஞர் கருணாநிதி எழுதினார்; ஸ்ரீராமுலு நாயுடு தயாரித்து இயக்கினார். எப்போதிருந்து இயக்குனர்களே அவர்கள் சொந்தக் கதையை சொல்லவேண்டும் என்ற பழக்கம் உருவானது என்று தெரியவில்லை. ஏதோ ஒரு காரணத்தால் திரைக்கதையாசிரியர்கள் என்ற ஒரு திறமையாளர் பிரிவு உருவாகவில்லை. ஹொலிவுட்டைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஸ்டுடியோவிலும் திரைக்கதை இலாகா இருக்கும். அதற்கு திரைக்கதையாசிரியர்கள் திரைக்கதைகளை அனுப்புவார்கள். அந்த இலாகாவினர் அவற்றை பரிசீலித்து சிலவற்றை தேர்ந்தெடுத்து தயாரிப்பு நிர்வாகிக்கு அனுப்புவார்கள். அவர் அதை படமாக்கலாம் என்று முடிவு செய்தால் எந்த இயக்குனர் பொருத்தமாக இருப்பார் என்று யோசிப்பார். அப்படி இயக்குநரை நியமித்த பிறகு அவருடன் இணைந்து நடிக நடிகையர்களையும் பிற தொழில்நுட்ப கலைஞர்களையும் தேர்ந்தெடுப்பார்கள்.

தமிழ் சினிமாவின் இன்றைய அவசியத் தேவை திரைக்கதை ஆசிரியர்கள் என்ற பிரிவை உருவாக்குவதுதானோ என்று தோன்றுகிறது. திறமை வாய்ந்த இயக்குனர்கள்கூட கதையை உருவாக்கவும், திரைக்கதை எழுதவும் அநாவசியமாக தங்கள் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக வசந்தபாலன் நல்ல இயக்குனர், ஆனால் அரவான் படத்தின் திரைக்கதையாக்கத்தில் பல குளறுபடிகள் செய்துவிட்டார். வசனம் எழுதுவதற்கு மட்டும் எழுத்தாளர்களை பயன்படுத்துகிறார். அவருக்கும் கூட உண்மையில் நல்ல திரைக்கதை ஆசிரியர்கள் தேவை என்றுதான் நினைக்கிறேன்.

பாலு மகேந்திராவுக்கு இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு இருந்ததை அனைவரும் குறிப்பிடுகிறார்கள். இப்படி இலக்கியம், கலைப்படம் இரண்டிலும் ஈடுபாடு கொண்ட அவரால் ஒரு தமிழ் நாவலைக்கூட திரைப்படமாக்க முடியவில்லை என்பது மிகுந்த வியப்பாக இருக்கிறது. வெகுஜன சினிமாவின் எல்லைகளுக்கு உட்பட்டே படமாக்கக் கூடிய நாவல்களும், குறுநாவல்களும் நிறைய இருக்கின்றன. உதாரணமாக மோகமுள் நாவலேகூட பாலு மகேந்திரா எடுத்திருந்தால் பன்மடங்கு சிறப்பாக இருந்திருக்கும் என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை. ஆனால் சிறந்த காட்சிக்கலைஞரான அவரைப் போன்றவர்களுக்கு நாவலை திரைக்கதையாக்கும் படைப்பு மனநிலை சாத்தியப்படாமலிருக்க எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. அதன் பொருட்டே திரைக்கதை ஆசிரியர்கள் என்ற பிரத்யேகமான படைப்புத்திறன் கொண்டவர்கள் உருவாக வேண்டிய தேவை இருப்பதாகத் தோன்றுகிறது. – ராஜன் குறை

திரைப்படங்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. எந்த ஒரு கலைப் படைப்பையும் உணர்ந்து உள்வாங்குவதற்கு, 'பகுத்தறிந்து புரிந்துகொள்ளுதல்' அவசியம் இல்லை என்பது என் கருத்து. ஒரு திரைப்படத்தில் உங்களுக்குச் சொல்வதற்கு ஏதாவது இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். அத் திரைப்படம் உங்களைப் பாதித்து இருந்தால் அதைப்பற்றி விவரிக்க வேண்டிய தேவை இல்லை. பாதிக்காத பட்சத்தில் எவ்வளவு விவரித்து விளக்கப்பட்டாலும் அப்படம் உங்களைப் பாதிக்கப் போவதில்லை.

– ஃபெட்ரிக்கோ ஃபெலினி.

# உலகப்புகழ் பெற்ற சமூகவியல் நிபுணர்கள்

## ஐ.நா.விசாரணைக்குழுவில் அங்கம்

## கசிகிறது தகவல்



(கொழும்பு)

இலங்கை தொடர்பான ஐ.நா.விசாரணைக்குழுவில் இரு சமூகவியல் தொழில்நுட்ப நிபுணர்களை இணைத்துக் கொள்ள முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இருவரும் உலகப்புகழ் பெற்றவர்களாக இருப்பர் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன.

அதேவேளை ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக நியமிக்க உள்ள சர்வதேச விசாரணைக் குழு நியமிக்கப்பட்டால், அது இலங்கைக்கு பயங்கரமான அபாயமாக இருக்கக் கூடும் என முன்னாள் ராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

குறித்த சர்வதேச விசாரணைக் குழுவின் தலைவர் பதவியை சர்வதேசத்தில் நன்மதிப்பை பெற்ற ஒருவருக்கு வழங்க நவநீதம்பிள்ளை முயற்சித்து வருகிறார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனானை அதறகாக தெரிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன. கொபி அனான் அதனை நிராகரித்துள்ளார் எனவும் தயான் ஜயதிலக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இராஜதந்திர ரீதியில் முன்னாள் செயலாளர் நாயகத்திற்கு இருக்கும் வரவேற்புக் காரணமாக அவரைத் தலைவர் பதவிக்கு தெரிவுசெய்ததாக கூறப்படுகிறது.

இது அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளின் தந்திரம் என இராஜதந்திரிகள் கோடிட்டுக்காட்டியுள்ளனர்.

கொபி அனான் போன்ற நோபல் பரிசு பெற்ற ஒருவரை விசாரணைக்குழுவின் தலைவராக நியமித்தால், அவருக்கு வீசா வழங்குவதை இலங்கை அரசாங்கம் நிராகரிக்க முடியாது.

அத்துடன் அவர் இலங்கையில் பயணிக்கும் இடங்கள் மற்றும் சந்திக்கும் நபர்கள் தொடர்பில் வரையறைகளை விதிக்க முடியாது.

கொபி அனானுக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், இலங்கைக்கு சார்பான நாடுகளும் இலங்கையை விமர்சிக்க கூடும்.

13 பேரைக் கொண்ட சர்வதேச விசாரணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் சர்வதேச புகழ்பெற்ற தொழில்நுட்ப நிபுணர்கள்.

மேற்படி விசாரணைக்குழுவை நியமிப்பதன் மூலமாக நவநீதம்பிள்ளை இலங்கைக்கும் இலங்கை இராணுவத்திற்கும் பாரிய அழுத்தங்களை கொடுக்க முயற்சித்து வருகிறார் எனவும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் தயாரித்துள்ள மனித உரிமை தொடர்பான இறுதியறிக்கை அடுத்த வருடம் மார்ச் மாதம் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதன் போது இலங்கைக்கு விஞ்ஞான ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான தடைகள் விதிக்கப்படக் கூடும் எனவும் தயான் ஜயதிலக்க கூறியுள்ளார்.

# பாம்பு பெண்ணுக்கு பிரசவம்



(கொழும்பு)

"பாம்புப் பெண்" என அறியப்பட்ட, கொள்ளுப்பிட்டி களியாட்ட விடுதியில் இரவு நேர நடனப் பெண்ணாகப் பணியாற்றிய நிரோஷா விமலரத்ன (டிலானி) என்பவர், பிரசவத்துக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், இவர் தங்கியுள்ள வைத்தியசாலை விடுதிக்கு நேற்று முன்தினம் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டிருந்த நிலையில் சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் அந்த பாதுகாப்பு வாபஸ் பெறபட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய நபர்கள் அநாவசியமாக குறித்த வைத்தியசாலை விடுதிக்கு பிரவேசிக்கக் கூடாது என்பதற்காகவே இந்தப் பொலிஸ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

இதற்காக இரு கான்ஸ்டபிள்கள் பாதுகாப்பு கடமையில் ஈடபட்டிருந்த நிலையில் சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் அவ்விருவரும் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மூன்றாம் திகதி இவர் பிரசவத்துக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்று வைத்திசாலை தகவல்கள் மேலும் கூறின.

பாம்பொன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இப்பெண்ணுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் தர அனுமதிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான சுற்றுநிருபத்தை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கு மாணவர்களை முதலாம் வகுப்புக்கு சேர்க்க எதிர்பார்த்துள்ள பெற்றோர் அல்லது பாதுகாவலர் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கமைவாக விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தெரிவு செய்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு கோரியுள்ளது.

# ரஷ்ய கடற்படைக்கப்பல்கள் கொழும்பில் நங்கூரம்



ரஷ்யாவின் பசுபிக் பிரிவின் மூன்று கடற்படைக் கப்பல்கள் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன. ரியர் அத்மிரல் விளடீமீர் ஏ.திம்மித்ரிவ் தலைமையிலான இந்த ரஷ்யக் கப்பல்களின் அதிகாரிகள் ஓய்வுக்காக கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளனர்.

மார்ஷல் ஷப்போசினிகேவ், இல்ருக்ட், பயான் ஆகிய கப்பல்களை இலங்கைக் கடற்படையினர் கடற்படையின் மரபுகளுக்கு இணங்க வரவேற்றனர். மார்ஷல் ஷப்போசினிகேவ் என்ற கப்பலின் கட்டளை அதிகாரியாக முதல் தர கப்டன் தகுதியைக் கொண்ட திமித்திரி வி.பஸ்சென்யூக் பணியாற்றி வருவதுடன் அந்தக் கப்பல் 162.8 மீற்றர் நீளத்தைக் கொண்டது.

7 ஆயிரத்து 595 தொன் எடை கொண்ட இந்தக் கப்பலில் 38 அதிகாரிகளும் 321 கடற்படையினரும் பணியாற்றி வருகின்றனர். கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ள ரஷ்யக் கப்பல் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை இக்கப்பல்கள் நங்கூரமிடப்பட்டிருக்கும்.

ரஷ்ய கடற்படையினர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் இலங்கை கடற்படையினர் ஏற்பாடு செய்துள்ள விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# ஜனாதிபதி வேட்பாளராக ரணில் கொஞ்சமும் ஏற்றுக்கொள்ள முடியாது

### ஜே.வி.பி.தூக்குகிறது போர்க்கொடி



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை பொது வேட்பாளராக நிறுத்துவதை எதிர்ப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி அவரை பொது வேட்பாளராக நிறுத்தினால் நம்பிக்கை நொருங்கி விடும் எனவும் ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்ரமசிங்கவை பொதுவேட்பாளராக ஜே.வி.பி ஏற்றுக்கொள்ளாது எனவும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலம் குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பதால், ஜே.வி.பி இன்னும் அது பற்றிய தெளிவான முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை.

அரசாங்கம் அடுத்ததாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துமா என்பது பற்றி எமக்கு எதுவும் தெரியாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்களின் தீர்ப்பு தனக்கு எதிராக திரும்பியுள்ளது என்பதை அறிந்தால், அவர் தேர்தலை நடத்தாது பின்வாங்கி மாற்று வழிக்குச் செல்லக் கூடும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் சில அதிகாரங்களை குறைத்து மேலும் ஆறு ஆண்டுகளுக்கு அதிகாரத்தை தக்கவைக்க அவர் முயற்சிக்கக் கூடும்.

சூழகமான தனது அதிகாரங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கைவிடுவார் என்று நம்பமுடியாது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியில் பேசி அது பற்றிய முடிவை ஜே.வி.பி.எடுக்கும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை ஜே.வி.பி.புறக்கணிக்கும் என் வெளியாகியுள்ள செய்திகளில் உண்மையில்லை. அவ்வாறான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் லால் காந்த குறிப்பிட்டுள்ளார்.

# கனரக சரக்கு ரயில் சேவை விரைவில் தெற்கில் ஆரம்பம்

மொனோ ரயில் தொடர்பான ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தை பூர்த்தியடைந்துள்ளது. மொரட்டுவ தொடக்கம் தலங்கம வரையிலான பிரதான நிறுத்தம் மற்றும் உட்பிரவேசித்தல் என்பனவற்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம் என நீர்வள மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஹெரிசன் கேட்ட வினாவுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், கொழுமபில் நிலவும் வாக்ன நெரிசலை தவிர்க்கும் வகையில் கடந்த 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை காலை 6.00 மணி தொடக்கம் 10.00 மணிவரையில் பார ஊர்திகள் நகருக்குள் உட்பிரவேசிப்பது தடை செய்யப்பட்டிருந்து. எனினும் கப்பலில் பொருட்களை ஏற்றுவதில் உள்ள தாமதத்தை தவிர்ப்பதற்க்க மீண்டும் அச்சட்டம் மாற்றப்பட்டது. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளேன் என அவர் தெரிவித்தார். கொழும்பில் காணப்படும் வாகன நெரிசலைத்தவிர்க்க இந்தக் கன்டெயினர் ரயில்களை கொண்டு வரும் திட்டமிருந்தது. எனினும் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது.

கொழும்பு நகரில் மேலதிக வீதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. தற்போது மேலதிக வீதிகள் இரண்டை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டு வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரு சுன்னாகம் வாசிகளுக்கு சீட்டிழுப்பில் பணப்பரிசுகள்


சுன்னாகத்தில் அதிஷ்ட சீட்டுக்களைப் பெற்றுக் கொண்ட இரண்டு அதிஷ்டசாலிகள் பணப் பரிசுகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர். கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிஷ்டம் பார்க்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் சபையின் சீட்டிழுப்பில் மல்லாகத்தை சேர்ந்த ஒருவர் பத்தூயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவருக்கு 3 இலக்கங்களும் சிங்கராசியும் பொருந்தியிருந்தன. 05 ஆம் திகதி ஜயோதா சீட்டிழுப்பில் உரும்பிராயைச் சேர்ந்த ஒருவருக்கு மூன்று இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் பொருந்தியதினால் அவர் ஐம்பதாயிரம் ரூபா பரிசுக்குரியவரானார்.

இவ்விரண்டு அதிஷ்டச் சீட்டுகளும் சுன்னாகம் காங்கேசன் துறை வீதியில் அதிஷ்ட இலாபச் சீட்டுக்களை விற்பனை செய்யும் வைத்தியலிங்கம் நடராசா என்பவரிடமே பெற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (137)

07. பின்வரும் வரை படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

தேநீர் விருந்துபசாரம் ஒன்றின் விருந்தாளிகள் பெற்றுக்கொண்ட சிற்றுண்டிகளின் விபரத்தை கீழுள்ள வரைபடம் காட்டுகின்றது.




1. விருந்துபசாரத்தில் மூன்று சிற்றுண்டிகளையும் உண்டோர் எத்தனை பேர்? ....................

2. வடை,றோல் என்பவற்றை மட்டும் விரும்பி உண்டோர் எத்தனை பேர்? ....................

3. வடையை மட்டும் விரும்பி உண்டோர் எத்தனை பேர்? ....................

4. விருந்துபசாரத்தில் கேக்கை உண்டோர் எத்தனை பேர்? ....................

5. விந்துபசாரத்தில் எந்தவொரு சிற்றுண்டியையும் சாப்பிடாதோர் எத்தனை பேர்?....................

6. விருந்துபசாரத்தில் கலந்துகொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ....................

08) கோவில்த் திருவிழா ஒன்றிற்கு சிவப்பு, மஞ்சள், நீலம், என்ற ஒழுங்கில் மின்குமிழ்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. 83 ஆவதாக ஒளிர்ந்த மின்குமிழின் நிறம் என்ன?

....................


09) 1Km நீளமான வீதியொன்றின் இருமருங்கிலும் 50m இடைவெளியில் மின்கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன. இதற்கு எத்தனை கம்பங்கள் தேவைப்பட்டிருக்கும்?

....................

10) 6 மாடுகள் 6 சாக்குப் புல்லை 6 நாட்களில் உண்ணுமாயின் 1மாடு ஆறு சாக்குப்புல்லை எத்தனை நாட்களில் உண்ணும்?

....................

11) நிழற்றிய பகுதியின் பின்னம் என்ன?



....................

12) குமாரிடம் குறிப்பிட் தொகைப் பணம் இருந்தது. அதன் அரைப் பங்கை வங்கியில் வைப்பிலிட்டான். மீதியில் அரைப் பங்கை உணவுத் தேவைக்கு எடுத்துக் கொண்டான். இறுதியாக அவனிடம் எஞ்சிய பணம் ரூபா 1600.00 எனின் ஆரம்பத்தில் குமாரிடம் இருந்த பணம் எவ்வளவு?

....................

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II

# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

01. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடைஎழுதுக.

விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் 1847ஆம் ஆண்டு அமெரிக்காவில் மிலான் நகரில் பிறந்தார். அவரது தந்தை சாதாரண வியாபாரி என்றாலும் கூட எடிசனின் வளர்ச்சிக்குப் பெற்றோர் கடுமையாகப் பாடுபட்டனர். எடிசனுக்குப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம். இந்த ஆர்வம் வளரக் காரணம் அவரது தந்தை தான். எடிசன் ஒவ்வொரு புத்தகத்தையும் படித்து முடிக்கும் போது அவருக்குப் பரிசு வழங்கிப் பாராட்டுவாராம். எடிசனுக்கு முன்பு சேர் ஹம்பிரி டேவி என்பவர் மின்விளக்கை கண்டு பிடித்தாலும் அது குறைவான நேரமே ஒளிர்ந்தது. ஆனால் எடிசன் உருவாக்கிய மின் விளக்கு நீண்ட நேரம் ஒளிர்ந்து சாதனை படைத்தது.

1) தோமஸ் அல்வா எடிசன் எங்கே பிறந்தார்? ....................

2) எடிசனின் தந்தையார் தொழில் என்ன? ....................

3) எடிசனின் பொழுது போக்கு என்ன? ....................

4) எடிசனின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்தவர்கள் யாவர்? ....................

....................

5) எடிசனின் கண்டுபிடிப்பு என்ன? ....................

6) எடிசன் பிறந்த ஆண்டு என்ன? ....................

7) இப்பந்தியிலுள்ள இறந்தகால படர்க்கை வினைமுற்று இரண்டு தருக?

.................... ....................

8) இப்பந்தியிலுள்ள வினையெச்சம் இரண்டு தருக?

.................... ....................

9) இப்பந்தியிலுள்ள படர்க்கைப் பெயர்கள் இரண்டு தருக?

.................... ....................

10) இப்பந்திக்குப் பொருத்தமான பழமொழி ஒன்று தருக?

....................

11) செயற்கை ஒளி முதல் எது?

....................

**12) ஒத்த சொல் தருக.**

அ) ஆர்வம் -   இ) ஆண்டு -
ஆ) ஒளிர்ந்தது -   ஈ) வெகுமதி -

**13) பின்வரும் பதங்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

அ) நாடு -   இ) புத்தகம் -
ஆ) மின்குமிழ் -   ஈ) பரிசு -

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக?**

அ) கலுவேல்ல -
ஆ) விது ஹல்வதி -

**15) கீழ்வரும் மரபுத் தொடர்களின் பொருள்களை எழுதுக.**

1. கைகடித்தல் -
2. கழுத்தறுத்தல் -
3. கண்மலர்தல் -
4. கண்மூடுதல் -
5. கண்வளர்தல் -
6. காது கொடுத்தல் -

**03) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

1. இரு / அந்த / நிழல் / பக்கங்களிலும் / வீதியில் / மரங்கள் / நின்றன.

.................................................................................................

2. செய்வதைக் / துணிப்பொம்மைகள் / சிவநந்தினி / கவனித்தாள் / கூர்ந்து

.................................................................................................

**04) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. நீரிலும் நிலத்திலும் வாழக் கூடியது
   1. தவளை   2. மீன்   3. மனிதன்
2. வேகமாக ஓடக்கூடிய பறவை
   1. தூக்கணாங்குருவி   2. தீக்கோழி   3. கிவி
3. குட்டி ஈன்று பாலூட்டும் மீன்
   1. டொல்பின்   2. சுறா   3. பாரை
4. சுண்ணாம்பினாலான புறவன் கூட்டைக் கொண்டது.
   1. நத்தை   2. சோகி   3. மேற்கூறிய இரண்டும்
5. கூடு கட்டத் தெரியாதது,
   1. காகம், மைனா   2. குயில்,கோழி   3. செம்பகம், மரங்கொத்தி
6. ஆமை முட்டையின் நிறம்,
   1. மஞ்சள்   2. வெள்ளை   3. கபிலம்
7. சூரிய ஒளியிலுள்ள நிறம் அல்லாதது,
   1. சிவப்பு   2. செம்மஞ்சள்   3. கறுப்பு
8. ஊசித் துளைக்கமராவின் இயல்பு,
   1. தலைகீழான விம்பம்   2. பொருட்களை விடச் சிறியது   3. மேற்கூறிய இரண்டும்
9. வீட்டு ஈ பரப்பும் நோய் அல்லாதது
   1. வாந்திபேதி   2. நெருப்புக்காய்ச்சல்   3. ஜப்பானிய மூளைக்காய்ச்சல்



10. பசுப்பாலை நற்பாதுகாப்புச் செய்யும் முறையைக் கண்டு பிடித்தவர்
    1. லூயி பாஸ்ரர்   2. மார்க்கோனி   3. கலிலியோகலிலி
11. கட்புல செவிப்புல சாதனம்
    1. வானொலி   2. தொலைக்காட்சி   3. தொலைபேசி
12. தற்போதை பதிவுத்தபாற் கட்டணம்
    1. 20.00   2. 30.00   3. 35.00
13. நீலமும் பச்சையும் சேர்க்கும் போது உருவாகும் நிறம்
    1. மஞ்சள்   2. நீலம்   3. ஊதா
14. மூடிய உருவம் ஒன்று தயாரிக்க ஆகக்குறைந்தது எத்தனை நேர் கோடுகள் தேவை
    1. 5   2. 6   3. 3
15. உள்ளக விளையாட்டுக்களில் அடங்காதது
    1. சதுரங்கம்   2. எல்லே   3. மேசைப்பந்து

**05. சரியாயின் ✓ எனவும் பிழையாயின் X எனவும் அடையாளம் இடுக.**

1. பச்சைக் காய்கறிகளை வெட்டுவதற்கு முன் கழுவுவது சிறப்பாகும் ( )
2. பாதசாரிகள் எப்போதும் இடது பக்கத்தால் செல்லுதல் வேண்டும் ( )
3. நெப்பந்திசு பூச்சியை உணவாக உண்ணும் தாவரமாகும் ( )
4. பப்பாசி ஆணிவேர் கொண்ட தாவரமாகும் ( )
5. பல்லி முட்டை மஞ்சள் நிறமாகும் ( )

**06. பின்வருவன குறிப்பவை யாவை?**

(1) ..........................

(2) ..........................

(3) ..........................

(4)



..........................

(5)



..........................

(6)




..........................

(7)




..........................


(8)



(9)



(10)



# தடம்மாறி பயணிக்க துடிக்கிறார் திகாம்பரம்

ஆளும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நுவரெலிய நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்கு செல்லப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றுக் கொழும்பில் வெளியாகியுள்ள சிங்கள மற்றும் ஆங்கில செய்தித்தாள்களில் இந்த விடயம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியில் அமைச்சு பதவி கிடைக்காமை காரணமாகவே அவர் கட்சிமாறப் போவதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட திகாம்பரம பின்னர் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார்.

இந்தநிலையில் இரண்டு கட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் மற்றும் ஒரு பேச்சுவார்த்தை இந்த வாரத்தில் இந்தியாவில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பில் பதில் அளித்துள்ள திகாம்பரம், தாம் எதிர்க் கட்சிக்கு செல்லப்போவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் தமக்கிருக்கும் செல்வாககை குறைக்கும் நடவடிக்கையாகவே இந்தச் செய்தியை தாம் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவுப்படுத்தியுள்ளதாகவும் திகாம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மீசாலை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 6.15 முதல் 7.15 மணி வரையுள்ள சுபவேளையில் இடம் பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி விசேட பூசைகள நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 10 ஆம் திகதி காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (இ)



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடவடிக்கை அண்மையில் இடம்பெற்றது. இதில் கரைச்சிப் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (29)

# இலவச மருத்துவ முகாம்

(திருநெல்வேலி)

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடமாடும் இலவச மருத்துவ முகாம் ஒன்ற அண்மையில் அரியாலை, பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

இரத்த அழுத்தம், நீரிழிவு, கொலஸ்ரோல் போன்றவற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. வைத்திய கலாநிதி வி.ஜனகன் நோயாளிகளுக்கான வைத்திய சிகிச்சையையும், ஆலோசனைகளையும் வழங்கினார். நோய்களுக்கான மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

கிராம சேவையாளர் இ.சந்திரகுமார் இவ் இலவச மருத்துவ முகாமுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (137)

# மன்னாரில் காணிகள் பகிர்ந்தளிப்பு விவசாயிகளுடன் கலந்துரையாடல்

மன்னார் உயிலங்குளம் கல்மோட்டையில் உள்ள 50 ஏக்கர் புலவு காணி பகிர்ந்து வழங்குவது தொடர்பில் மன்னார் அரச அதிபர் விவசாயிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

எனினும் 50 ஏக்கர் பரம்பரை விவசாய காணியை யாருக்கும் பகிர்ந்து வழங்கவேண்டாம் எனவும், இவ்வாறு பகிரப்படும் நோக்கம் நிறைவேறினால் நூற்றாண்டு காலமாக புலவு காணியில் விவசாயம் செய்த 110 விவசாய குடும்பங்கள் நடுத்தெருவுக்கு தள்ளப்படும் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் 50 ஏக்கர் காணியில் குடியமர்த்தும் நடவடிக்கையினால் முற்றாக குளத்தின் நீர் கொள்ளளவில் மாற்றம் ஏற்பட்டு விவசாய நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடையும் அவல நிலை தோற்றுவிக்கப்படும் எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (92)

# உபதபால் அதிபர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை

(வலி.மேற்கு)

16 வருடங்களின் பின்னர் உபதபால் அதிபர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சையில் 52 பேர் மட்டுமே சித்தியடைந்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டில் உபதபால் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு ஓய்வூதியர் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டனர்.

இவ்வாறு வடமாகாணத்தில் 2012/2013 ஆம் ஆண்டில் 247 உபதபால் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் வினைத்திறமை காண் தடைப்பரீட்சைகளில் தோற்றினர்.

இதில் வடமாகாணத்தில் 52 பேர் மட்டுமே முழுமையாக சித்தியடைந்துள்ளனர்.

பெரும்பாலானவர்கள் பரீட்சையில் சித்தியடையாததால் விரைவில் இப் பரீட்சையை மீள வைக்குமாறு வலியுறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (92)

# ஆடு நனைவதாக கண்ணீர் சிந்தும் ஓநாய்கள்...

## திக்கம் வடிசாலைகுறித்து பசுபதி சீவரத்தினம் கருத்துரை

அறிக்கைகள் மூலம் மக்களுக்கு உணர்ச்சியூட்டி, மக்களுக்குப் பெரும் அழிவையும் தமக்குப் பெரும் பதவிகளையும் பெற்று வரும் இனவாத அரசியல் வாதிகளில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் திககம் வடிசாலை சம்பந்தமான உண்மைக்கு மாறான ஓர் அறிக்கையை பத்திரிகைகளில் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

இவர்களால் வெளியிடப்படும் அறிக்கைக்கும் யதார்த்தமான நடைமுறைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையென்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய பாரிய பொறுப்பு பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் என்ற வகையிலும், பனை தென்னை சார் தொழிலாளர்களோடு நீண்டகாலமாகப் பழகி அவர்களது உரிமைக்கான பல போராட்டங்களில் ஈடுபட்டவன், ஈடுபட்டு வருபவன் என்ற வகையிலும் எனக்கு உண்டு என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

வரலாற்றை அறியாதவர்கள் போல, தங்கள் பதவிக்கான அரசியல் இலாபங்களுக்காக அறிக்கைகளை அடிக்கடி விட்டுக்கொண்டிருக்கும் இனவாத அரசியலாளர்களில் ஒருவரான எம்.பி.சிவஞானம் சிறிதரன் அவர்களே! பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் சீவல் தொழிலாளர் நலன் கருதிய நல்லெண்ணம் கொண்டவர்களால் உருவானது போல ஒரு பக்க உண்மையை மறைத்து உங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளீர்கள்! ஆனால் உண்மை அதுவல்ல!

சீவல் தொழிலாளர் சமூகத்தைச் சார்ந்த நல்லெண்ணம் கொண்டவர்களால் முயற்சிக்கப்பட்டு, அவர்களது இணக்க அரசியல் கொள்கையின் அடிப்படையில் டாக்டர் என்.எம்.பெரேராவினது அயராத முயற்சியின் விளைவுதான் இந்தப் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்பதும், உங்கள் அரசியல் ஆசான்கள் இச்சங்க அமைவிற்கு தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தவர்கள் என்பதையும் இத் தொழிலாளர்களுக்கான கண்ணீர் விடும் நீங்கள் நிச்சயமாக குறிப்பிட்டிருக்க வேண்டும்.

அத்தோடு இணக்க அரசியல் மூலம் தான் மக்களினதும், தொழிலாளர்களினதும் சுதந்திரமான வாழ்வையும், அபிவிருத்தியையும் உறுதிப்படுத்த முடியும் என்பதற்கான பல வரலாற்று ஆதாரங்களில் ஒன்றாக பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் உள்ளது என்பது ஆசிரியரான நீங்கள் அறியாத விடயமல்ல! அத்தோடு பனை அபிவிருத்திச் சபைத் தலைவராக குறிப்பிட்ட காலம் இருந்து தன்னை அச் சமூகம் சார்ந்தவனாக இனங்காட்டி கோடிக்கணக்கான நிதிய்ய மோசடி செய்துகொண்டு வெளிநாடு சென்ற இனவாத அரசியலாளன் யார் என்பது உங்களுக்குத் தெரியாத விடயமல்ல! அத்தோடு பழைய கனவுகளுடன் மீண்டும் இங்கு வந்து தங்கள் அறிக்கைகளுக்குப் பின்னால் அவர் நிற்கின்றார் என்பது நாங்கள் அறியாத இரகசியமல்ல!

வடபகுதி மக்களின் பொருளாதாரப் பெருவளமான "கள்" எனும் பானத்தை போதைப்பொருளாகச் சித்தரித்துப் பல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கிளைகளை முடிவித்துக் கொண்டிருப்பவர்கள் யார் என்பதை மேற்படி சங்கப் பணியார்களும், சீவல் தொழிலாளர்களும் நன்கறிவர்! நீங்களும் அறிவீர்கள்! விடுதலை எனும் நாமத்துள் மறைந்திருந்து கொண்டு சொந்த வாழ்வை வளப்படுத்திக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் தான், அவரது ஊரான கட்டப்பிராயில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கிளையினை மூடி அப்பகுதி சீவல் தொழிலாளர்களின் வயிற்றிலே அடித்தவர் என்பதையும், மூடிய கிளையை திறந்து அத்தொழிலாளர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது யார் என்பதையும், சீவல் தொழிலாளர்கள் நன்கறிவார்கள். அத்தோடு வடக்கு மாகாணத்தில் கள் விற்பனை நிலையங்களை மூடுவித்துக் கொண்டிருப்பவர்கள் யார் என்பதையும் அவர்களது அரசியல் பின்னணி என்ன என்பதையும் நாம் விரைவில் வெளியிடுவோம்.

ஆனால் இவ்வாறு இணக்க அரசியல் மூலம் மக்களது வாழ்வில் கடந்த பல வருடங்களாக பல அபிவிருத்திகளைச் செய்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும், சீவல் தொழிலாளர்களினதும் எதிர்கால அபிவிருத்திக்காகவே திக்கம் வடிசாலைக்கு உதவ முன்வந்தார் என்ற யதார்த்தத்தை மக்கள் நன்கறிவார்கள்.

அழிவுக்கான அரசியலை மீண்டும் முன்னெடுப்பவர்களுக்கு புரிய வைப்பதற்காகவே இதை நான் குறிப்பிடுகிறேன்.

தற்போது வடிசாலையில் கடமையாற்றிய ஊழியர்களுக்கு மாதாந்த வேதனம், தொழிலாளர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட கள் என்பவற்றிற்கான நிதியை அமைச்சர் தமது சொந்த நிதியிலிருந்து வழங்கி வருகின்றார்.

மேலும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், வடமராட்சிக் கொத்தணி, பனை அபிவிருத்திச் சபை, பனை சார் நலனில் அக்கறை செலுத்தும் தனியார் ஒரு கட்டமைப்பொன்றை நிறுவி திக்கம்வடிசாலை நிர்வாகத்தினை அக் கட்டமைப்பிடம் கையளிப்பதே அமைச்சரின் நோக்கமாகும். இதை புரிந்துகொள்ளாத சிறிதரன் திககம் வடிசாலையை தென்பகுதிக்கு' அமைச்சர் தாரை வார்த்துக் கொடுககிறாரென கொஞ்சமும் ஆதாரமில்லாத குற்றச்சாட்டை அமைச்சர் மீது முன் வைக்கிறார் எம்.பி. சிறீதரன் அவாகளே! தென்பகுதிக்கு செல்லவிருந்த இத்திக்கம் வடிசாலையை வடபகுதிக்கு கொண்டு வந்ததே அமைச்சர் தான் என்பதை நீங்கள் அறியவேண்டும்.



இவ்வாறு ஒரு கூட்டுக்கட்டமைப்பு மூலம் திக்கம் வடிசாலையை புனர மைத்து பனைசார் சமூகங்களின் அபி விருத்திக்காக நீண்டகாலத் திட்டங்களி னூடாக செயற்படும். அமைச்சாின் செயற் பாட்டை ஊக்கப்படுததி ஆலோசனை வழங்கி மேலும் நன்மை பெற வைப்பதே பனை சாா தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த விரும்புவோரின் தார்மீகக் கடனாகும்.

ஆனால் திக்கம் வடிசாலையானது பல்வேறு வகைப்பட்ட இன்னல்களுக்கு உள்ளாகிய போது அதைத் தொடர்ந்தும் இயக்க முடியாமல் அதன் நிர்வாகம் திணறிய போது மௌனிகளாக இருந்தவர்களும் எம்.பி. சிறிதரனும் இப்போது ஏன்கண்ணீர் வடிக்கின்றார்கள் எனபது புரியாத புதிராக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உக்ரைன் பிரச்சினைக்கு தீர்வு; ஜனாதிபதியுடன் புடின் பேச்சு



உக்ரைனின் புதிய ஜனாதிபதியுடன் ரஷ்ய ஜனாதிபதி புடின் சந்தித்துப்போர் நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இரண்டாம் உலகப் போரின் போது நாஜிக்களின் ஆக்கிரமிப்பிலிருந்து பிரான்ஸ் விடுவிக்க நேச நாடுகளின் படைகள் அந்நாட்டின் நார்மண்டி பகுதியில் நடவடிக்கை மேற்கொண்டதன் 70ஆவது ஆண்டையொட்டி, நேற்று முன்தினம் அங்கு "டி-டே" விழா கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் சர்வதேச நாடுகளின் அரசியல் தலைவர்களான அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பிரிட்டன் பிரதமர் கமரூன், உக்ரைனில் புதிய ஜனாதிபதி பதவியேற்கவுள்ள போரோஷென்கோ, ரஷ்ய ஜனாதிபதி. புடின் உள்ளிட்ட பலர் பங்கேற்றுள்ளனர்.

அப்போது உக்ரைன் மீதான தலையீட்டை முடிவுக்கு கொண்டு வரும்படி ரஷ்ய ஜனாதிபதி புடினிடம், பிரிட்டன் பிரதமர் கமரூன் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்தியுள்ளனர்

இதையடுத்து புடின், உக்ரைனின் புதிய ஜனாதிபதியாய் வரவுள்ள போரோஷென்கோவை முதல் முறையாக சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

மேலும் உக்ரைனில் நடைபெற்று வரும் தாக்குதல் சம்பவங்களை நிறுத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியா– பாகிஸ்தானிடையே உறவு வலுப்படுத்தப்படவேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்து



இந்தியாவும்-பாகிஸ்தனும் இருதரப்பு உறவை வலுப்படுத்தும் நடவடிக்கைகளைத்தொடர வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. பிரதமர் நரேந்திரமோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்புடன் நடந்த பேச்சுவார்த்தையில் இருதரப்பு உறவை வலுப்படுத்த இசைவு தெரிவிக்கப்பட்டது. இரு நாட்டு வெளியுறவுத்துறை அதிகாரிகள் மட்டத்தில் விரைவில் பேச்சு நடக்கும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை துணை செய்தித்தொடர்பாளர் மேரி ஹாக், இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் இருதரப்பு உறவை மேம்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். இரு நாடுகளும் இந்த முயற்சிகளை மேற கொள்ளும் என்று நம்புவதாக் அவர் குறிப்பிட்டுள்ளார். இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் இந்த நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தீவிரவாதிகளின் தாக்குதல் நைஜீரியாவில் 500 பேர் பலி?




(மைதுகுரி)

நைஜீரியாவின் வடகிழக்கில் உள்ள 4 கிராமங்களுக்குள் புகுந்து தீவிரவாதிகள் பயங்கர தாக்குதல் நடத்தினர். இதில் 500 பேர் வரை பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. நைஜீரியாவில் மேற்கத்திய கல்வி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து போகோஹரம் இஸ்லாமிய தீவிரவாதிகள் பயங்கர தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். தேவாலயங்கள் மற்றும் கிறிஸ்தவர்களை குறி வைத்து தாக்குதல்கள் நடத்தப்படுகிறது.

இந்நிலையில், வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள 4 கிராமங்களுக்குள் நேற்று முன்தினம் திடீரென புகுந்த தீவிரவாதிகள் சரமாரியாக துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டனர். தேவாலயங்கள் மற்றும் வீடுகளுக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை சுட்டு தள்ளினர். மேலும் வீடுகளுக்கும் கடைகளுக்கும் தீ வைத்தனர். ரோமன் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றுக்கும் தீ வைக்கப்பட்டது. இந்த கிராமங்கள் முழுவதும் ஆங்காங்கே சடலங்கள் குவியல்குவியலாக கிடப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தகவல்தொடர்பு பரிமாற்றம் சரியான முறையில் இல்லாததால் உயிரிழந்தோர் எண்ணிக்கை உறுதியாக தெரியவில்லை.

இருப்பினும் 500 பேர் வரை பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.நைஜீரியாவில் கடந்த சில தினங்களுக்கு முன்பு 200இக்கும் அதிகமான பள்ளி சிறுமிகளை போகோ ஹரம் தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்து சென்றனர். அங்கு தீவிரவாதிகளின் நடமாட்டத்தை ஒடுக்கும் பணிகளில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் நைஜீரிய இராணுவம் ஈடுபட்டு வருகிறது. இதை தடுக்கும் விதமாக இந்த பயங்கர தாக்குதலில் தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# காங்கிரஸ், தி.மு.க மோடிக்கு ஆதரவு



(சென்னை)

காலில் விழும் கலாசாரத்தை கண்டித்துள்ள இந்திய பிரதமர் மோடிக்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஒரு தலைவர் அரிய காரியங்களை செய்யும்போது அவரை புகழ்வதில், மரியாதை செலுத்துவதில் தவறில்லை. ஆனால், தலைவரின் கவனத்தை ஈர்க்கவும், தனக்கு சாதகமானவற்றை செய்து கொள்ளவும் புகழ்வது தவறானது. இதில், நான் உடன்படுகிறேன். எனத் தமிழக காங்கிரஸ்த்தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.

மேலும் தமிழகத்தில், தலைமையில் இருப்பவர்களும் சரி, தலைமைக்கு வர நினைப்பவர்களும் சரி, தன் காலில் மற்றவர்கள் விழ வேண்டும் என, நினைக்கின்றனர். இந்நிலையில் மோடி கூறியுள்ளது வரவேற்கத்தக்கது. மாற்றம் வேண்டும் என மக்கள் நினைத்து மோடியை தேர்ந்தெடுத்தனர், அந்த மாற்றத்தை அவர் தருவார் என்பதற்கு இது உதாரணம் என தி.மு.க கட்சியை சேர்ந்த உறுப்பினர் கே.பி.ராமலிங்கம் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

# ஈராக்கில் அதிகரித்துவரும் தீவிரவாதிகளின் அட்டூழியம்



(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளின் அட்டூழியம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வடக்கு ஈராக்கில் அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் போர் இடம்பெற்று வருகிறது.

அங்குள்ள அன்பர் மாகாணத்தில் கடந்த 5 மாதத்தில் மட்டும் 4 இலட்சத்து 80 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர்.

நேற்று முன்தினம் நயன்வே மாகாணத்தில் பல இடங்களில் தாக்குதல்கள் நடாத்தினர். இதில மேற்கு மொசூலில் குண்டு வீசி தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் 4 பொலிஸார், 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். 16 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கிழக்கு மொசூலில் நடந்த தாக்குதலில் 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். அதே நேரத்தில் ஹமாம் அல்அலில் என்ற இடத்தில் தற்கொலைப் படை தீவிரவாதிகள் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அல்முவாபாகியா என்ற இடத்தில் 2 தற்கொலை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் 4 பேர் உயிரிழந்தனர். 45 பேர் காயம் அடைந்தனர்.

# பாலியல் வன்முறையின் களமாகும் இந்தியாவின் உத்தரப்பிரதேசம்




உ.பி. மாநிலம் பதான் மாவட்டத்தில் தலித் சகோதரிகள், பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் ஏற்படுத்திய அதிர்வலைகள் அடங்குவதற்குள் அங்கு மீண்டும் ஒரு பலாத்கார சம்பவம் நடைபெற்றுள்ளது.

உத்தரப்பிரதேசம், முசாபர் நகர் துல்ஹரா கிராமத்தில்தான் இந்த கொடூரச் சம்பவம் நடந்துள்ளது. துல்ஹாராவில் இருந்து ஷாபூர் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த இளம் பெண் ஒருவரை 5 பேர் கொண்ட கும்பல் ஒன்று கடத்திச் சென்று பலாத்காரம் செய்துள்ளது. சம்பவ இடத்தில் இருந்து மயங்கிய நிலையில் அந்தப் பெண் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து உள்ளூர்வாசிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து குற்றவாளிகளை பிடிப்பதில் மெத்தனம் காட்டியதாக சர்க்கிள் அலுவலர் உள்ளிட்ட 6 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

அடையாளம் தெரியாத 5 நபர்கள் மீதும் வழக்குப்பதிவு செயயப்பட்டு அவர்கள் தேடப்பட்டுவருவதாக பொலிஸ் கண்காணிப்பாளர் எச்.என்.சின் தெரிவிததுள்ளார்.

# சென்னை ரயில் குண்டுவெடிப்பு திட்டமிட்ட சதியே காரணம்

## அறிக்கையில் சுட்டிக்காட்டு

(சென்னை)

சென்னை மத்திய ரயில் நிலையத்தில் நடந்த, குண்டு வெடிப்புக்கு சதித்திட்டமே காரணம் என, ரயில்வே பாதுகாப்பு ஆணையர் மிட்டல் அறிக்கை அளித்துள்ளார்.

சென்னை, மத்திய ரயில் நிலையத்தில் மே, 1ஆம் திகதி அடுத்தடுத்து இரு வெடிகுண்டுகள் வெடித்தன. இதில், ஒரு பெண் பலியானார். சம்பவம் குறித்து, தமிழக, சி.பி.சி.ஐ.டி., பொலிசார் விசாரித்துவருகின்றனர்.

இந்நிலையில் இதுகுறித்து, ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது, ரயில் நிலையங்களிலோ, ரயிலிலோ அசம்பாவிதம் நடந்தால், ரயில்வே பாதுகாப்பு துறை, தனியாக விசாரணை நடத்த வேண்டும் என்பது கட்டாயம். அதன்படி, பாதுகாப்பு ஆணையர் மிட்டல், விசாரணை நடத்தினார். இதில், திட்டமிட்டே ரயில் பெட்டியில் குண்டுகளை வெடிக்க செய்துள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த அறிக்கை அடிப்படையில், தொடர் ஆய்வுகள் நடந்து வருகின்றன. இவ்வாறு, அதிகாரிகள் கூறினர்.

# இரணைமடு குடிநீர்த் திட்டம் கை நழுவிப்போகும் அபாயம்

வடக்கின் பாரிய அபிவிருத்தி திட்டமான யாழ்.- கிளிநொச்சி குடிநீர் மற்றும் சுகாதாரத்திட்டத்திற்கு நிதி வழங்கிய நிறுவனம் ஒன்று அந்த நிதியை மீளப்பெறும் நிலை உருவாகி வருகிறது.

கிளிநொச்சி விவசாயிகள் தொடச்சியாக எற்படுத்திய கால தாமதத்தினை அடுத்து இத் திட்டம் கைநழுவிச் செல்லவுள்ளதாக யாழ். கிளிநொச்சி குடிநீர் திட்டத்தின் உயரதிகாரி இத்த கவலை நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். கிளிநொச்சி குடி தண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டம் தொடர்பாக மேற்படி அதிகாரி மேலும் தெரிவிக்கையில்:

2002 இல் இருந்து ஆரம்பிக்கப்பட்ட மேற்படி திட்டத்திற்கு சுமார் 2300கோடி ரூபா நிதி கிடைக்கப்பெற்றது.

இத்திட்டத்தினைமுழுமையாக செயற்படுத்துவதற்கான ஒப்பந்தம் 2011 இல் கைச்சாத்தாகி ஆரம்ப கட்ட வேலைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு 2016 இல் முடிவுறுத்துவதாக இருந்தது.

இதற்காக இலங்கை அரசும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுமாக 2300 கோடி ரூபாவினை வழங்கி இருந்தது.

இந்நிலையில் 30 வருடங்களின் பின்னர் வடமாகாணத்தில் தமிழ் மக்களின் பெருவாக்குகளால் பெற்றுக்கொண்ட வடமாகாணசபையை தொடர்ந்து முரண்பாட்டு வாதம் தொடர் இழுபறி, காலதாமதம் குடிதண்ணீர் வழங்கப்படமாட்டாது.

விவசாயிகளுக்கு நீர் போதாது, வன்னி யாழ். முரண்பாடு என வடமாகாணசபை அமைச்சர்கள் உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் கருத்துக்கள் அடங்கிய தாமதத்தினால் நிதி வழங்கிய நிறுவனம் ஒன்று திடீரென நிதியை மீளப்பெறுகின்றது.

மேலும் யாழ். குடாநாட்டு சுகாதாரத் திட்டம் குடிதண்ணீர் திட்டம் வேறுதிட்டத்தின் கீழ் ஆராயுமாறும் கடல்நீரை நன்னீர் ஆக்கிவழங்குவது தொடர்பில் ஆலோசிக்குமாறும் வெளிநாட்டு நிறுவனம் ஆலோசனை கூறியுள்ளது.

இதேவேளை யாழ். கிளிநொச்சி குடிநீர்த் திட்டம் இடைநிறுத்தத்தினால் கிளிநொச்சி பனை, பூநகரி மற்றும் பிரதேசங்களுக்கு வழங்கப்படவிருந்த குடிநீர்த்திட்டம் இல்லாது செல்கின்றதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி குடிநீர்த் திட்டம் இறுதி நிலையை அடைந்துள்ளதாக உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார். (92)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்துக்கு புதிய பணிப்பாளர் சபை தெரிவு

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் 2014/2015 ஆம் ஆண்டுக்குரிய புதிய பணிப்பாளர் சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

புதிய சபையின் தலைவராக மானிப்பாய் இலங்கை வங்கியின் முகாமையாளர் லயன் பொன்.பாலகுமாரும் செயலாளராக வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் ஹரிகரனும் பொருளாளராக தொழிலதிபர் லயன் ந.சண்முகவேலும் முதலாவது உப தலைவராக ஹெல்திலங்கா நிறுவனத்தின் மாகாண இணைப்பாளர் லயன் ஆர்.சிவநாயகமும் இரண்டாவது உப தலைவராக சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் லயன் சி.குமாரவேலும், மூன்றாவது உப தலைவராக மக்கள் வங்கி உத்தியோகத்தர் லயன் என்.தயாரூபனும் அங்கத்துவ இணைப்பாளராக ஓய்வுநிலை பிரதேச செயலரும் வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் த.தேவராஜனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் லயன் த.சித்தார்த்தன் ஓய்வுநிலை சமூகசேவை உத்தியோகத்தர் லயன் வை.யோகானந்தராஜா, வைத்திய கலாநிதி லயன் எஸ்.பேரின்பநாயகம், சமூக சேவகர் லயன் செ.மகாதேவா லயன் சீமாட்டி ம.பூமாதேவி சட்டத்தரனி எஸ்.பி.சிவஞானம், சட்டத்தரணி பொ.சுந்தரலிங்கம், தீவகம் பிரதேச சபை முகாமை உதவியாளர் லயன் எல்.ஜீட்சி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும்

(வடமராட்சி)

அச்சுவேலி வருணன் அருள் மிகு பத்திரகாளி அம்பிகை சமேதரவீரபத்திரர் பரமேஸ்வரன் ஆலய சங்காபிசேகமும் மணவாளக்கோலத்திருவிழாவும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10.00 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெற்று மணவாளக்கோலத்திருவிழா இடம் பெறும்

பிற்பகல் எம்பெருமான் வீதி உலாவந்து பக்த அடியார்களுக்கு அருள்பாலிப்பார் (01)

# உள்நாட்டு இடப்பெயர்வு அடுத்தவாரம் அறிக்கை சமர்ப்பிக்கிறார் பெயானி

இலங்கையில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான ஆய்வை மேற்கொண்ட ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் சலோகா பெயானியின் அறிக்கை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அடுத்தவாரம், சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 26ஆவது கூட்டத்தொடர் வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில், வரும் 12ஆம் திகதி இலங்கையில் போரினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் குறித்த அறிக்கையை, ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் கலாநிதி சலோகா பெயானி சமர்ப்பிக்கவுள்ளார்.

இவர், 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம்,2014 மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் தாம் மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையிலும், 2013 டிசம்பர் 2ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரை இலங்கையில் பயணம் மேற்கொண்டு நடத்திய விசாரணைகளின் அடிப்படையிலும் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இவர் தனது இலங்கைப் பயணத்தின் போது, கொழும்பு,. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆகிய இடங்களுக்குச் சென்று உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியக் கொடுப்பனவு

(ஆனைக்கோட்டை)

அரச ஓய்வூதியம் பெறுபவர்களின் இம்மாதத்திற்குரிய ஓய்வூதியம் எதிர்வரும் 10ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஓய்வூதிய பற்றுச் சீட்டுக்கள் தபால் மூலம் ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. (104)

# மார்பக புற்றுநோயால் பெருமளவு பெண்கள் பாதிப்பு

(கொழும்பு)

புற்றுநோய் தாக்கத்திற்குள்ளான பெரும்பாலான பெண்கள் மார்பகப் புற்றுநோய்க்கு சிகிச்சை பெறவே வருகை தருவதாக மகரகம புற்றுநோய் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் வசந்த திஸாநாயக்க இது தொடர்பாக தெரிவிக்கையில்,

கடந்த வருடத்தில் மட்டும் 1250 புற்றுநோயாளர்கள்கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் எனினும் மார்பகப் புற்றுநோயால் பீடிக்கப்படும் ஆண்களின் அளவு ஒரு வீதமாகவே உள்ளது. கடந்த வருடத்தில 600 நுரையீரல் புற்றுநோயாளர்கள் பீடிக்கப்பட்டுள்ளனர் பெரும்பாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பணிபுரியும் பணியாளர்களே நுரையீரல் புற்றுநோயால் அதிகளவில் பாதிக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சட்டவிரோத மது; தடுக்க விழிப்புணர்வு

(கரணவாய்)

சட்டவிரோத மதுப்பாவனைஅற்ற கிராம நிகழ்வு பருத்தித்துறை மது வரித்திணைக்களத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கரவெட்டி, பருத்தித்துறை, மணல்காடு ஆகிய மூன்று பிரதேச செயலகபிரிவுகளிருள்ள 22 கிராம சேவகர் பிரிவுகளில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத கசிப்பு விற்பனை, சட்டவிரோதமான முறையில் சாரயம் விற்பனை போன்ற செயற்பாடுகளை தடுக்கும் நோக்கில் மதுவரித் திணைக்களத்தினால் விழிப்புணர்வு நிகழ்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை மது வரித்திணைக்களத்தினர் கோரியுள்ளனர்.

(18)

### 12 இலங்கை...

பகுதியில் வைத்து இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மீனவர்களிடமீருந்து 750 கிலோ கிராம் எடையுடைய மீன்களும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் சென்னை காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

### சந்தேகத்தின்...

சிறிது தூரம் துரத்திச் சென்று நபரிடம் விசாரணை மேற்கொண்ட போது, அல்லைப்பிட்டி பகுதியில் காசு வாங்க வந்ததாக கூறியதுடன், தடுமாற்றத்துடன், காணப்பட்டுள்ளார்.

அதனால், குறித்த நபரை விஷேட அதிரடிபடைப் பிரிவினர் கைதுசெய்து, யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸ் விசாரணையின் பின்னர் இன்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாக யாழ். பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

### உண்மையைக்...

என்பதை கவனிக்கிறேன்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணைக்கு இணங்க, பல நிபுணர்கள் மற்றும் சிறப்பு நடைமுறை ஆணை பெற்றவர்களின் உதவியுடன் மேலதிக பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான விரிவான விசாரணைகளை நடத்துவதற்கென, எனது பணியகம் அதிகாரிகள் குழுவொன்றை நியமித்துள்ளது.

ஒரு நம்பகமான உண்மையை கண்டறியும் செயல் முறையுடன் ஒத்துழைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும்படி இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கிறேன் என்று கூறப்பட்டுள்ளது.

### 13ஆவது...

என்பதால் தான், முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க 1995இல் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்திருந்தார், அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு, நிபுணர் குழு என்பனவெல்லாம் நியமிக்கப்பட்டிருந்தன.

எமது 2011 மார்ச் யோசனையில் எமது நிலைப்பாட்டை விபரித்திருந்தோம்.

ஆனால் அரசாங்கம் அதற்குப் பதிலளிக்கவில்லை. அரசாங்கம் பேச்சுக்களில் இருந்து விலகியது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தீர்வுத்திட்டமொன்றைத் தயாரித்து அதனை அரசிடம் சமர்ப்பிப்பதற்கு மக்கள் தமது கருத்துக்களை சமர்பபிக்கவேண்டுமென கடந்த செவ்வாய்க்கிழமை நீர்வேலியிலுள்ள கூட்டமைப்பின் இளை அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.பி. கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### ஐ.நா. மனித...

என்பதுடன், முன்னாள் ஐ.நா அமைதி காப்பாளருமாவார்.

இவர் ஐ.நாவுக்கும், அமெரிக்காவுக்குமான ஜோர்தான் தூதுவராகப் பணியாற்றி வருகிறார்.

எனினும், ஐ.நா தூதுவர் பதவியை விட்டு விலகுவதாக கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்திருந்தார்.

ஐ.நா. பாதுகாப்புச்சபையில் ஜோர்தானின் தூதுவராகவும் இவர் பணியாற்றி வருகிறார்.

அனைத்துலக நீதி மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பான விவகாரங்களில் இவர் வலுவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதால், பான் கீ மூன் இவரை இந்தப் பதவிக்குத் தெரிவு செய்துள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலர் இவரைத் தெரிவு செய்தாலும், பொதுச் சபையில் அதற்கான அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

முன்னதாக, இந்தப் பதவிக்கு மர்சுகி தருஸ்மன், ஜோஸ் ராமோஸ் ஹோர்டா ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று செய்திகள் வெளியாகின.

எனினும், மேற்காசியாவைச் சேர்ந்த இளவரசர் சையிட் அல் ஹுசேனை பான் கீ மூன் தெரிவு செய்துள்ளார்.

சிரியா உள்ளிட்ட மேற்காசியா மற்றும் வடஆபிரிக்க நாடுகளில் உள்ள மனித உரிமை நிலைமைகளை முன்னேற்றுவதைக் கருத்தில் கொண்டு ஐ.நா. பொதுச்செயலர் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சமையலறையில்...

வீட்டின் சமயலறையின் புகைக்கூண்டின் கீழ் பதுங்குகுழி ஒன்று இருப்பதாக அப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமின் அதிகாரிக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலினை பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தெரிவித்த இராணுவத்தினர் பொலிஸாருடன் இணைந்து குறித்த வீட்டிற்குச் சென்று தேடுதல் நடத்தியுள்ளனர். இத்தேடுதலின்போது தகவல் கிடைத்ததைப் போன்று அச்சீட்டின் சமயலறையின் புகைக்கூட்டின் கீழ் இருந்து பதுங்குகுழிகண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட பதுங்குகுழியானது 8 அடி ஆழமும் 6அடி அகலமும் உள்ளது. குறித்த வீட்டின் உரிமையாளர் கடந்த யுத்த காலப்பகுதியில் வீட்டினைவிட்டு வெளியேறியிருந்தார். இந்நிலையில் இவ்வீட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் நிலைகொண்டிருந்தாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட பதுங்குகுழி விடதலைப் புலிகளால் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இதன் பின்னர் குறித்த வீட்டினை விட்டு புலிகள் வெளியேறும் போது அதனை மூடிவிட்டு சென்றுள்ளதாகவும், அதனால் வீட்டு உரிமையாளருக்கு பதுங்குகுழி இருந்தது தெரியாமல் போயுள்ளது. எனவேதான் அவ்வீட்டினை அவர் வாடகைக்கு வேறு குடும்பத்தினை குடியேறியுள்ளார். என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொலிஸார் மேலும் தெரிவீத்துள்ளனர். (பா, 25)

# மோடியின் முதல் இலங்கை விஜயம் தேன்கூட்டை குலைப்பதற்கு சமம்

## என்கிறது இந்திய இணையத்தளம்

இந்தியப் பிரதமராக பதவி யேற்றுள்ள நரேந்திரமோடி தற்போதைய சூழ்நிலையில் தனது முதலாவது வெளிநாட்டுப்பயணமாக இலங்கைக்குச் சென்றால் அது தேன் கூட்டிற்கு கல் எறிவதற்கு சமமானதென இந்திய இணையத்தளமான தபெஸ்ட் போஸ்ட் தெரிவித்துள்ளது.

பிரதமராகப் பதவி ஏற்றதன் பின்னர் நரேந்திர மோடி தனது முதல் வெளிநாட்டு பயணத்தை இலங்கைக்கு மேற்கொள்வார் என்று முன்னதாக தகவல்கள் வெளியாகிஇருந்தன.

எனினும் அவர் இந்த மாத இறுதியளவில் பூட்டானுக்கான விஜயத்தை மேற்கொள்வார் என்று இந்தியாவின் என்.டீ.டி.வி இணையத்தளம் தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ள இந்தியாவின் தபெஸ்ட் போஸ்ட் இணையத்தளம், தற்போதைய சூழ்நிலையில் நரேந்திரமோடி இலங்கைக்கு விஜயம் செய்வாராக இருந்தால், தமிழ் நாட்டில் பாரிய எதிர்ப்பலைகளை ஏற்படுத்தும்.

இந்த நிலையிலேயே அவர் இலங்கை விஜயத்தை தவிர்த்திருப்பதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீன்களுக்கு நிர்ணய விலை ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

மீன் வகைகளுக்கு நிர்ணய விலையை வழங்கும் முறைமையொன்றை தயாரிக்குமாறு கடற்றொழில் அமைச்சர் ராஜித்த சேனாரத்னவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ பணிப்புரை விடுத்துள்ளார்.

மீனவர் சமூகம், கடற்றொழில் அமைச்சு மற்றும் திறைசேரியுடன் கலந்துரையாடி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

மீன்களுக்கான நிர்ணய விலையை அறிமுகப்படுத்துவதன் மூலம் மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது கருத்து வெளியிட்ட கடற்றொழில் அமைச்சர் ராஜித்த சேனாரத்ன, ஒரு சில மீனவர்கள், மீன்பிடிப்பதற்காக டைனமைட்டை கடலில் வெடிக்கச் செய்வதாக தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை உடனடியாக பொலிஸ்மாஅதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்த ஜனாதிபதி, மீன்பிடிப்பதற்காக டைனமைட் பயன்படுத்தும் மீனவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

# விசாரணைக்குழு இணைப்பாளரை நியமித்தார் நவிப்பிள்ளை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற தாக்க கூறப்படும் மனிதஉரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கான ஐ.நாவின் சிறப்பு விசாரணைக் குழுவின் இணைப்பாளராக சன்ட்ரா பெய்டாஸ் என்ற மனித உரிமை நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இந்த நியமனம் குறித்து நேற்று முன்தினமிரவு இலங்கைக்கு அறிவித்துள்ளார்.

ஜெனிவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவுக்கு இவரை ஐ.நா. விரைவில் அறிமுகம் செய்து வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைக் குழுவைத் தெரிவு செய்யும் பணிகள் நடந்து வருவதாகவும் விரைவில் அது உறுதிப்படுத்தப்படும் என்றும் ஐ.நா. மனித உரிமை



ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

விசாரணைகள், இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விசாரணைகள் பத்து மாதங்களில் நிறைவடையும் என்றும் ஐ.நா. தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வேகத் தடுப்பாணையை அவதானிக்காததால் விபத்து

## சரசாலைவாசி படுகாயம்

யாழ்.கைதடிப் பாலத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டினை இழந்து, நேற்று முன்தினம் மாலை விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில், சாவகச்சேரி சரசாலை தெற்கைச் சேர்ந்த கார்த்திகேசு கோபாலகிருஸ்ணன் (வயது 52) என்பவரே படுகாயமடைந்தவராவார்

யாழிலிருந்து சாவகச்சேரி நோக்கி மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற இவர், கைதடிப் பாலத்தருகில் போடப்பட்டிருந்த வேகத்தடுப்பாணையை அவதானிக்காமல் வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்திய போது, தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

# பல்கலை மாணவர் அடிதடி; ஒருவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட இரண்டாம் ஆண்டு மாணவன் மீது இறுதி ஆண்டு மாணவன் மேற்கொண்ட தாக்குதலில் பிரஸ்தாப மாணவன் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் ராஜ்காந்தன், புஸ்பகாந்த (வயது23) என்ற மாணவனே காயமடைந்தவராவார். (25

# ஊடகவியலாளர் செயலமர்வு ஆர்ப்பாட்டத்தால் நிறுத்தம்



(கொழும்பு)

நீர்கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்பட்டு கொண்டிருக்கின்ற செயலமர்வுக்கு எதிராக குறித்த ஹோட்டலுக்கு வெளியே ஒரு குழுவினர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியதை அடுத்து அந்தச் செயலமர்வு இடைநிறுத்தப்பட்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் குறித்து புலனாய்வு செய்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மற்றும் அது தொடர்பில் ஊடகங்களில் அறிக்கையிடல் என்பவை குறித்து இந்தச் செயலமர்வு நடைபெற்றுள்ளது.

ட்ரான்பேரன்சி இன்டர்நசனல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த செயலமர்வு, நீர்கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன் தினம் முதல் நடைபெற்றுள்ளது

இச்செயலமர்வில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பங்கேற்றுள்ளனர். தேசிய நல்லிணக்கத்துக்கான அமைப்பினரே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில், 1000 இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டதுடன் ஊடகவியலாளர்கள் இருந்த ஹோட்டலை முற்றுகையிட முயற்சித்தாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவிடம் பணத்தைப் பெற்றுகொண்டு இலங்கைக்கு அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுவதாக ஆர்பாட்டக்காரர்கள் கோஷமிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களை ஹோட்டலுக்குள் நுழையவிடாமல் பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

ஊடகவியலாளர்களுக்கான இதேமாதிரியான செயலமர்வு ஒன்று ஏற்கெனவே பொலநறுவையில் கடந்த மாதம் நடத்தப்பட்டபோது அதனை பொலிஸார தடுத்து நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# வான் ரயர் வெடித்து பத்துப்பேர் படுகாயம்

## விளையாட்டு நிகழ்விற்கு சென்றவேளை அனர்த்தம்

(கரணவாய்)

நாகர்கோயில் சொலமன் அம்மன் கோயிலடியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆழியவளை கொடுக்குளம் பகுதியிலிருந்து கற்கோவளம் நோக்கிச் சென்ற வானில் ரயர் வெடித்ததினால் குடைசாய்ந்து விபத்து இடம்பெற்றுள்ளது. கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக விளையாட்டு நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற ஆழியவளை கொடுக்குளம் சக்திவேல் விளையாட்டுக்கழகத்தைச்சேர்ந்த கதிர்காமநாதன் நடராஜா, கரிகரன், அருமைத்துரை வியசுந்தர், குகேந்திரன், கோபி, குணசேகரம், நிலோசன், திருநாகசெல்வம். லுகினி, தவநேசன் ஆகியோரே இவ் விபத்தில் காயமடைந்துள்ளனர்.

இதில் 6பேர் கை, கால்கள் முறிவடைந்த நிலையிலும், 7பேர் சிறுகாயங்களுடனும் நேற்று மாலை மந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (18)

# பதிவு செய்யாத கைபேசிகளின் இணைப்புக்கள் துண்டிப்பு

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசி இணைப்புக்கள் பதிவு செய்வதற்கு போதுமானளவு கால அவகாசம் வழங்கப்படும் என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷபெல்பிட்ட கூறியுள்ளார்.

குறித்த காலப்பகுதிக்குள் பதிவு செய்யப்படாத கையடக்க தொலைபேசி இணைப்புக்கள் உரிய தொலைபேசி நிறுவனங்களால் துண்டிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது 20 மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் கையடக்கதொலைபேசி இணைப்புக்கள் பயன்படுத்துகின்றனர்.

இதில் ஐந்து வீதமானவர்கள் தமது பெயர்களில் சிம் அட்டைகளை பதிவு செய்யாதவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

இதுவரை பதிவு செய்யப்படாத கையடக்கத் தொலைபேசி இணைப்புக்களை உடனடியாக பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மேலும் கூறியுள்ளது.


## விளம்பரம் சேகரிப்பாளர் தேவை

விளம்பரம் சேகரிப்பதில் முன் அனுபவமும் துடிப்புடன் பணியாற்றக்கூடிய செயற்றிறன் மிக்க இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

தகமையுடையோர் அலுவலக நேரத்தில் சுய விபரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு**
**இல.373, பிரதான வீதி**
**யாழ்ப்பாணம்**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.